பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி 24 ஞாயிற்றுக்கிழமை (10-11-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:348

# வடக்கு-கிழக்கு அபிவிருத்திப் பணிக்கென இருவகையான திட்ட வரைபுகள் தயாரிப்பு

## அவையே ஒஸ்லோ மாநாட்டிலும் சமர்ப்பிக்கப்படும்

யாழ்ப்பாணம்,நவ.10

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் எதிர்வரும் 25ஆம் திகதி இடம்பெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி தொடர்பாக இருவகையான திட்டங்கள் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றன.

தேசிய திட்டமிடல் அமைச்சின் ஆலோசனையின் பேரில் வடக்கு - கிழக்கு மாகாண உயர் அரச அதிகாரிகள் இத்திட்டங்களைத் தயாரித்து வருகின்றனர்.

வடக்கு - கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டிய அவசரப்பணிகளை உள்ளடக்கிய திட்டவரைபு ஒன்றையும் -

அடுத்த மூன்று வருடங்களுக்குள் மேற்கொள்ளப்படவேண்டிய நீண்டகாலத்திட்ட வரைபு ஒன்றையும் தயாரிக்கும் பணியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

எட்டு மாவட்டங்களின் உயர் அதிகாரிகளுடனும் கலந்துரையாடித் திட்டங்களை இனங்கண்டு இந்த வரைபுகளைத் தயாரிக்கும் நடவடிக்கையில் வடக்கு - கிழக்கு மாகாண சபை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

இந்தத் திட்ட வரைபுகள் திட்ட அமுலாக்கல் அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்படும். பின்னர் அத்திட்ட வரைபு விடுதலைப் புலிகளின் பரிசீலனைக்கும் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-3)

# பாதுகாப்பு உப குழுவின் முதலாவது கூட்டம் இன்று

## அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக ஆராயப்படும்

கிளிநொச்சி,நவம்பர்10

**தாய்லாந்தில் இடம்பெற்ற 2ஆம் கட்டப் பேச்சுக்களின்போது படை அதிகாரிகள் மற்றும் விடுதலைப் புலிகளின் தளபதிகள் அங்கம் வகிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு உப குழுவின் முதலாவது கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு ஓமந்தை சூனியப்பிரதேசத்தில் இடம்பெறவுள்ளது.**

**அதி உயர் பாதுகாப்பு வலயங்கள், மக்கள் மீள்குடியமர்வு ஆகிய விடயங்கள் குறித்த முக்கிய முடிவுகள் இந்தக் கூட்டத்தில் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.**

தாய்லாந்தில் கடந்த வாரம் இடம்பெற்ற இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் போது பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆராய உபகுழு ஒன்றை நியமிப்பதென்று முடிவாகியிருந்தது.

படைத்தரப்பு - விடுதலைப் புலிகள் தரப்பு ஆகியவற்றைச் சேர்ந்த தலா 9 உறுப்பினர்களையும் நோர்வேத் தரப்பைச் சேர்ந்த ஒருவரையும் அடக்கிய 19 பேரைக் கொண்டதாக இந்த உபகுழு இயங்கவிருக்கின்றது.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தலைமையிலான அரச குழுவில் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட, மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, பிரிகேடியர் பாலசூரிய, கடற்படை அதிகாரி ரியர் அட்மிரல் வீரசேகர, கல்முனை பொலீஸ் அதிகாரி மஜீத், விமானப் படைக் கப்டன் ஆகியோர் இடம்பெறு

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி நிராகரிப்பு!

ஐ.தே.கட்சியைச் சேர்ந்த ஏழு பேரை புதிதாக அமைச்சர்களாக நியமிக்கவேண்டும் என்று பிரதமர் ரணில் அண்மையில் செய்திருந்த சிபாரிசை ஜனாதிபதி நிராகரித்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கபினட் அந்தஸ்தில்லாத அமைச்சர்கள் ஐவரையும் கபினட் அந்தஸ்துள்ள அமைச்சர்கள் இருவரையும் புதிதாக நியமிக்கும்படி பிரதமர் ஜனாதிபதிக்கு சிபாரிசு செய்திருந்தார். ஆனால், அவரது சிபாரிசை நிராகரித்துள்ள ஜனாதிபதி புதிய அமைச்சராக எவரையும் நியமிக்கமுடியாது என்று தெரிவித்துவிட்டதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ம)

## ஜனாதிபதி பதவியேற்று 8 வருடங்கள் பூர்த்தி

கொழும்பு,நவ.10

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகப் பதவியேற்று எதிர்வரும் 12ஆம் திகதியுடன் எட்டு வருடங்கள் பூர்த்தியடைகின்றன. இதனையொட்டி அன்றையதினம் நாட்டு மக்களுக்கு அவர் உரையாற்றுவார். அது தவிர வேறு பல நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு ஜனாதிபதி செயலகத்தில் பிரித்

(16ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு புனரமைப்புக்கு உடன் உதவ அமெரிக்கா தயார்

கொழும்பு,நவ.10

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதிகளைப் புனரமைப்பதற்கு வேண்டிய உதவிகளை அமெரிக்கா உடனடியாக வழங்கும் என்று அந்த நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ரிச்சட் ஆர்மி டேஜ் தெரிவித்துள்ளார்.

பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சரும் அரச தரப்புப் பேச்சுக் குழுவின் முக்கிய உறுப்பினருமான அமைச்சர் மிலிந்த மொறகொடவைச் சந்தித்துப் பேசியபோதே அவர் மேற்

(16ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவை 16ஆம் திகதி ஆரம்பம்

கொழும்பு,நவ.10

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பமாகும். முதல்தொகுதி பயணிகள் கொழும்பிலிருந்து 'சிற்றி ஒவ் றங்கோ' [illegible]ல் மூலம் இந்தியாவின் தூத்துக்குடி நகரத்துக்கு செல்வர்.

இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்றில் இந்திய - இலங்கை போக்குவரத்து அமைச்சர்கள் அடுத்தவாரம் கையெழுத்திடவுள்ளனர்.

இந்த கப்பல் சேவைக்கு பெரும் கிராக்கி இருப்பதாக கப்பல் நிறுவனம் தெரிவி[illegible]ளது. (ம)

## சமாதான முயற்சிகள் குறித்து இந்தியாவுக்கு நோர்வே விளக்கம்

### அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் புதுடில்லியில்

புதுடில்லி,நவ.10

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்றுவரும் சமாதானப் பேச்சுக்களின் முன்னேற்றம் குறித்து நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் இந்தியத் தலைவர்களுக்கு விளக்கிக் கூறியுள்ளார்.

சமாதான முயற்சிகளின் மூன்றாம் தரப்பாகச் செயற்பட்டுவரும் நோர்வே அதில் ஏற்படும் முன்னேற்றங்கள் குறித்து இந்தியாவுக்கு அவ்வப்போது எடுத்துக்கூறி வந்துள்ளது.

அந்த வகையில் அண்மையில் தாய்லாந்தில் நடைபெற்ற இரண்டாம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## மாற்றுக் கட்சி உறுப்பினர் தாக்குதலில் உயிரிழப்பு!

### புலிகள் வட்டாரம் தகவல்

யாழ்ப்பாணம்,நவ.10

மாற்றுக்கட்சி ஒன்றில் இருந்து விலகியதாகக் கூறப்படும் நபர் ஒருவருக்கும் அந்தக் கட்சியின் வேறு சில உறுப்பினர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தின் எதிரொலியாக தாக்குதலுக்கு இலக்கான அந்த நபர் உயிரிழந்துள்ளதாக தமக்குத் தகவல் கிடைத்துள்ளது என்று விடுதலைப் புலிகளின் யாழ். அரசியல் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

அனலைதீவில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கூறப்பட்டது. (ம-3)

> மீட்புநிதி பெறுவோரின் பெயர்ப்பட்டியல் 09 ஆம், 11ஆம் பக்கங்களில்.
>
> மீட்பு நிதி சான்றிதழை தொலைத்தவர்களுக்கான அறிவுறுத்தல்கள் 15ஆம் பக்கத்தில்.

## இராணுவத்தினர் 15 பேர் மொனராகலையில் கைது!

### குற்றச் செயல்களுடன் தொடர்பு

கொழும்பு,நவ.10

மொனராகலை பகுதியில் நேற்று முன்தினம் இரவு நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதலின்போது குற்றவாளிகள் என்ற சந்தேகத்தின்பேரில் இராணுவத்தினர் 15பேர் உட்பட 20பேரைப் பொலீஸார் கைதுசெய்துள்ளனர். இவர்களிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் இடம்பெற்ற பல குற்றச்செயல்களுடன் இவர்களுக்கு தொடர்பு இருப்பதாக மொனராகலைப் பொலீஸார் தெரிவித்தனர்.

ஏற்கனவே இருநாள்களுக்கு முன்னர் இப்பகுதியில் இடம்பெற்ற மிகப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## அனலைதீவில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் நேற்று மரணம்

### அக்கட்சி கூறுகிறது

யாழ்ப்பாணம்,நவ.10

அனலைதீவில் தமது கட்சி உறுப்பினரான புஸ்பராசா நேற்று மரணமாகியுள்ளார் என கடற்படையினர் தமக்குத் தகவல் தந்துள்ளனர் என்று ஈ.பி.டி.பி. யாழ். அலுவலகத்தினர் தெரிவித்தனர்.

இவரின் மரணத்துக்கான காரணம் தெரியவரவில்லை என்றும்-

ஊர்காவற்றுறைப் பொலீஸில் ஒப்படைக்கப்பட்ட அவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரிக்கு நேற்றிரவு எடுத்துவரப்பட்டது என்றும் - அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ம-3)

### ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலையில் நடந்த

## கைகலப்பில் காயமடைந்த மாணவன் நேற்று மரணம்!

கொழும்பு,நவ.10

ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் 'ராகிங்' தொடர்பாக மாணவர்களுக்கிடையில் கடந்த வியாழனன்று ஏற்பட்ட கைகலப்பில் படுகாயமடைந்த முகாமைத்துவட 3ஆம் வருட மாணவன் நேற்றுக்காலை மருத்துவமனையில் உயிரிழந்தார்; மற்றுமொருவர் ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

பல்கலைக்கழகத்தில் 'ராகிங்' நடவடிக்கைகள் உச்சக்கட்டத்தை அடைந்ததை அடுத்து அது குறித்து ஆராய்வதற்காக கூட்டப்பட்ட கூட்டத்

(16ஆம் பக்கம் பார்க்க)

## சரணடைந்த சிப்பாய் இராணுவத்தினரிடம் ஒப்படைப்பு

வவுனியா,நவ.10

இராணுவத்தில் இருந்து விலகி விடுதலைப் புலிகளுடன் இணைய விரும்பிய சிப்பாய் மீண்டும் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டார்.

வவுனதீவு இராணுவமுகாமில் பணிபுரிந்து வந்த முதியான் சலாகே இந்திக திசநாயக்க என்ற சிப்பாய், சக இராணுவ சிப்பாய்களின் கொடுமை தாங்காமல் இராணுவத்தி

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# அடுத்த மாதம் முதல் நிவாரணத்துக்கு மா!

## வழங்க புனர்வாழ்வு அமைச்சு அனுமதி

யாழ்ப்பாணம்,நவ.10

குடாநாட்டில் நிவாரணம் பெறுப வர்களுக்கு அடுத்த மாதம்முதல் நிவாரணப் பொருளாக மாவும் வழங் கப்படவிருக்கின்றது.

நிவாரணத்துக்கு தற்சமயம் அரிசி, சீனி, பருப்பு, பால் மா என்ப னவே வழங்கப்பட்டு வருகின்றன.

மக்களின் நன்மை கருதி அவர்க ளுக்கு நிவாரணமாக மாவையும் வழங்கவேண்டும் என்று யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் புனர்வாழ்வு, புனரமைப்பு, அகதிகள் மீள்குடிய மர்வு அமைச்சைக் கோரியிருந்தார்.

இதற்கான அனுமதியை அமைச்சு தற்போது வழங்கியுள்ளது என்றும்-

அடுத்தமாதம் நிவாரணத்துடன் மாவும் வழங்கப்படவிருக்கின்றது என்றும் - அரச அதிபர் 'உதயனு'க் குத் தெரிவித்தார்.

அதேசமயம் -

நிவாரணம் வழங்குவதற்கான அரிசியை, எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து எடுத்துவர அனுமதி வழங்கப் பட்டுள்ளது என்றும் அரச அதிபர் மேலும் கூறினார். (ம-3)

# சைக்கிள் திருடிய நபர் புலிகளிடம் சிக்கினார்!

## பொலீஸாரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,நவ.10

கோப்பாய் பகுதியில் களவாடிய சைக்கிளுடன் விடுதலைப் புலிகளால் பிடிக்கப்பட்ட நபர் ஒருவர், கோப்பாய பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளார்.

நீர்வேலி தெற்குப் பகுதியில் கடந்த வெள்ளியன்று இரவு மின்சாரம் துண்டிக்கப்பட்ட வேளையில் திருடர் கோஷ்டி ஒன்று மூன்று வீடுகளில் தமது கைவரிசையைக் காட்டியமை தெரிந்ததே.

அதன் பின்னர் கோப்பாய் பகுதி யில் இந்தக் கோஷ்டி திருட்டு முயற்சி யில் ஈடுபட்ட வேளை மக்கள் கூக் குரல் இடவே நீர்வேலியில் திருடிய சைக்கிளைக் கைவிட்டு அந்தக் கோஷ்டி தப்பிவிட்டது.

இந்த விடயம் விடுதலைப் புலிக ளின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

இது தொடர்பாக விசாரணை நடத் திய விடுதலைப் புலிகள் திருடிய சைக்கிளைக் கைவிட்டு ஓடிய நபரைப் பிடித்துக் கோப்பாய் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

பிரஸ்தாப நபரான செபஸ்தியன் செபநாயகம் என்பவரைப் பொலீஸார் யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன் நேற்று ஆஜர் செய்தனர்.

அந்த நபரை எதிர்வரும் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக் கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (ம-3-17)

# மிருகக் காட்சிச்சாலைகளை தனியாரும் நடத்த அனுமதி

கொழும்பு,நவ.10

நாட்டில் தனியார் துறையினரும் மிருகக் காட்சிச்சாலைகளை நடத்த அனுமதிப்பது என்று அமைச்சரவை முடிவு செய்திருக்கிறது.

அம்பேபுஸ்ஸ, ஹன்வெல்ல உட் பட நாட்டின் பல பகுதிகளில் மிரு கக்காட்சிச் சாலைகளை ஆரம்பித்து இயக்குவதற்கு தனியார் பலர் விண் ணப்பித்திருக்கின்றனர்.

மிருகக் காட்சிச் சாலைகளை திறப்பதன் மூலம் வெளிநாட்டு உல் லாசப் பயணிகளை கவரலாம் என்ப தைக் கருத்திற்கொண்டே அமைச்ச ரவை இந்த முடிவை எடுத்திருக்கி றது. (ஐ)



தலைவர் பிரபாவுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவித்து வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் எடுக்கப்பட்ட படம் இது.

## கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.10

வடக்கு-கிழக்கு மாகாண கூட்டு றவு வேலையாள் ஆணைக்குழுவின் செயலாளர் கலந்துகொள்ளும் கூட் டம் ஒன்று நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள கூட்டுறவுக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்திலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், தெங்கு பனம் பொருள் அபிவிருத்தி கூட்டுறவுச் சங் கங்கள் மற்றும் பணியாளர்களை அமர்த்தியுள்ள சங்கங்கள் ஆகியவற் றின் தலைவர், பொது முகாமையா ளர் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாண கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கேட்டுள்ளார். (ம-ரி)

## தரம் 9 பரீட்சை நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.10

தரம் 9இற்கான மாகாண மட்ட பொதுப் பரீட்சை நாளை திங்கட் கிழமைமுதல் எதிர்வரும் 15ஆம் திகதிவரை சகல பாடசாலைகளிலும் இடம்பெறவிருப்பதாக யாழ்.மேலதிக மாகாணக் கல்விப்பணிமனை அறி வித்துள்ளது.

இந்தப் பரீட்சைக்கான வினாப் பத்திரங்கள் சகல வலயங்களிலும் கையளிக்கப்பட்டுள்ளன என்றும் -

பாடசாலை அதிபர்கள் சம்பந்தப் பட்ட வலயங்களுடன் தொடர்புகொண்டு அறிவுறுத்தலின்படி பரீட்சையை நடத்தும்படியும் - கல்விப் பணிமனை கேட்டுள்ளது. (எ-3-88)

## 'ஐஸ்' வசதியின்றி வடமராட்சி கிழக்கு மீனவர் சிரமம்

வடமராட்சி கிழக்கு,நவ.10

வடமராட்சி கிழக்கு பிரதேசத் தில் ஐஸ் தொழிற்சாலை இல்லாமை யினால் அப்பிரதேசத்திலுள்ள கடற் றொழிலாளர்கள் பிடிக்கும் மீன்களைப் பாதுகாத்து வெளியிடங்களுக்கு அனுப்புவதில் பெரும் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர்.

அப்பகுதியிலுள்ள கடற்றொழி லாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஐஸ் தொழிற்சாலை ஒன்றினை அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என் றும் - கடற்றொழிலாளர் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-182)

## கணனிக் கருத்தரங்கு

தென்மராட்சி,நவ.10

தமிழ்த் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு நிறுவனத்தின் இல வச கணனிக் கருத்தரங்குகள் இன் றும் நாளையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

கணனித் தொழில்நுட்ப பயிற்சி பெறும் மாணவர்கள் இக்கருத்தரங்கு களில் கலந்து கொள்ளுமாறு அறி விக்கப்பட்டுள்ளது. (ம-117)

## விஞ்ஞான சங்கத்தின் பேச்சுப் போட்டி முடிவுகள் வெளியாகின!

யாழ்ப்பாணம்,நவ.10

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பாட சாலை மாணவர்களுக்கிடையில், யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியில் நேற்று நடத்திய பேச்சுப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:-

முதலாம் இடம்- செல்வி தனுஜா தபேந்திரன் (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), இரண்டாம் இடம்- செல்வி சாலினி சின்னத்தம்பி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), மூன் றாம் இடம் - செல்வன் செல்லத்துரை பிரசாத் (யாழ். இந்துக் கல்லூரி)

இவர்களுக்குத் தலா ஆயிரம், எழுநூற்று ஐம்பது, ஐந்நூறு பணப் பரிசும் வழங்கப்படவுள்ளது.

திறமைச் சான்றிதழ்களை செல்வி அஜந்தாகினி சற்குணரட்ணம் (வேம் படி மகளிர் கல்லூரி), செல்வி ஜெய தர்சினி பத்மசோதிநாதன்(யாழ்ரன் கல்லூரி) ஆகியோர் பெற்றனர்.(ம-ரி)

## கோப்பாயில் மீளக்குடியமர்ந்தோருக்கு உதவிப் பொருள்கள்

கோப்பாய்,நவ.10

வன்னிப் பிரதேசத்திலிருந்து வந்து கோப்பாய் பிரதேச கிராம அலுவலர் பிரிவுகளில் மீளக்குடியமர்ந்தோருக் கான ஒருதொகுதி உணவு அல்லாத உதவிப் பொருள்கள் நாளை திங் கட்கிழமை காலை 10 மணியளவில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் வைத்து வழங்கப்படவுள்ளன.

ஜே/257, ஜே/258, ஜே/259, ஜே/260, ஜே/261, ஜே/262 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் கடந்த ஓகஸ்ட் மாதத்திற்கு முன்னர் குடி யமர்ந்தோருக்கே இவ்வுதவி வழங்கப் படவுள்ளது. (ம-72)

## கருத்தரங்கு

செடெக் நிறுவனம், தேசிய உயிர்ப் பூட்டற்குழு ஆகியன இணைந்து செடெக் ஊக்குவிப்பாளர்கள், இணைப் பாளர்களுக்கான வதிவிடக் கருத்தரங்கு ஒன்றினை இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் நான்கு தினங்களுக்கு பண்டத் தரிப்பில் உள்ள தியான இல்லத்தில் நடத்தவுள்ளன.

இக்கருத்தரங்கில் எதிர்காலச் செயற்பாடுகள், திட்ட ஆய்வுகள், நடைமுறைப்படுத்தவுள்ள செயற்பாடு கள் என்பன தொடர்பாக ஆராயப்பட வுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-31)

## பயிர்ச்செய்கை தொடர்பான பயிற்சி வகுப்பு

கோப்பாய் பிரதேச செயலக கிராம அலுவலர்களுக்கான பயிர்ச் செய்கை தொடர்பான பயிற்சி வகுப்பு எதிர்வரும் புதன்கிழமை காலை10 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள் ளது. இந்தப் பயிற்சிவகுப்பு புள்ளி விவரத்திணைக்கள உத்தியோகத்த ரால் நடத்தப்படும். (ம-72)

# 8,000 ஓட்டங்களை தாண்டினார் கங்குலி!



புதுடில்லி,நவ.10

இந்திய கிரிக்கெட் அணித் தலை வா சௌரவ் கங்குலி சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் 8ஆயி ரம் ஓட்டங்களைத் தாண்டியுள்ளார்.

நேற்று நாக்பூரில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டிகளில் அவர் இந்த சாதனையை நிலைநாட் டினார். இதன்மூலம் உலக அளவில் 8ஆயிரம் ஓட்டங்களைக் குவித்த வீரர்கள் பட்டியலில் 9ஆவது வீர ராக கங்குலி இணைந்துகொண்டார்.

இந்த ஓட்ட எல்லையைக் கடந்த மூன்றாவது இந்திய வீரர் இவரா வார். இதற்கு முன்னர் இந்திய வீரர் களான டெண்டுல்கர் மற்றும் முஹம மட் அஸாருதீன் ஆகியோர் இந்தச் சாதனையைப் புரிந்துள்ளனர்.

தனது 208 ஒருநாள் போட்டிக ளில் ஆடி அவர் இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார். நேற்றைய போட்டியில் மேற்கிந்திய பந்துவீச்சாளர் டிலான் வீசிய பந்தில் பவுண்டரி ஒன்றை விளாசியதன் மூலம் அவர் 8 ஆயிரம் ஓட்டங்கள் என்ற இலக்கைத் தாண்டினார். நேற்றைய ஆட்டத்தில் கங்குலி 78 ஓட்டங்களைப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## காட்சி உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,நவ.10

இளவாலை யங்ஹென்றீசியன் விளையாட்டுக்கழக அணிக்கும் யாழ். மாவட்ட தெரிவு அணிக்கும் இடையிலான காட்சி உதைபந்தாட்டம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இளவாலை புனித ஹென்றி யரசர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன. (ம-8)

### ஒருநாள் போட்டித் தொடர்

# மேற்கிந்திய அணி நேற்றும் 7 விக்கெட்டுக்களால் வெற்றி

யாழ்ப்பாணம்,நவ.10

இந்திய மற்றும் மேற்கிந்தியத்தீவு கள் கிரிக்கெட் அணிகள் இடையே யான ஒருநாள் போட்டித்தொடரின் இரண்டாவது போட்டியிலும் மேற்கிந் தியஅணி 7விக்கெட்டுக்களால் பெரு வெற்றியீட்டியுள்ளது.

இந்தியாவின் நாக்பூரில் நடை பெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியஅணி நிர் ணயிக்கப்பட்ட 47ஓவர்கள் முடிவில் 9விக்கட்டுக்களை இழந்து 279 ஓட் டங்களைப் பெற்றது. அந்த அணி யின் சார்பில் வி.வி.எஸ்.லக்ஸ்மன் 99 ஓட்டங்களையும் கங்குலி 78ஓட்டங் க்களையும் ராகுல் ராவிட் 51ஓட்டங்க ளையும் பெற்றனர். பதிலுக்குத் துடுப் பெடுத்தாடிய மேற்கிந்திய அணி 46.2 ஓவரில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைந்து 7விக்கெட்டுக்க ளால் வெற்றியீட்டியது. மேற்கிந்திய அணியின் சார்பில் கிறிஸ் கெயில் 103 ஓட்டங்களையும் சாமுவேல் 52 ஓட்டங்களையும் சர்வான், சந்திர போல் ஆகியோர் ஆட்டமிழக்காமல் தலா 39ஓட்டங்களையும் பெற்றனர். ஆட்ட நாயகனாக கிறிஸ் கெயில் தெரிவுசெய்யப்பட்டார்.

போட்டி அரைமணிநேரம் தாமதமா கவே ஆரம்பித்தது. இதனால் 3ஓவர் ச குறைக்கப்பட்டு இரு அணிகளும் 4 . ஓவர்கள் மட்டுமே விளையாடுவது என நிர்ணயிக்கப்பட்டது.

அடுத்தபோட்டி நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை ராஜ்கோட்டில் நடைபெறவுள்ளது. கடந்த புதன் கிழமை இடம்பெற்ற முதலாவது போட்டியிலும் மேற்கிந்திய அணி 4 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது குறிப்பிடத்தக்கது. (ம-10)



இந்திய வீரர் ஆட்டமிழக்கும் காட்சி.

# இஸ்ரேலியப் படைகளால் வீடு முற்றுகை:
# மூத்த பலஸ்தீன தீவிரவாதி துப்பாக்கிச் சண்டையில் பலி!

ஜெனின்,நவ.10

பலஸ்தீனத்தில் இஸ்லாமிய ஜிகாத தீவிரவாத இயக்கத்தின் மூத்த உறுப்பினர் ஒருவர் இஸ்ரேலியப் படைகளால் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்.

மேற்குக்கரையில் ஜெனின் நகரில நேற்று இடம்பெற்ற ஒரு முற்றுகைச் சமரின் போது இயாத் சவல்லா என்ற 32 வயதான ஜிகாத் உறுப்பினரை தனது படைகள் கொன்றுவிட்டதாக இஸ்ரேல் தெரிவித்திருக்கிறது.

கொல்லப்பட்ட ஜிகாத் உறுப்பினர் மனைவியுடன் பதுங்கியிருந்த வேளை இஸ்ரேலிய கொமாண்டோக்கள் அவரது வீட்டை முற்றுகையிட்டன என்றும் -

வெளியே வந்து சரணடையுமாறு படையினர் கேட்டுக்கொண்டபோது பதிலுக்கு அவர் கைக்குண்டொன்றை வீசித் தாக்கினார் என்றும் -

பின்னர் அங்கு நடந்த துப்பாக்கிச சமரில் அவர் கொல்லப்பட்டார் என்றும் - இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மூத்த ஜிகாத் உறுப்பினரின் மரணத்தை பலஸ்தீன மருத்துவமனை வட்டாரங்களும் உறுதிப்படுத்தியுள்ளன.

இஸ்ரேலியப் பகுதிகளில் கடந்த சில மாதங்களில் நடந்த இரண்டு பஸ குண்டு வெடிப்புத் தாக்குதல்களைத் திட்டமிட்டு நடத்தியவர் சவல்லா என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது. (ஐ)




யுத்தத்துக்கும், உலகமயமாக்குதலுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் ஆயிரக்கணக்கான ஆர்வலர்கள் இத்தாலியில் வரலாற்றுப் புகழ்மிக்க நகரமான புளோரன்ஸில் திரண்டிருக்கின்றனர். அவர்களில் ஒரு பகுதியினரையும் தயார் நிலையில் நிற்கும் இத்தாலியப் பொலீஸாரையும் படத்தில் காண்கிறீர்கள். (ஐ)

## மரண தண்டனை

தெஹ்ரான்,நவ.10

ஈரானில் பத்திரிகையாளர் ஹாஷிம் அகாஜரிக்கு அரசு மரண தண்டனை விதித்துள்ளது.

மேடையில் பகிரங்கமாக மதக் கொள்கைகளை மீறும் வகையில் தடை விதிக்கப்பட்ட வசனங்களைப் பிரயோகித்ததன் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டார்.

அரசியல் துறை விரிவுரையாளரான ஹாஷிம் விடுதலை செய்யப்பட வேண்டும் எனக் கோரி அவரின் மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர். (ஐ-ரி)

# ஐ.நா. தீர்மானத்தை ஈராக் பரிசீலிக்கிறது!

## அடுத்த சில தினங்களில் பதில்

பக்தாத்,நவம்பர்10

**பேரழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்களை ஈராக் வைத்திருந்தால் அவற்றை உடனடியாகக் களைந்துவிட வேண்டும் என்று ஐ.நா.பாதுகாப்புச் சபை நிறைவேற்றிய தீர்மானத்தை ஈராக் தலைமை பரிசீலித்து வருகிறது. உரிய பதில் அடுத்த சில தினங்களில் அறிவிக்கப்படும்.**

பக்தாத் அரசின் உத்தியோக பூர்வ செய்தி நிறுவனமான 'இனா' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

15 உறுப்பினர்கள் கொண்ட ஐநா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தின் படி - தீர்மானம் தொடர்பான தனது முடிவை ஈராக் ஏழு நாள்களுக்குள் அறிவிக்கவேண்டும். அதாவது தீர்மானத்தை முற்றுமுழுதாக ஏற்பதாக ஈராக் அறிவிக்க வேண்டும்.

அதன் பிறகு -

தன் வசமுள்ள ஆயுத தயாரிப்புத் திட்டங்கள், அணு ஆயுத இரசாயன உயிரியல் ஆயுதங்கள், உலைகள் தொடர்பான விவரங்களை அடுத்த 30 தினங்களுக்குள் ஐ.நாவிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

45 ஆவது நாள் ஐ.நா. ஆயுதப் பரிசோதகர்கள் பரிசோதனைகளை நடத்த ஈராக் அனுமதிக்க வேண்டும்.

தங்கள் ஆயுத பரிசோதனை தொடர்பான அறிக்கையை அடுத்த 60 தினங்களுக்குள் பரிசோதகர்கள் ஐ.நாவிடம் சமர்ப்பிப்பர். (ஐ)

# தலிபான் கைதிகளின் படங்கள் வெளியாகியது எவ்வாறு?

## பென்ரகன் விசாரணை


வாஷிங்ரன்,நவ.10

ஆப்கானிஸ்தானில் கைது செய்யப்பட்ட தீவிரவாதிகள் கைகள் பிணைக்கப்பட்டு, தலைகள் மூடி மறைக்கப்பட்ட நிலையில் அமெரிக்க இராணுவ விமானம் ஒன்றில் ஏற்றிச் செல்லப்படுவதைக் காட்டும் படங்கள சில இணையத்தளங்களில் வெளியாகி இருக்கின்றது.

பிரசுரத்துக்கு அனுமதிக்கப்படாத இந்தப்படங்கள் எவ்வாறு வெளியே கிடைத்தன என்பது குறித்து அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்ரகன் விசாரணை ஒன்றை ஆரம்பித்திருக்கிறது.

கறுப்பு முகமூடிகளால் தலைகள மறைக்கப்பட்ட நிலையில் தீவிரவாதிகள் விமானத்துக்குள் தரையில் அமர்த்தி ஏற்றிச் செல்லப்படுகின்ற காட்சிகளைக் காட்டும் நான்கு படங்கள் வெளியாகி இருக்கின்றன. (அவற்றில் ஒன்றையே படத்தில் காண்கிறீர்கள்)

ஆப்கானிஸ்தானில் சிறைப்பிடிக்கப்பட்ட தலிபான் மற்றும் கைதிகளை அமெரிக்கா சர்வதேச சட்டங்களை புறந்தள்ளிவிட்டு - முறைகேடாக பராமரிப்பதாகவும் - சித்திரவதை புரிவதாகவும சர்வதேச ரீதியில் கண்டனங்கள் எழுந்துள்ள பின்னணியில் - இந்த இரகசிய புகைப்படங்கள் வெளியாகி இருக்கின்றன. ஐ



## பாலில் விஷம் 356 பேர் பாதிப்பு!

மொஸ்கோ,நவ.10

விஷம் கலந்த பாலை அருந்திய 122 குழந்தைகள் உட்பட 356 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ரஷ்யத் தலைநகரான மொஸ்கோவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மொஸ்கோவிலுள்ள பாற்பண்ணை ஒன்றில் இருந்து பெறப்பட்ட பாலை அருந்தியவர்களுக்கு திடீரென வாந்தி, காய்ச்சல் ஏற்பட்டதை அடுத்து அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-ரி)



ஈராக் தலைநகர் பக்தாத்தில் அதிபர் சதாம் ஹூசேய்னின் பெரிய அளவிலான உருவப் படத்துக்கு முன்பாக ஈராக்கிய இளைஞர்கள்.

# ஒஸாமா பின்லேடன் இன்னும் உயிருடன்! அடுத்த தாக்குதலை திட்டமிடுகிறார்!!

## உறுதிப்படுத்துகின்றது இன்ரபோல்

லண்டன்,நவ.10

சர்வதேச தீவிரவாதி ஒஸாமா பின்லேடன் உயிருடன் இருப்பதை 'இன்ரபோல்' எனப்படும் சர்வதேச பொலீஸார் உறுதிப்படுத்தியிருக்கின்றனர்.

'அல்கெய்டா' தலைவர் பின்லேடன இன்னும் உயிருடன் இருக்கிறார். அடுத்த பெரிய தாக்குதல் ஒன்றுக்கான திட்டங்களைத் தயாரிப்பதில் அவர் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார் - என்று இன்ரபோல் தலைவர் ரொனால்ட் நோபிள் தெரிவித்திருக்கிறார்.

மற்றொரு பெரிய தீவிரவாதத் தாக்குதலை நடத்த 'அல்கெய்டா' தயாராகின்றது. அது அமெரிக்காவில் அல்ல வெளியிலும் நடக்கலாம். அது மிகத் தீவிரமான தாக்குதலாக இருக்கலாம். புலனாய்வுத்துறை நிபுணர்கள சகலருமே இதை ஏற்றுக் கொள்கின்றனர். அமெரிக்கா மட்டுமல்ல ஒரே சமயத்தில் பல நாடுகளில் தாக்குவதே அவர்களது அடுத்த இலக்கு - என்றும் இன்ரபோல் தலைவர் தெரிவித்திருக்கிறார்.



ஒஸாமா பின்லேடனின் உடல் நிலை சர்வதேச ரீதியில் நிதிசேகிக்கும் அல்கெய்டாவின் நடவடிக்கைகளைப் பெரிதும் பாதித்திருப்பதாகவும் இன்ரபோல் தெரிவித்திருக்கிறது.

## அல்கெய்டா பொறுப்பேற்றது?

ஹொங்கொங்,நவ.10

கடந்த மாதம் இந்தோனேசியாவின் பாலியில் நடைபெற்ற குண்டு வெடிப்புக்கு அல்கெய்டா அமைப்பு பொறுப்பேற்றுள்ளதாக சி.என்.என் இணையத்தளம் வெள்ளிக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தோனேசியாவில் இரவுநேர கேளிக்கை விடுதிகளையும், விபசார விடுதிகளையும் தாங்கள்தான் தாக்கியதாக சர்வதேச தீவிரவாதி ஒஸாமா பின்லேடன் தலைமையிலான அல்கெய்டா அமைப்பு மற்றொரு இணையத்தளத்தில் தெரிவித்துள்ளது. அதை மேற்கோள்காட்டி 'சிஎன்என்' இத்தகவலைத் தெரிவித்துள்ளது. (ஐ)

# 20 நிமிடங்களில் 'எய்ட்ஸ்' சோதனை: அமெரிக்காவில் புதிய முறை அறிமுகம்!

எய்ட்ஸ் நோய் இருக்கிறதா என்பதை இருபதே நிமிடத்தில் கண்டு பிடிக்கக்கூடிய சோதனை முறைக்கு அமெரிக்க அரசு புதன்கிழமை அங்கீகாரம் அளித்தது. சம்பந்தப்பட்ட நபரின் விரலில் இருந்து எடுக்கக்கூடிய ஒரு சொட்டுக்கும் குறைவான இரத்தத்தைப் பயன்படுத்தியே அச்சோதனையைச் செய்துவிட முடியும்.

குளிரூட்டப்பட்ட சோதனைச்சாலையில்தான் என்றில்லாமல் சாதாரண அறைகளிலேகூட அச்சாதனத்தைப் பயன்படுத்த முடியும். எய்ட்ஸ் நோய் ஒழிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள சமூக சேவகர்களுக்கும் அமைப்புகளுக்கும் இச்சாதனம் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்று அமெரிக்க சுகாதாரத்துறை அமைச்சர் டாமி தாம்சன் கூறினார்.

இச்சாதனத்தை பென்சில்வேனியாவைச் சேர்ந்த மருத்துவ ஆராய்ச்சி கம்பனி உருவாக்கியுள்ளது.

# கிழக்கு ஆஸ்திரேலியாவில் கட்டுக்கடங்கா காட்டுத் தீ!

ஆஸ்திரேலியாவின் கிழக்குப் பிராந்தியத்தில் பரவியுள்ள காட்டுத்தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் தீயணைப்புப் படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கடும் வரட்சி மற்றும் வெப்பநிலை உயர்வு காரணமாக காட்டுத்தீ கட்டுக்கடங்காமல் பரவி வருகிறது.

சனத்தொகை மிகவும் அடர்த்தியாக உள்ள நியூ சவுத்வேல்ஸ் பகுதியில் சுமார் 97 இடங்களில் தீ பரவியிருக்கிறது என்று தீயணைப்புப் பிரிவினர் கூறுகின்றனர்.

4 லட்சத்து 70 ஆயிரம் ஹெக்டேயர் பரப்பில் தீ புகைந்து கொண்டிருக்கிறது. (ஐ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் முருகேசு கந்தசாமி

ஏ-9 வீதியின் எழில் ஓங்கும்
நகரான கிளிநொச்சியில்
இடம்பெயர்ந்து யாழ்.மக்கள்
வரும்போது அவ்விடம் தன்னில்
கிலி கொள்ள வைத்த நோய்களை ஒழித்து
ஒளி ஏற்றிய உத்தமரே!

சோதனைகள் பல வந்தபோதும்
சோராமல் சோதியாய் ஆனவரே!

தேசத்தின் சேவைக்காய்
நாட்டுப் பற்றாளர் என்னும்
கௌரவ நாமத்திற்கு உரித்துடையவரே!
திடீரென ஏற்பட்ட மரணத்தால்
எங்களைத் திக்கிட வைத்தீரே!
முதியோரின் ஏக்கங்களை தகர்ப்பதற்காய்
நீங்கள் ஏற்றி வைத்த தீபத்தை நாம் (ன்)
என்றும் சுமந்திருப்பேன் (போம்).

என்றும் அழியா நினைவுடன்:
**மனைவி, மக்கள், மருமக்கள்.**

(C/24804)

## பிரிட்டிஷ் நாடாளுமன்ற விவகாரக்குழுத் தலைவர் யாழ்.வருகின்றார்

யாழ்ப்பாணம் நவ.10

பிரிட்டிஷ் நாடாளுமன்றின் இலங்கை விவகாரங்களுக்கான குழுவின் தலைவர் லோட் நசேபி (Lord Naseby)எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணத்திற்கு வரவுள்ளார்.

அன்றையதினம் காலை வருகை தரும் இவர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளையும் காலை 9.30 மணிக்கு யாழ்.செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

(எ-10-8)

## நாவற்குழி மகாவித்தியாலய மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,நவ.10

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு நாவற்குழி மகா வித்தியாலயத்தினூடாக விண்ணப்பித்து தற்போது வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களை தமது தரம் 10,11 இற்கான கணிப்பீட்டுப் புள்ளிகளை எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் நாவற்குழி மகா வித்தியாலயத்தில் சமர்ப்பிக்குமாறு வித்தியாலய அதிபர் கேட்டுள்ளார்.

(எ-4)

## விற்பனைக்கு

சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட SONY 19", 20", 21", National 14", 18",21"ரீ.விகள் (MADE IN JAPAN) SONY, NATIONAL FH7, FH3, 2X ரேடியோ (MADE IN JAPAN) NV 300, PANASONIC டெக் வகைகள (MADE IN JAPAN) என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
142, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(10454)

## மீண்டும் சாவகச்சேரியில் நியூ இந்திரன் ஜுவல்லர்ஸ், சாவகச்சேரி

அன்புடையீர்,

மேற்படி எமது ஸ்தாபனம், இறையருளால் எதிர்வரும் ஐப்பசித் திங்கள் 25ஆம் நாள் நாளை (11.11.2002) திங்கட்கிழமை தொடக்கம் கண்டிவீதி, சாவகச்சேரியில் (அம்பிகா மருந்தகம் முன்பாக) செயற்படவுள்ளது என்பதை வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

(10461) உரிமையாளரும், ஊழியர்களும்.

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆருயிர் நண்பனும்
பவானி விளையாட்டுக் கழக உறுப்பினருமாகிய

## அழகர்சாமி சிவகுமார்

(மிக்ஷர் சிவா)


அவர்களின் மரணச் செய்திகேட்டு அதிர்ச்சியும், மனவேதனையும் அடைகின்றோம். துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

பவானி விளையாட்டுக்கழகம்,
சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்.

(10459)

சிவமயம்

## மங்களகரமான திறப்புவிழா அழைப்பு



அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் ஐப்பசித் திங்கள் 24 ஆம் நாள் இன்று (10-11-2002) ஞாயிற்றுக்கிழமை உத்தராட நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் காலை 9.32 மணிமுதல் 10.42 மணி வரையுள்ள சுபவேளையில்

எம்மால் ஆரம்பிக்கவிருக்கும்

## ஸ்டார் கலர் லாப்

என்னும் அதி நவீன கலர் சேவைக் கூடம் திறப்புவிழா வைபவத்துக்கு எமது உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் வருகை தந்து விழாவைச் சிறப்பித்து எமது புதிய ஸ்தாபனத்தை ஆசீர்வதித்து எம்மை மகிழ்வித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*பிரதான வீதி,*
*நெல்லியடி.*

(சி24797)

தங்கள் நல்வரவை நாடும்
நிர்வாகத்தினர்.

# உதயன்

## அரசியல் பித்தலாட்டம்!

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பைக் கைவிட முன்வந்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இவர்கள் எதற்காக நாடாளுமன்றப் பகிஷ்கரிப்புப் போராடடத்தை மேற்கொண்டார்கள்? இப்போது அதைக் கைவிட ஏன் முன்வந்தார்கள்? அவர்கள் இந்தப் போராட்டம்மூலம் பெற்றுக்கொண்டது என்ன?

இந்தக் கேள்விகளின் ஊடாக இந்தப் போராட்டம் (?) முயற்சிகளை ஆராய்ந்து பார்த்தால் இது வெறும் அரசியல் 'ஸ்டண்ட்' என்பதும், 'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி' என்ற மாதிரி இப்போது அவர்கள் நாடாளுமன்றத்துக்கு ஓடி வந்திருப்பதும் துலாம்பரமாகத் தெரியும்.

'வடக்கு - கிழக்கு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் போது கிழக்கில் உள்ள முஸ்லிம்களுக்குத் தனி அலகுடனான அதிகாரப் பகிர்வும் நிர்வாகமுறையும் அவசியம். வடக்கு - கிழக்கின் இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளிடம் அளிப்பதாயின் முஸ்லிம்களின் தனி அலகுக்குத் தனி இடைக்கால நிர்வாக அமைப்பை ஏற்படுத்தி, அதனை முஸலிம்களிடம் கையளிக்கவேண்டும்' இதுபோன்ற கோரிக்கைகளை முன்வைத்தே அவர்கள் நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இந்த விடயங்கள் தொடர்பாகப் பிரதமர் ரணில் எழுத்து மூலம் உறுதியளித்தால் மட்டுமே நாடாளுமன்றத்துக்குத் திரும்புவோம் என்றும் சூளுரைத்தனர்.

அரசமைப்பு மாற்றங்கள் பலவற்றுக்கும் தயாராகிவரும் பிரதமர் ரணிலுக்கு அதற்காக நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவு பெறவேண்டிய தேவை - கட்டாயம் - இருந்தது. ஆகவே தங்களைப் புறக்கணித்து பிரதமர் ரணிலால் எதுவும் செய்யமுடியாது. எப்படியும் காலில வந்து விழுவார். தாங்கள் கேட்டவற்றை எழுத்தில் தருவார். அதைக்காட்டி கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் தமது அரசியல 'இமேஜை' வளர்த்துக்கொள்ளலாம் என்றெல்லாம் அவர்கள மனப்பால் குடித்தனர். ஆனால், அவை எல்லாம் பகல் கனவாகிப்போன நிலையில் இப்போது விழுந்தும் மீசையில் மண் ஒட்டிக்கொள்ளவில்லை என்ற கதையாக நாடாளுமன்றத்துக்குத் திரும்பத் தயாராகிவிட்டார்கள்.

திம்புப் பேச்சு முதல் தமிழர் தாயகத்தை அங்கீகரிக்க மறுத்துவந்த அரசுத் தரப்பு, அது பற்றிய கோரிக்கைக்கு இப்போது மறுப்புச் சொல்லாமல் - முன் நிபந்தனை போடாமல - அமைதிப் பேச்சுக்கு வந்துள்ளது.

தமிழர் தாயகத்துக்குத் தனியரசு அமைக்க இருபது ஆண்டுகாலம் இரத்தமும், உயிரும் கொடுத்து பெரியதோர் விடுதலைப் போராட்டத்தை நடத்தி வந்த விடுதலைப் புலிகள், தமது தனிநாட்டுக் கோரிக்கையை ஒருபுறம் வைத்து விட்டு நிபந்தனை விதிக்காமல் - சமாதானப் பேச்சு மேடைக்கு வந்துள்ளனர்.

பேச்சு மேசையில் விட்டுக் கொடுப்புடன் பேச்சு நடத்தி நல்லதோர் தீர்வை எட்டுவது இந்த இரு தரப்பினதும் அவா; ஆவல்; விருப்பம்.

இவ்வளவு காலமும் ஆயுதப் போராட்டம் நடத்திய புலிகள், எங்களுக்கு இதைத் தருவதாக எழுத்துமூலம் உறுதி தந்தால்தான் அமைதி முயற்சிக்கும் ஜனநாயக முறைக்கும் வருவோம் என்று பேச்சுக்கு வருவதற்கு முன்நிபந்தனை ஏதும விதிக்கவில்லை.

ஆனால், தமிழர் தமது உரிமைக்காக விடுதலைப் போர் நடத்திய காலத்தில் அந்த உரிமைப் போரைத் தமது அரச பயங்கரவாதம்மூலம் அடக்கமுயன்ற அரசுகளுக்கு முண்டு கொடுத்து, அதன்மூலம் தமிழர் விடுதலைப் போராட்டத்தைப பின்னடைய வைத்த முஸ்லிம் தலைமைகள் இப்போது தீர்வுக்கான அமைதி முயற்சிகள் எடுக்கப்படும்போது அதைக் குழப்ப முன்நிற்கின்றன; முன்நிபந்தனைகள் விதிக்கின்றன.

தாங்கள் விரும்பியதைத் தருவதாக எழுத்துமூலம் உறுதி வழங்கினால்தான் அமைதி முயற்சிக்கு உதவலாம் என நிபந்தனை போடுகின்றன.

அதிலும்கூட இரட்டை வேடம், தலைவரும் ஒரு சிலரும் ஏதோ இந்தக் குசும்பில் தங்களுக்குப் பங்கில்லை. தாங்கள நல்லவர்கள் என்ற பாணி. கீழே உள்ள எம்.பிக்கள்தான் முரண்டுபிடிக்கின்றார்கள் என்று சாட்டு.

ஆனால் கடைசியில் நடந்தது என்ன?

அரசமைப்புச் சீர்திருத்த முயற்சிகளை ரணில் அரசு கைவிட்டுவிட்டது. இப்போதைக்கு நாடாளுமன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவைத் திரட்ட அரசு முயலப்போவதில்லை.

அரசைப் பொறுத்தவரையில் ஒருபுறம் அமைதி முயற்சிகள தொடர, மறுபுறத்தில் அரசு கவிழாமல் ஆட்சி தொடர்ந்தால் சரி. அதற்கு முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களின் ஆதரவு கடடாயம் என்பதல்ல. அந்த எம்.பிக்களின் ஆதரவு இல்லா விட்டாலும் அரசு கவிழப்போவதில்லை. தமிழர் கூட்டமைப்பு எம்.பிக்கள் அந்த இடத்துக்குக் கைகொடுப்பர்.

எனவே பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களின் நடவடிக்கை ரணில் அரசைப் பெரிதாகப் பாதிக்கமாட்டது என்ற நிலைமை.

ஆகவே, ரணில் தங்களை இப்படியே திரும்பிப் பார்க்காமல் - கவனிக்காமல் - விட்டுவிடுவாரோ என்ற அச்ச நிலைக்கு அந்த எம்.பிக்கள் தள்ளப்பட்டது உண்மை.

முஸ்லிம்களின் உரிமைகள், பாதுகாப்புகள் உறுதிப் படுத்தப்படும் என இப்போது ரணில் அறிவித்ததும் 'பிச்சை வேண்டாம்; நாயைப் பிடி' என்ற நிலையில் ஓடி வந்துவிட்டார்கள்.

பிரதமர் ரணில் இப்போது, தாம் அறிவித்ததைத்தான் முன்னரும் பல தடவைகள் கூறிவந்தார். அப்படித்தான் அவர் கூறமுடியும்; கூறவேண்டும்; கூறலாம்.

அதை, முன்னர் ஏற்க மறுத்த எம்.பிக்கள் இப்போது அதை ஏற்பதாக அறிவித்தது - எங்கே பிசுபிசுத்துப்போன தாங்களின் போராட்டம் கவனிக்கப்படாமல், தாங்கள் ஒதுக்கப்பட்டுவிடலாம் என்ற அச்சத்தினால்தான்.

இத்தகைய அரசியல் பித்தலாட்டங்களை முஸ்லிம் தலைமைகள் தவிர்த்து, அமைதி முயற்சியில் முழு ஈடுபாட்டுடன் தங்களை ஒன்றிணைக்க முயலவேண்டும். அதுவே அவர்களது சமூகத்துக்கும் நல்லது. நாட்டுக்கும் நல்லது.

---

யாழ்.குடாநாட்டில்

# பொலீஸ் முறைப்பாடுகள் தொடர்ந்தும் சிங்களத்திலா?

### பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.10

யாழ்.குடாநாட்டில் உள்ள பொலீஸ் நிலையங்களில் தொடர்ந்தும் சிங்களத்தில் முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டு வருவதனால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகிறது.

முறைப்பாடுகளைச் செய்வதற்குச் செல்லும் மக்கள் மட்டுமன்றி தமது பல்வேறு தேவைகளுக்காகச் செல்லும் மக்களும் மொழிப்பிரச்சினை காரணமாக தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் பல்வேறு சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

எனவே, தமிழ் தெரிந்த பொலீஸாரை இவ்வாறான பணியில் ஈடுபடுத்தினால் மக்கள் எவ்வித சிரமங்களுமின்றித் தமது பிரச்சினைகளையும், தேவைகளையும் பொலீஸாரிடம் தெரிவிக்க முடியும். அதேவேளை, தமிழ்ப் பொலீஸாரும் மக்களின் பிரச்சினைகளை உரியவாறு விளங்கிக்கொள்வதுடன் அதற்கேற்ப பதிலை மக்களுக்கு வழங்கக்கூடியதாக இருக்கும் எனவும் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சிங்கள மொழி தெரியாது என்று கூறும் மக்களிடம் ஆங்கிலத்தில் எழுதித்தருமாறு சில பொலீஸ் நிலையங்களில் தெரிவிக்கப்படுவதாகவும் - முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

தமிழ் மொழி அரசமொழியாக அங்கீகரிக்கப்பட்ட நிலையில இவ்வாறு பொலீஸ் நிலையங்களில் பாரபட்சம் காட்டப்படுவது குறித்து பல்வேறு தரப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தமை தெரிந்ததே.

அண்மையில் புதிய பொலீஸ்மா அதிபராகப் பதவியேற்ற தமிழரான ரி.ஆனந்தராஜா நாட்டிலுள்ள சகல பொலீஸ் நிலையங்களிலும் இனிமேல் தமிழ்மொழியிலும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்படும் என்று அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-10)

## குடாநாட்டுச் சந்தைகளில் தரங்குறைந்த பனங்கட்டிகள்

### பனை அபிவிருத்திச் சபையிடம் புகார்

யாழ்ப்பாணம்,நவ.10

குடாநாட்டுச் சந்தைகளில் தரங்குறைந்த பனங்கட்டிகள் விற்பனை செய்யப்படுவது தெரியவந்துள்ளது.

குடாநாட்டுக்கு வரும் தென்னிலங்கை மக்கள் மத்தியில் பனங்கட்டிக்கு பலத்த வரவேற்பு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, பனங்கட்டிகளை உற்பத்தி செய்து அதிக விலைக்கு விற்பனை செய்வதில் சிலர் ஈடுபட்டுள்ளனர் எனக் கூறப்பட்டது.

இதேவேளை - மேற்படி தரங்குறைந்த பனங்கட்டிகளை வாங்கி ஏமாற்றமடைந்த தென்பகுதி மக்கள் இது குறித்து பனை அபிவிருத்திச் சபையிடம் முறையிட்டுள்ளனர் என சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இது குறித்து பனை அபிவிருத்திச் சபையினர் யாழ்.அரச அதிபரிடமும், யாழ்.மாவட்ட சுகாதார பரிசோதகரிடமும் தெரியப்படுத்தியுள்ளனர் என்றும் -

சுகாதாரப் பரிசோதகர்கள் மூலமாக தரமற்ற - சுகாதார முறைப்படி தயாரிக்கப்படாத - பனங்கட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யும் நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் - பனை அபிவிருத்திச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ-4)

மருதங்கேணிப் பிரதேசத்தில்

## போதிய தபால் பெட்டிகள் இன்றி மக்கள் சிரமம்

வடமராட்சி கிழக்கு,நவ.10

மருதங்கேணிப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் போதியளவு தபால் பெட்டிகள் வைக்கப்படவில்லையெனப் பொதுமக்கள் தரப்பில் முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

தாளையடி உபதபால் நிலையம் மீண்டும் இயங்கத் தொடங்கியதையடுத்து 6 தபால் பெட்டிகள் அங்கு வந்து சேர்ந்ததாகவும், அவை அப்பிரதேசத்திற்குப் போதுமானதாக இல்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதனால், உபதபால் நிலையத்திலிருந்து மூன்று தொடக்கம் நான்கு மைல்கள் தூரத்திலிருக்கும் மக்கள், தபால்களை அனுப்புவதில் சிரமத்தை எதிர்நோக்குவதாகக் கூறப்பட்டது. (எ-182)

### நாளை

ஐப்பசி 25
திங்கட்கிழமை
(11.11.2002)
திதி : ஸப்தமி
மாலை 6.51 வரை
நட்சத்திரம்: திருவோணம்
பின்னிரவு 3.12 வரை.
சுபநேரம் : 12.06 - 1.36
ராகுகாலம் : 7.36 - 9.06
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

'இல்லை' என்று ஒரு போதும் சொல்லாதே. 'என்னால் இயலாது' என்று ஒருநாளும் சொல்லாதே.

## தகர்க்கப்பட்ட வீடுகளை ஆனந்தசங்கரி பார்வையிட்டார்

தெல்லிப்பழைப் பகுதியில் அண்மைக்காலத்தில் படையினரால் தகர்க்கப்பட்டதாகக் கூறப்படும் வீடுகளை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி நேரிற்சென்று பார்வையிட்டார்.

கடந்த திங்கட்கிழமை அப்பகுதிக்குப் பொதுமக்களுடன் சென்ற ஆனந்தசங்கரி எம்.பி., அண்மைக்காலத்தில் உடைக்கப்பட்ட வீடுகள் பற்றிய விவரங்களை மக்களிடம் கேட்டறிந்து கொண்டார். புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு சமாதானச் சூழல் நிலவும் இந்தவேளையில், முன்னர் உடைக்கப்படாதிருந்த பல வீடுகள் அண்மைக்காலத்தில் உடைக்கப்பட்டுவருவதாக பொதுமக்கள் எம்.பியிடம் சுட்டிக்காட்டினர்.

இவ்விடயம் தொடர்பாக இராணுவ உயரதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருடன் தான் தொடர்புகொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக ஆனந்தசங்கரி எம்.பி. பொதுமக்களிடம் தெரிவித்தார். (எ-86)



செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்துக்கு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் அண்மையில் 50 பிளாஸ்ரிக் கதிரைகளை அன்பளிப்புச் செய்துள்ளார்.

புனர்வாழ்வு நிறுவனத்தில் அண்மையில் நடைபெற்ற இது தொடர்பான நிகழ்வில் அமைச்சர் நிறுவனத்தின் பிரதிநிதிகளிடம் கதிரையொன்றைக் கையளித்தபோது எடுக்கப்பட்ட படம் இது. (எ-3)

பருவமழையை அடுத்து

## மருதங்கேணி பாடசாலைகளில் வகுப்புகளை நடத்தமுடியாத நிலை

வடமராட்சி கிழக்கு,நவ.10

மருதங்கேணிப் பிரதேசத்தில் மீள இயங்க ஆரம்பித்துள்ள பாடசாலைகளில் மழையின் காரணமாக வகுப்புகளை நடத்த முடியாதநிலை காணப்படுவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

மரநிழல்களின்கீழ் நடத்தப்பட்ட வகுப்புகளை மழை காரணமாக தற்போது நடத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளது என்றும்-

இதனால், தற்போது ஆரம்பமாகியுள்ள மூன்றாந்தவணைப் பரீட்சையினை மாணவர்கள் எழுதுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியிருப்பதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

மழைகாலத்திற்கு முன்னர் தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டபோதிலும், பல பாடசாலைகளில் அவை அமைக்கப்படாமையே இந்தநிலைக்குக் காரணம் என்றும் - முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது. (எ-182)


## எங்கள் பற்றிய உங்கள் சிந்தனைக்கு!



'சிறுவர்களின் மகிழ்ச்சி பாரிற்கு எழுச்சி'
வெளியீட்டு அனுசரணை SC (UK)

என் அன்பான பெரியோரே....!
*"மகிழ்ச்சி என்பது மனதுக்கு உணவு*
*அதனை அடைவதே மழலையின் கனவு"*
என்பதை இப்போது நீங்கள் மறந்திருக்கக்கூடும். உங்கள் மழலைக்காலத்து மனதிடம் கேட்டுப் பாருங்கள், மகிழ்ச்சியான சூழலின் மகத்துவத்தை அது சொல்லும்!

மழலை ஒன்றின் மகிழ்ச்சியான சூழலானது அன்பையும், அரவணைப்பையுமே அடித்தளமாகக் கொண்டது. அதட்டல்கள், அழுத்தங்களால் நீங்கள் செய்யும் ஒரேயொரு சாதனை உங்கள் பிள்ளைகளின் ஆளுமையை சிதைப்பது மட்டும்தான்!

எனவே, அவர்களை அரவணையுங்கள், அன்பாகச் சொல்லுங்கள், என்னைப்போல ஒரு மகிழ்வான சிறுமி/சிறுவன் இனி உங்கள் வீட்டிலும் உலா வருவார்!

*- அன்புக்காய் ஏங்கும் சிறுவர்களின் தோழி -*

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண் - 30
யாழ்.போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம். தொ.பே: 021-222 2261 Ext.274

(சீ24798)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

45நாள்கள் நிரம்பிய அல்சேசன் பெண்நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நடராசா, செல்வநாயகம் ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு (பலாலி றோட் சந்திப்பிள்ளையார் கோயில் அருகில்) (10415)

நல்ல நிலையில் உள்ள றோணியோ மெசின், தமிழ் தட்டச்சு இயந்திரங்கள் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. வே.சிறி, இல.249, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் (யாழ்.இந்துக் கல்லூரி முன்பாக). (10392)

சகல ஆவணங்களுடன் நல்ல நிலையில் உள்ள 50சிறி தொடர் இலக்கமுடைய L.3 Hundred Van ஒஸ்ரின் கேம்பிறிஜ் கார் (பரீனா) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ராஜிவ், ஆனைக்கோட்டைச் சந்தி, T.P. No. 3529, 2867. (10420)

VERSA NEC WINDOWS - 98 லப்டொப் கொம்பியூட்டர் விற்பனைக்கு உள்ளது. தொடர்பு: இல.171, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (10412)

CD 125 Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 75, அம்மன் றோட், நல்லூர் (வீரமாகாளி அம்மன் கோவிலுக்கு முன்பாக). (10428)

பயணிகள் விடுதிக்குப் பாவிக்கப்பட்ட கதிரைகள், கண்ணாடிமேசை, மரக்கட்டில்கள், இரும்புக்கட்டில்கள், செயஸ்றா (Ceyesta) மெத்தைகள், தலையணைகள், பெற்சீற்கள், கதவு, யன்னல் கேட்டின்கள், உஷா சீலிங் பான் சமயலறைப் பாவனை உபகரணங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் ஒரு கிழமை வரை விற்கப்படும். தொடர்பு: 139, 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (10448)

புறொயிலர், கல்பேட்ஸ், இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P No. 3529, 2867. (10419)

50 புறொயிலர் கோழிகள் வளர்க்கக்கூடிய இரண்டு கோழிக்கூடுகளும்" கோழி, லவ்பேட் வளர்க்கக்கூடிய தரமான ஒரு கூடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 139, 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (10447)

## தவறிவிட்டது

மட்டுவில் தெற்கு, சிவன் கோவில வீதியைச் சேர்ந்த வைரமுத்து ஞானபாஸ்கரன் என்பவரின் (இல. 771641156V) தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி அம்பிகா டிஸ்பென்ஸரியில் அல்லது மேற்படி முகவரியில் ஒப்படைத்து உதவவும். (C/24796)

## மணமகள் தேவை

கனடாவில் வசிக்கும் இந்துக் குடும்பத்தில் 1972 இல் பிறந்த, கேட்டை நட்சத்திரம் உடைய மணமகனுக்கு அதே மதத்தைச் சேர்ந்த படித்த, பண்பான குடும்பத்தில் பிறந்த, பொருத்தமான 26 வயதுக்கு உட்பட்ட மணமகள் தேவை. தொடர்பு: 021-222 3848 (10266)

யாழ்.இந்து பெற்றோர் U.K. பிரஜாவுரிமைபெற்ற, உயரம் 5' 8", வயது 31, உத்திரட்டாதி 2ஆம் பாதம் உடைய மணமகனுக்கு அழகிய, நற்குணமும் பண்பும் கொண்ட மணமகளைத் தேடுகின்றனர். சகல விவரத்துடனும் அண்மையில் எடுத்த புகைப்படத்துடனும் தொடர்புகொள்ளவும் (பொருத்தமற்றவை திருப்பியனுப்பப்படும்). Rayal Fancy House 17, Bus Stand, Jaffna. (10355)

## திருமண சேவை

1969, பூசம், கிரகபாவம் கூடிய (செவ்வாயற்ற) U.K.Engineerக்கு படித்த, அழகான மணப்பெண் தேவை. மணமக்கள் தேவைக்கு தொடர்பு கொள்ளவும். துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.(10417)

## வாடகைக்கு

யாழ்.வீதி மானிப்பாயிலுள்ள கடை ஒன்று வாடகைக்கு உண்டு. பான்ஸி, பலசரக்கு, பார்மஸி தவிர்ந்த ஏனைய கடைகளுக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: து.ரவிச்சந்திரன், யாழ்.வீதி, மானிப்பாய் (இணுவில் வீதிக்கு அருகில்) (10388)

## வகுப்புகள்

2003இற்கான சிக்கலெண், 2004இற்கான நேர்கோடு, தொடர்பு வேகம் என்பன ஆரம்பம். மற்றும் கணனி வகுப்புகளும் நடைபெற்றுக கொண்டிருக்கின்றன (வகுப்புகள் அனைத்தும் பல்கலைக்கழக மாணவரால் நடத்தப்படுகின்றன). தொடர்பு: 'மங்களகிரி' வில்லு மதகடி, பருத்தித்துறை வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி. (10308)

ஆங்கில, சிங்கள வகுப்புகள் நடைபெறுகின்றன. புதிய வகுப்புகள் விரைவில் ஆரம்பமாக இருக்கின்றன. சனி, ஞாயிறு பகல் வகுப்புகள் அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும். தொடர்பு: அ.இராஜரட்ணம், 56, சந்திரசேகரப் பிள்ளையார் வீதி, கல்வியங்காடு. (10456)

## திருத்துதலும் ஒட்டுதலும்

மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், சகல கெமராவகைகள், எலக்ரோனிக பிளாஸ்கன், திருத்துதல், சிறிய பிளாஸ்டிக் பாட்ஸ் ஒட்டுதலுக்கு தொடர்பு: சு.நாராயணசாமி, இல.301, கஸ்தூரியார் வீதி (மேல்மாடி), கன்னாதிட்டிச் சந்திக்கு அருகில். (10453)

## வீடு விற்பனைக்கு

பாண்டியன்தாழ்வு சுண்டுக்குளியில் 3 அறைகளுடன் கூடிய மின்சார வசதி, கிணறு, சுற்றுமதிலையும் கொண்ட வீடும் 2 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R. சுந்தரலிங்கம், T.P. 731273.(10398)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள் குறைந்த விலையிலும், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகளும 14-11-2002 வியாழக்கிழமை மாலை விநியோகிக்கப்படும். பதிவுசெய்யவும். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (10315)

## காணவில்லை

டயசோன் லிவர் பிறவுண் நாய்க் குட்டியை 8 நாள்களாகக் காணவில்லை. காண்பவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். T.P.No. 021-3447 (10446)

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை விண்ணப்பம்

2003ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 31ஆம் திகதியாகும்.

பாடசாலைமூலம் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (எ-11)

## பாலர் பாடசாலைக்கு புதிய கட்டடம்

வலி.கிழக்கு, நவ.10

ஆவரங்கால் விவேகானந்தா பாலர் பாடசாலைக்கு சர்வோதயம் அமைப்பின் உதவியுடன் 82 ஆயிரம் ரூபா செலவில் புதிய கட்டடம் அமைக்கப்பட்டுவருகின்றது.

இந்தப் பாலர் பாடசாலை தற்போது ஆவரங்கால் விவேகானந்தா கலையரங்கில் தற்காலிகமாக இயங்கிவருகிறது. (ஐ-180)

## முக்கிய அறிவித்தல்

(யா/செங்குந்த இந்துக் கல்லூரி)

யா/செங்குந்த இந்துக் கல்லூரியின் அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல் 24.11.2002 ஞாயிற்றுக்கிழமை மு.ப.9.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

அதிபர்.

*யா/செங்குந்த இந்துக் கல்லூரி,*
*திருநெல்வேலி கிழக்கு.*

(சி-24803)

## ஈர விழிகளுடன் 7ஆம் ஆண்டு நினைவில்...

### அமரர் வீரகத்தி ஜெயரூபன் (ரூபன்)

திதி- 10.11.2002



தாயின் மடியில்
09.08.1972
மண்ணின் மடியில்
29.10.1995

அவனியிலே ரூபனெனும்பெயரோடு
அவதரித்த உத்தமனே!
உன் இழப்பால்
சோலைவனம் பாலைவனமானதையா!
கண்ணீரும் தண்ணீராய்ப் பெருகுதையா!
சிறகடித்துப் பறந்த நாம் சிறகொடிந்து நிற்கின்றோம்
எங்கள் விழிதேடும் உன்உருவை
எப்போ நாம் காண்போமையா?

உன் பிரிவால் கலங்கி நிற்கும்:
குடும்பத்தினர்.

*சிவன்கோயில் வீதி, எழுதுமட்டுவாழ்.* (10452)

## கண்ணீர் அஞ்சலி

வதிரி, தாரிக்கப்பற்றையைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

### சதாசிவம் சதானந்தசிவராஜா (சிவம்)

அவர்கள் 06.11.2002 அன்று அமரத்துவம் அடைந்தார். அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உறவினர் அனைவரதும் வேதனையில் பங்குகொள்வதோடு, அவரது ஆன்மாடேற்றத்துக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

\- நண்பன் கருணா.

*காமாட்சியம்மன் கோயில் லேன்,*
*மாலுசந்தி, அல்வாய்.*

(10457)

## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பனும் விநாயகர் மிக்சர் ஸ்தாபன
உரிமையாளருமாகிய

### அழகர்சாமி சிவகுமார் (மிக்சர்-சிவா)

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உரிமையாளர், ஊழியர்கள்.

ஜெகன் களஞ்சியம்,
285, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(10450)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13 - 07 - 1938 | 22 - 10 - 2001 |

(10455)

### அமரர் இராசையா பொன்னம்பலவாணர்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன் இருக்கும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*60/16, கலைமகள் வீதி,*
*நல்லூர் வடக்கு.*

PRIMA

இப்பொழுது யாழ்ப்பாணத்திலும் பிறிமா வந்துள்ளது

இல.144, ஸ்ரான்லி வீதியில்

PRIMA CHICKEN SHOPஇல்

இருந்து உங்களுக்குத் தேவையான.....

1. PRIMA WHOLE CHICKEN - பிறிமா கோழி இறைச்சி
2. CHICKEN PARTS - கோழியின் பாகங்கள்
3. PRIMA SAUSAGES - பிறிமா சோஜேஜஸ் வகைகள்
4. PRIMA NOODLES - பிறிமா நூடில்ஸ் வகைகள்
5. PRIMA OIL - பிறிமாஎண்ணெய் வகைகள்
6. PRIMA FLOUR - பிறிமா மாவகைகள்
7. PRIMA POULTRY FEEDS - பிறிமா கால்நடை உணவுகள

ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

Ceylon Grain Elevators Limited

15, Rock House Lane, Colombo - 15.
Tel.: 523580, 522556, 524754
Telex: 22076 CGE CE Fax:524163

(9520)

| | | | |
|---|---|---|---|
| | | சனி ரா. | |
| | இராசிச் சக்கரம் | | வியா. |
| | | | |
| | கேது | சூரி. ▲ புத. வெ. | செவ். |

10.11.2002இல் உத்தராடம் தனு இராசியில் சந்திரன் நிற்கும். 11.11.2002இல் விருச்சிகம் இராசிக்கு புதன் மாறும்.

**மாற்றம்:**

அரசியல் பேச்சு தொடரும். உலக நாடுகளின் உதவிகளால் ஒரு சுமுகநிலை தோன்றும். ஆயினும் தெற்கே அரசியல்வாதிகள், தொழிற்சங்கவாதிகள் மாறுபட்ட கருத்துக்களைப் பரப்புவார்கள். இதனால் ஆட்சி அரசுக்கு ஒரு கலக்கநிலை தோன்றும். இந்தியாவில் எதிர்க்கட்சிகள் வடக்கிலும, தெற்கிலும் வலுவடையும் நிலை தோன்றும். புதியவர்கள் அரசியலில் உட் பிரவேசித்துப் புகழ் அடைவார்கள். மத்திய கிழக்கில் தொடர்ந்து எதிர் விளைவுகள் யுத்த அபாயம் தோன்றும். மேற்கு நாடுகள் ஒரு தளம்பல் நிலைகளை உருவாக்கும். பாரசீகக் குடாவில் அமுக்கம் தோன்றலாம். இந்து, பசுபிக் பிராந்திய நாடுகள'ல் மழை, காற்றமுக்கம் அதிகரிக்கும் நிலை தோன்றும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

# இந்த வார இராசி பலன்

## 10.11.2002 ~ 17.11.2002

## மகாதேவா ஜோதிடம்

### மேடம்

சமூகக் கட்டுப்பாடு, பண்பாடு என்பதை எவரும் இலகுவில் உடைத்து விடமுடியாது. ஏன் தொழில் ஸ்தானத்தில் உள்ள வழமையான கட்டுப்பாடுகளை உங்களால்கூட மீறிவிடமுடியாத நிலையை உணர்வீர்கள். வாக்குச் சித்தியால் காரியனுகூலம், குடும்பக் கலகம், ஓடியாடித் திரிதல் என்பன இருக்கும். வயிற்று வருத்தம், செமியாக்குணம் ஏற்படும். இடம்பீகச் செலவுகள் அதிகரிக்கும். மாணவர்களுக்கு பல மாற்றங்கள் நண்பர்களின் உதவிகள் அதிகரித்தலும் இடமாற்றங்களும் ஏற்படும். செய்தித்துறை, விவசாயத்துறை, கமிஷன்துறை போன்ற துறை யினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், வெள்ளி.*

### இடபம்

கோயில்கள் கட்டுவதும், நடத்துவதும் பாவத்தைப் போக்குவதற்காகவா? அல்லது சேர்க்கவா? இச்செயற்பாட்டில் இன்று வியாபார நோக்கம் மலிந்து போயிருக்கின்றதை அறியக் கூடியதாக இருக்கின்றது. உங்கள் தொழில் ஸ்தானத்திலும் பல புதிய திட்டங்களைச் சிலர் போட்டு பணத்தைச் சம்பாதிக்கின்றார்கள். இடமாற்றம், புதிய செய்திகள், நண்பர்களின் உதவிகள் வரும். கால்வருத்தம், பித்தரோகம், படபடப்பு என்பனவரும். மாணவர்களுக்குப் புதிய பாடத் திட்டங்களால் நன்மைகள் ஏற்படும். பொருள் களவு சிலருக்கு ஏற்படும். இசைத்துறை, மருந்துப்பொருள்கள், பலசரக்கு வியாபாரம், வங்கித்துறை, ஹோட்டல் துறை போன்ற துறைகளைச் சார்ந்தவர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், வெள்ளி.*

### மிதுனம்

எந்தக் குடிகாரனுக்கும், அயோக்கியனுக்கும் ஓர் இதயம் உண்டு. விளங்காத மாதிரி பலர் சொல்லி விளங்குகின்றவர்களைக் குழப்பியடிக்கின்றார்கள். தொழில் ஸ்தானத்தில் ஒருவிதப் போட்டி வெறி உங்களுக்கு. ஆக்கத்தில் வெற்றி, வெறி ஏற்பட்டால் பாவமில்லை. அழிவில் ஏற்பட்டால், அலைச்சல், ஆசையால் துன்பம், புகழ்வெறி என்பன இருக்கும். கொடுக்கல் வாங்கலில் கவனக் குறைவு என்பன ஏற்படும். பிடிவாதத்தால் நஷ்டம் ஏற்படும். வெறுப்பான சிந்தனைகள், வீடு, வாகனச் செலவுகள் அதிகரிக்கும். செய்தித்துறை, வாகனத்துறை, குருத்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மை ஏற்படும். மாணவர்களுக்கு இடமாற்றம் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள்.*

### கடகம்

கவலைகள் வரும்பொழுது மயக்க நிலையிலிருக்க ஆண்கள், பெண்கள் விரும்புகின்றார்கள். ஆசைகளால் திடீர் திடீரென பிரச்சினைகள் புதிது புதிதாக உருவாகின்றன. காலை ஒரு எண்ணம் மாலை ஒரு கவலை மாறி மாறிவரும் இராசியாகும். தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்கள் உருவாகும். பணவரவு ஏற்படும். நண்பர்களுடன் வாக்குக் கலகம், சலவருத்தம், சளி வருத்தம் என்பன கொடுக்கும். மாணவர்கள் சித்தியடைவார்கள். பாதுகாப்புத்துறை, அரசியல்துறை, எண்ணெய்த்துறை போன்ற துறையினர்கள் நன்மையடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், வியாழன்.*

### சிங்கம்

கூக்குரல் எழுப்பினால்தான் காரியங்கள் நடக்கும். எந்தவொரு செயற்பாடுகளிலும் தொடர்ந்து போராடி, தனித்தோ, ஒருமித்தோ வெற்றி காண முயலவேண்டும். தொழில் ஸ்தானத்தில் உதவிகள் கிடைக்கும். பெரியவர்கள் வருகை, மறதியால் பொருள்கள் தவற இடமுண்டு. சகோதரர்களுக்கு நன்மைகள் ஏற்படும். சளித்தொல்லை, கால், தொண்டை வருத்தங்கள், உஷ்ணபீடைகள் என்பன ஏற்படும். மருந்துத்துறை, குருத்துறை, பாதுகாப்புத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள். மாணவர்களுக்குப் புதிய நன்மைகள் ஏற்பட இடமுண்டு.

*அதிர்ஷ்ட நாள்: வியாழன்.*

### கன்னி

துன்பத்தைச் சுமந்து கொண்டிருக்கும் எத்தனையோ பேர் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு அத்துன்பங்கள் எப்படி வந்தன? எப்படி வருகின்றன? அறிமுகங்களால் பல அலுவல்கள் தொழில் ஸ்தானத்தில் நடக்கும் உடல் நிலைச் சோர்வு, பொருள்நிலைப் போராட்டம், நண்பர்கள் உதவுதல், அரசாங்க அதிகாரிகள் உதவுதல், குடும்பத்தில் கலகலப்பு, புதிய செய்திகள் வரல் என்பன நடக்க இடம் உண்டு. நீதித்துறை, மின்சாரத்துறை, கலைத்துறை, சங்கீதத்துறை, தோட்டத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள். மாணவர்களுக்கு புதிய நண்பர்களின்-உதவிகளும், ஆசிரியர்களின் உதவிகளும் கிடைக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், வெள்ளி.*

### துலாம்

கல்வியின் பின்பு தொழில். தொழிலின் பின்பு திருமணம். திருமணத்தின் பின்பு.... இவ்வாறே வாழ்க்கை எல்லோருக்கும் தொடர்கதையாகிச் சென்றுகொண்டிருப்பது வழமையாகும். தொழில் ஸ்தானத்தில் புதிய மாற்றங்களால் நன்மைகள் ஏற்படும். குடும்பத்தில் அபிப்பிராயபேதம், தொடர்ந்து செலவுகள் அதிகரித்தல், நண்பர்களின் உதவிகள் கிடைத்தல், தலைவலி, குடல், சல வருத்தம், மனக் கவலை என்பன வரலாம். ஓய்வு முக்கியமாகும். தூரத்துச் செய்திகளால் பதட்டம் அடையாமல் விசாரித்து உண்மையறியவும். மாணவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். பெரியவர்களின் உதவிகள் கிடைக்கம்.

*அதிர்ஷ்ட நாள்கள்: ஞாயிறு, வியாழன், வெள்ளி.*

### விருச்சிகம்

சுயநலம் எல்லை மீறும்பொழுது வன்முறையில் தனது தேவைகளைப் பூர்த்திசெய்ய மனிதன் சிந்திக்கின்றான். களவு, வழிப்பறி, கொலை எண்ணங்கள் ஏன் ஏற்படுகின்றன? தூரத்துச் செய்திகள் மன ஆறுதல் தரும். பொருளில் அவதானம் இருக்கவும். உடல் நிலைச் சோர்வு, மூக்கு, நரம்பு, அடிவயிறு சம்பந்தமான வருத்தம் கொடுக்கும். இடமாற்றங்கள் நன்மை தரும். வாய்வுத் தொல்லையும் இடைக்கிடை வரும். மாணவர்களுக்குத் திறமைச் சித்தி, கல்விச் சிறப்பு வரும். அயலவர்களுடன் கவனமாக இருக்கவும். சந்தைத்துறை, தோட்டத்துறை, பாதுகாப்புத்துறை, இரும்புத்துறை, நகைத்துறை போன்றவர்களுக்கு நன்மைகள் அதிகரித்தபடி இருக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: ஞாயிறு, வியாழன், வெள்ளி.*

### தனுசு

வாழ்கையே ஒரு போராட்டமையம் தான். வெற்றி தோல்வியை நாம் சமப்படுத்தி வாழவேண்டும். மனிதனால் தாக்கக்கூடிய நிலையை பொறுமையுடன் சமநிலைப்படுத்தி சமாளித்து வாழவேண்டும். தொழில் ஸ்தானத்தில புதிய திட்டங்களை உருவாக்குவீர்கள். இடமாற்றம் ஏற்படும். பொருள் செலவுகள் அதிகரிக்கும். வீடு, வாகனச் சிறப்புக்கள் தோன்றும். தூரத்துச செய்திகள் மகிழ்ச்சி தரும். அரசியல் வாதிகளால் உதவிகள் கிடைகக்கும். பித்தவருத்தம், கைகால் உளைவு, சளித்தொல்லை வரும். மாணவர்களுக்கு உதவிகள் கிடைக்கும். நீதித்துறை, மருந்துத்துறை, குருத்துறை, பிரயாணத்துறை போன்ற துறையினர்கள் நன்மையடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: ஞாயிறு, திங்கள், வியாழன், வெள்ளி.*

### மகரம்

விதியின் சாயலில் நாம் எல்லோரும் வாழ்கின்றோம். நெடுந்தூரப் பயணத்தில் எவரும் முடிவு காணமுடியாது. எனவே தொழில் ஸ்தானத்தில் பலவித அபிப்பிராயத்தைச் செவிசாய்ப்பீர்கள். செலவுகள் அதிகரித்தல், மனச்சஞ்சலம் தோன்றும். கடன் சுமை சிலரைத் தடுமாறச் செய்யும். புதிய திட்டம் நண்பர்களின் உதவிகள் என்பன கிடைக்கும். கால் வருத்தம், நரம்புப் பலவீனம் ஏற்பட இடமுண்டு. பாதுகாப்புத்துறை, மின்சாரத்துறை, மருந்து வியாபாரம், இரும்பு வேலை செய்பவர்கள் போன்ற துறையினர்களுக்கு முன்னேற்றம். பொருள் வரவுகள் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் ஊக்கமடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், வியாழன், வெள்ளி.*

### கும்பம்

வாழ்க்கையுடன் சேவையும் தொடர வேண்டும். பொருளும் உழைக்க வேண்டும். அதனால்தான் நாம் எம்மைச் சமாளித்து வளரமுடியும். தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் அதிகரிக்கும். புதிய மாற்றங்களால் நன்மைகள் ஏற்படும். தொண்டைவரட்சி, கால் வீக்கம், மறதி, சளித்தொல்லை என்பன வரும். மாணவர்களுக்கு பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். குருத்துறை, அரசியல்துறை, கலைத்துறை, சந்தை வியாபாரத்துறை போன்றவர்களுக்கு பல மாற்றங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், வியாழன்.*

### மீனம்

லஞ்சம் கொடுப்பதுவும் குற்றம். வாங்குவதும் குற்றம். ஆனால் லஞ்சம் இல்லாமல் எந்த வேலையையும் எடுக்கமுடியாது போலிருக்கின்றது. நடைமுறைகள் மாற்றப்படாமல் தொடருமாயின் காசு நோட்டுக்களுக்கு மதிப்பில்லாமல் போய்விடும். வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும். அரசாங்க அதிகாரிகள் உதவிகள் செய்வார்கள். மாணவர்களுக்குப் புதிய நண்பர்களால் நன்மைகள் கிடைக்கும். கல்வியில் முன்னேற்றம் கொடுக்கும். இடுப்பு நோ, சளித்தொல்லை, மறதி, கால் வருத்தம் வரும். வியாபாரத்துறை, குருத்துறை, கடற்றுறை, பிரயாணத்துறை போன்ற துறையினர்கள் நன்மையடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், வியாழன்.*

---

# நில அளவைத் திணைக்களம் வரை படங்களை விநியோகிக்கும்!

இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினால் பாடசாலை மாணவர்களுக்கான வரை படத்தொடர்கள் மற்றும் ஏனைய வரைபடங்கள் ஆகியவற்றின் மேலும் ஒரு தொகுதி இங்கு எடுத்துவரப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்குப் பயன்படக்கூடியவையான தரைத் தோற்றமும் வடிகாலமைப்பும், மழைவீழ்ச்சி, கனிப்பொருள் வளங்கள், நிர்வாகப் பிரிவுகள் - மாகாணங்களும் மாவட்டங்களும், இயற்கைத் தாவரம் ஆகிய வரைபடத் தொடர்களும் -

ஏனையவர்களுக்கான செய்மதி விளம்பரப் படங்கள், வீதி வரைபடங்கள் (தமிழ், ஆங்கிலம்) நகர வரை படங்கள், சுற்றுலாப் பயணிகளுக்கான வரைபடங்கள், நிர்வாக வரைபடங்கள், பிரதேசவியல் வரைபடங்கள், உலக வரைபடங்கள், நீர்ப்பாசன அபிவிருத்தி வரைபடங்கள், நிலப்பயன்பாடு, வில்பத்து தேசிய பூங்கா, இலங்கையின் தேயிலை செய்கை வரைபடங்கள் ஆகியனவும் - எடுத்துவரப்பட்டுள்ளன என்றும் -

இந்த வரை படங்கள் தேவைப் படுவோர் யாழ். மாவட்ட நிலஅளவை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்றும் - யாழ். மாவட்ட நில அளவை அத்தியட்சகர் அறிவித்துள்ளார். (எ-4)

# வடக்கு ~ கிழக்கு புனரமைப்பு; ஜப்பான் நேரடி உதவி வழங்கும்

## அந்நாட்டு சமாதானத் தூதர் தெரிவிப்பு

கடந்த கால யுத்தத்தினால் பயங்கரமான அழிவுகளைக் கண்டுள்ள வடக்கு - கிழக்கு மாகாணத்தை மீளக் கட்டி எழுப்ப நேரடியாகப் பங்களிக்க விரும்புகின்றோம் என்று ஜப்பான நாட்டுச் சமாதானத் தூதர் யசூசி அக்காசி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய விசேட செய்தியாளர் மாநாடொன்றிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் பெரும்பாலான பகுதிகளுக்குச் சென்றேன். அங்குள்ள கோர அழிவுகளைக் கண்டேன்.

அந்த அழிவுகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த பல உதவிகளை வழங்க விருக்கிறோம்.

சமாதானப் பேச்சுக்களில் நோர்வே பங்களிப்பை வழங்கிவருகின்றது. அதே போன்று ஜப்பானும் பங்களிப்பை வழங்க விருக்கின்றது - என்றார் அவர். (எ-3)

# எங்கள் பண்பாடு கண்ட மகாநுபவர் துணைவேந்தர் பேராசிரியர் துரைராஜா

**யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அழகையா துரைராஜாவின் நினைவு தினம் இன்றாகும். அவரை நினைவு கூர்ந்து....**

*'முகமும் மனமும்*
*சொல்லும் செயலும்*
*மணியாய் இசைந்த*
*மகாநுபவ,*
*எங்கள்*
*மனதுள் நெருங்கிய தலைவ*
*மகிழ்வாய் இனிதே வாழி'*

வாழும்பொழுதுதே வாயார, மனதார எங்கள் பண்பாடு கண்ட உன்னத ஆளுமையான துணைவேந்தர் பேராசிரியர் துரைராசா அவர்கள் வாழ்த்திய கவிதை உயிர்ப்பு அது.

இன்றும் அதே உயிர்ப்புடன் அவரது நினைவுகளும் வாழ்த்தும் எங்களுக்குள் வாழ்கின்றது.

உலகப் புகழ்பெற்ற ஒரு பெரும் கல்வியாளன் - மண் பொறியியல் (Soil Engineering) ஆய்வில் மகத்தான கண்டுபிடிப்புக்களை மேற்கொண்ட விஞ்ஞானி, வெறும் 'மண்' பற்றிய ஆய்வுகளுடன் முடங்கி விடாமல் இந்த மண்ணின் மக்களை மேம்படுத்தும் சமூகப் பொறியிலாளனாகவும் (Social Engineer) விளங்கிய தன்மையினால்தான் அனைத்து மக்களினதும் அன்புக்குரியவரானார்.

பல்கலைக்கழகங்களைத் தந்த கோபுரங்களாகவும், அதன் உயர் அதிகாரிகளை சாதாரண மக்கள் நெருங்க முடியாத உச்சங்களாகவும் காணும் மரபு, எங்கள் பண்பாட்டுப் புலத்தினில் இயல்பாகவே மாற்றம் காணும். யாழ்ப்பாண வளாகத்தின் முதல் தலைமை பொறுப்பில் பேராசிரியர் கைலாசபதி அவர்களில தொடங்கிய இந்த சமூக பிணைப்பு, இன்றுவரை எங்கள் பல்கலைக்கழக - சமூக 'உறவு மேம்பாட்டில் பிரதிபலிக்கும்.

**கலாநிதி என்.சண்முகலிங்கன்**

'ஒருவரிடம் அதிகாரத்தைக் கொடுத்துப் பாருங்கள்; அப்பொழுது தான் அவரின் சுயரூபம் தெரியும்' - என்பார்கள். பேராசிரியர் துரைராசா அவர்களின் ஆளுமையில், மரபுவழி அதிகார நிர்வாக கோட்பாடுகளெல்லாம் அர்த்தமிழந்துபோக, அன்பும் பொறையும் ஆழ்ந்த உறுதியுமே அவரின் பண்புகளாக - ஒருவித அருளாட்சியாகவே - அவரது நிர்வாக பாங்கு அமைந்திருந்தது.

எளிமையான, இனிமையான அந்தச் சிரிப்பு, மனதை அப்படியே பிரதிபலித்து, ஆயிரம் கோடி சூரிய



பிரகாசமாய் நெஞ்சில் இன்றும் அதே வெளிச்சமும் குளுமையும் தருவதாய் அமையும்.

சொல்லும் செயலும் ஒன்றாய் இசைந்ததன்வண்ணம்.

நவீன வாழ்வின் மூடுதிரைகளை அறியாத அதேவேளை எந்த ஒரு நிலையிலும் தளராத கர்மயோகியான அவரது ஆளுமை உன்னதமானது.

மானுடத்தை மீட்க, இந்த மகாநுபாவர் ஆளுமை என்றென்றும் ஆதர்சமாவது. ✦

# இலங்கை தேசிய நிர்மாண சங்கம்

## வட மாகாணக் கிளையின்

## வருடாந்தக் கூட்டம் 10-11-2002 மு.ப. 10 மணி

**நிகழ்வுகள்**

1. மௌன இறைவணக்கம்
2. வரவேற்புரை
3. பிரதம விருந்தினர் உரை - திரு.செ.பத்மநாதன் (அரசஅதிபர், யாழ்ப்பாணம்)
4. அதிதிப் பேச்சாளர் உரை - எந்திரி என்.தேவராஜன் (ஓய்வுபெற்ற பொறியியலாளர்)

**SUBJECT: "AN ENGINEERS VIEW OF DEVELOPING NORTH"**

5. நிர்மாண உற்பத்திப் பொருள்களின் செயன்முறைக்காட்சி
6. நன்றியுரை
7. மதிய விருந்து
8. தலைமையுரை
9. கடந்தவருட பொதுக்கூட்ட அறிக்கை.
10. கடந்தவருட பொதுக்கூட்ட அறிக்கையிலிருந்து எழும் விடயங்கள்.
11. வருடாந்த செயற்பாட்டு அறிக்கை.
12. பொருளாளர் அறிக்கை சமர்ப்பித்தல்.
13. பொருளாளர் அறிக்கையிலிருந்து எழும் விடயங்கள்.
14. புதிய நிர்வாக உத்தியோகத்தர் தெரிவு.
15. பிறவிடயங்கள்.
16. நன்றியுரை.

- செயலாளர்.

**CIC பெயின்ற், Black & Decker, Dewalt உபகரண முகவர்கள் Delmege மற்றும் Delmage Interior Decor ஸ்தாபனத்தாரின் விளம்பர விவரண விளக்க நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம்.**

அனுசரணை:

# CIC Paints

# Delmage General Euquipment (pvt) Ltd.

*விளம்பர அன்பளிப்பு:*

ORDINARY PORTLAND CEMENT
DIAMOND
LANKA CEMENT LIMITED

**டயமண்ட் சிமெந்து இறக்குமதியாளர்கள்**

**லங்கா சிமென்ற் லிமிடெட்**

திருப்பதி, இணுவில் வீதி, சுன்னாகம். 0777 71224

பொதுசன நூலகம்

# மீட்புநிதி மீளப்பெறுவோர் விவரம்

## வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவு

| | |
|---|---|
| (வே/206) | திருமதி வனிதாமலர் செல்வராஜா |
| (வே/210) | சரவணமுத்து கனகரத்தினம் |
| (வே/212) | ஆனந்தநடராசா வசந்தரூபன் |
| (வே/218) | திருமதி விக்கினேஸ்வரி பரமேஸ்வரன் |
| (வே/220) | முருகேசு திருநாவுக்கரசு |
| (வே/221) | கதிரவேலு பரமலிங்கம் |
| (வே/222) | இளையதம்பி கணேசபிள்ளை |
| (வே/231) | திருமதி தவமணி நவசிவாயம் |
| (வே/232) | திருமதி சிவமலர் சண்முகானந்தவேல் |
| (வே/270) | ஆறுமுகம் தர்மபாலன் |
| (வே/276) | இராமச்சந்திரன் தெய்வேந்திரம்பிள்ளை |
| (வே/280) | ஆறுமுகம் சிவசுப்பிரமணியம் |
| (வே/291) | தம்பையா மகாலிங்கசிவம் |
| (வே/297) | திருமதி சந்திரவதனா நடேசன் |
| (வே/308) | பூதத்தம்பி ஆறுமுகம் |
| (வே/316) | திருமதி ஸ்ரீரங்கநாயகி சபாரத்தினம் |
| (வே/343) | செல்லத்துரை பரஞ்சோதிநாதன் |
| (வே/355) | திருமதி அருந்ததி கதிர்காமநாதன் |
| (வே/357) | செல்வி சசிகலா குணரட்ணம் |
| (வே/386) | திருமதி புஸ்பராணி குமாரசாமி |
| (வே/393) | திருமதி மரகதம் இராஜேந்திரம் |
| (வே/401) | திருமதி இலட்சுமி நல்லையா |
| (வே/423) | திருமதி சிவகெங்கேஸ்வரி சதானந்தலிங்கம் |
| (வே/433) | கணபதிப்பிள்ளை உலகநாதன் |
| (வே/438) | மாணிக்கம் ஜெயக்குமார் |
| (வே/458) | நாகநாதி தம்பிஐயா |
| (வே/499) | திருமதி தெய்வானை ஆறுமுகம் |
| (வே/512) | திருமதி மனோன்மணி சுப்பிரமணியம் |
| (வே/517) | திருமதி சத்தியவதி சங்கரலிங்கம் |
| (வே/526) | திருமதி இராசேஸ்வரி குருநாதன் |
| (வே/538) | திருமதி கமலாதேவி பாலசிங்கம் |
| (வே/540) | திருமதி இராசமணி நாகேசு |
| (வே/557) | திருமதி இராசம்மா சண்முகம் |
| (வே/576) | திருமதி குணகுந்தம்மா மாட்டீன் |
| (வே/577) | திருமதி மகேஸ்வரி தம்பியையா |
| (வே/588) | செல்வி சிவசக்தி பொன்னையா |
| (வே/591) | சிற்றம்பலம் பத்மநாதன் |
| (வே/592) | திருமதி கமலரத்தினம் தனிநாயகம் |
| (வே/597) | திருமதி புவனேஸ்வரி நடராசா |
| (வே/617) | திருமதி கமலாதேவி குணபாலச்சந்திரன் |
| (வே/635) | திருமதி அருந்தவநாயகி காராளபிள்ளை |
| (வே/640) | திருமதி புவனேஸ்வரி கனகலிங்கம் |
| (வே/641) | பொன்னையா கனகரட்ணம் |
| (வே/651) | திருமதி யோகேஸ்வரி கிருபானந்தன் |
| (வே/681) | சதாசிவக்குருக்கள் சிவசுப்பிரமணியக் குருக்கள் |
| (வே/692) | பொன்னையா நாகரெத்தினம் |
| (வே/698) | திருமதி கண்ணம்மா செல்லத்துரை |
| (வே/709) | செல்வி இராஜேஸ்வரி செல்லையா |
| (வே/713) | திருமதி நாகமுத்து சின்னையா |
| (வே/718) | திருமதி புனிதவதி சிவகணநாதன் |
| (வே/721) | திருமதி மங்கையர்க்கரசி சுப்பிரமணியம் |
| (வே/742) | திருமதி புனிதவதி இராசரத்தினம் |
| (வே/745) | திருமதி சீதேவிப்பிள்ளை இராசையா |
| (வே/754) | திருமதி கலாவதி செல்வகுணராஜா |
| (வே/763) | திருமதி அன்னலெட்சுமி நவரத்தினசிங்கம் |
| (வே/780) | திருமதி செல்வராணி ஐயாத்துரை |
| (வே/783) | திருமதி பங்கயற்செல்வி கண்ணையா |
| (வே/786) | திருமதி கமலாம்பாள் சதாசிவம் |
| (வே/800) | திருமதி புஸ்பராணி குணரெத்தினம் |
| (வே/802) | திருமதி கமலாதேவி சுந்தரம்பிள்ளை |
| (வே/805) | செல்வி குழந்தினி சாம்பசிவம் |
| (வே/818) | திருமதி நாகம்மா சோதிராசா |
| (வே/824) | திருமதி சற்குணம் திருச்செல்வம் |
| (வே/829) | திருமதி யோகேஸ்வரி பேரம்பலம் |
| (வே/833) | திருமதி பங்கையாசினி மாணிக்கம் |
| (வே/835) | திருமதி லூயிசா கிறிஸ்தோத்திரம் |
| (வே/842) | திருமதி கிருபாமணி வரதராசன் |
| (வே/872) | திருமதி சரஸ்வதி மகேஸ்வரன் |
| (வே/890) | நாகலிங்கம் பாலசிங்கம் |
| (வே/897) | திருமதி செல்லம்மா அம்பலவாணர் |
| (வே/937) | தம்பாப்பிள்ளை ஆத்மசுரன் |
| (வே/954) | திருமதி கந்தசோதி சரவணபவன் |
| (வே/958) | செல்வி மாயா சோமசுந்தரம் |
| (வே/959) | தம்பு மாணிக்கம் |
| (வே/996) | கந்தையா சிவசரணம் |
| (வே/1005) | செல்வி மகாலட்சுமி இரத்தினம் |
| (வே/1023) | திருமதி இந்திராதேவி விக்னேஸ்வரராசா |
| (வே/1100) | இராஜதுரை விஜேந்திரன் |
| (வே/1121) | வெற்றிவேலு காந்தமூர்த்தி |
| (வே/1194) | திருமதி திலகவதி அருணகிரி |
| (வே/1222) | பரமலிங்கம் தவராசா |
| (வே/1264) | சபாபதி முருகேசு முத்துலிங்கம் |
| (வே/1271) | திருமதி மகாலெட்சுமி சிவநாதன் |
| (வே/1275) | திருமதி சிவக்கொழுந்து பாலசிங்கம் |
| (வே/1282) | திருமதி சுஜாதா சதாசிவலிங்கம் |
| (வே/1284) | கந்தையா சண்முகம் |
| (வே/1346) | சுப்பையா பற்குணராஜா |
| (வே/1386) | திருமதி சிவாஜினி தயாபரன் |
| (வே/1399) | திருமதி கிருஸ்ணாம்பாள் தவவிநாயகம் |
| (வே/1405) | திருமதி சியாமளா குலேந்திரா |
| (வே/1409) | வைத்திலிங்கம் வேலாயுதபிள்ளை |
| (வே/1415) | திருமதி பியற்றீஸ் குணரட்ணம் |
| (வே/1417) | பூலோகராசா தர்மகுணராசா |
| (வே/1451) | செபஸ்ரியான்பிள்ளை கிறகரி |
| (வே/1467) | திருமதி சௌந்தரம் கந்தையா |
| (வே/1481) | சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை |
| (வே/1482) | திருமதி வில்லியூஸ்மரியை அருளானந்தம் |
| (வே/1484) | திருமதி மகாலெட்சுமி கோபாலபிள்ளை |
| (வே/1499) | முத்தையா பஞ்சசோதி |
| (வே/1513) | திருமதி பராசக்தி தம்பிஐயா |
| (வே/1521) | சூசைப்பிள்ளை தேவசகாயம் |
| (வே/1524) | நாகமணி தவலிங்கம் |
| (வே/1597) | திருமதி சின்னம்மா நாகரெத்தினம் |
| (வே/1618) | ஆறுமுகம் அருளம்பலம் |
| (வே/1712) | ஆறுமுகம் இராசலிங்கம் |
| (வே/1758) | திருமதி சிவக்கொழுந்து சுப்பிரமணியம் |
| (வே/1761) | அம்பலவாணர் வைரமுத்து |
| (வே/1791) | திருமதி யோகேஸ்வரி சிவராசா |
| (வே/1828) | சவிரி அந்தோனி பேர்னாந்து |
| (வே/1833) | திருமதி கண்மணி நாகராசா |
| (வே/1853) | நாகநாதி மதியாபரணம் |
| (வே/1863) | திருமதி மனோரஞ்சினி சிவராமலிங்கம் |
| (வே/1885) | திருமதி தங்கம்மா கார்த்திகேசு |
| (வே/1887) | திருமதி சிவபாக்கியம் செல்லையா |
| (வே/1934) | பரமலிங்கம் கருணானந்தன் |
| (வே/2004) | திருமதி பாக்கியம் கந்தையா |
| (வே/2012) | செல்வி தவமலர் சிவஞானம் |
| (வே/2034) | பெஞ்சமின் அந்தோனிப்பிள்ளை |
| (வே/2069) | திருமதி இராசம்மா சுந்தரமூர்த்தி |
| (வே/2099) | திருமதி புவனேஸ்வரி சோமசுந்தரம் |
| (வே/2189) | திருமதி செல்லம்மா சின்னத்துரை |
| (வே/2246) | கோபாலப்பிள்ளை முருகதாஸ் |
| (வே/2345) | திருமதி மல்லிகா விக்கினராசா |
| (வே/2390) | சிவப்பிரகாசம் கனகசபாபதி |
| (வே/2403) | சின்னத்தம்பி கந்தவனம் |
| (வே/2421) | பசுபதிப்பிள்ளை கனகலிங்கம் |
| (வே/2435) | திருமதி பத்மாவதி முதலித்தம்பி |
| (வே/2437) | குருசுமுத்து அல்பிறேட் |
| (வே/2439) | திருமதி இரத்தினம் கதிரவேலு |
| (வே/2445) | திருமதி விஜயலட்சுமி பாலச்சந்திரன் |
| (வே/2462) | திருமதி இராஜேஸ்வரி தெய்வேந்திரன் |
| (வே/2519) | செல்வி ஜெயகௌரி கனகசபை |
| (வே/2544) | திருமதி திருப்பதி குணரெத்தினம் |
| (வே/2574) | திருமதி கனகாம்பிகை கந்தையா |
| (வே/2577) | பொன்னையா சபாரட்ணசிங்கம் |
| (வே/2601) | செல்வி மங்களநாயகி சோமசுந்தரம் |
| (வே/2605) | திருமதி ஜீவேஸ்வரி செல்வரட்ணம் |
| (வே/2618) | திருமதி மொனிக்கம்மா அமிர்தநாதன் |
| (வே/2624) | செல்வி புஸ்பராணி கனகரத்தினம் |
| (வே/2630) | செல்வி உமாஸ்ரீ கந்தசாமி |
| (வே/2635) | திருமதி இராஜேஸ்வரி அழகியநாதன் |
| (வே/2683) | பிரான்சிஸ் கிறிஸ்ரி வேதநாயகம் |
| (வே/2697) | திருமதி மேரிஸ்ரெலா ரனிஸ்லொஸ் |
| (வே/2711) | திருமதி நகுலேஸ்வரி சாம்பசிவம் |
| (வே/2718) | திருமதி நிர்மலா நடனசபாபதி |
| (வே/2744) | பாலசிங்கம் தில்லைச்சிவன் |
| (வே/2750) | விஸ்வலிங்கம் கந்தையா |
| (வே/2802) | செபஸ்தியாம்பிள்ளை பிரான்சிஸ் |
| (வே/2810) | திருமதி வேதவல்லி வீரகத்தி |
| (வே/2885) | வேலுப்பிள்ளை சேதுகாவலன் |

## வெளியகல்வு

| | |
|---|---|
| (வெ/2) | திருமதி அன்னம்மா செபஸ்தியாம்பிள்ளை |
| (வெ/4) | திருமதி புஸ்பராணி ஸ்ரீகுணநாதன் |
| (வெ/6) | முருகேசபிள்ளை சந்திரகுமார் |
| (வெ/7) | விசுவலிங்கம் பிரபாகரன் |
| (வெ/8) | சுவாமிநாதன் பாலேந்திரா |
| (வெ/9) | திருமதி கமலாசினி ஸ்கந்தராசா |
| (வெ/15) | திரமதி சுதந்திரா செல்வலிங்கம் |
| (வெ/16) | சுப்பிரமணியம் யோகரத்தினம் |
| (வெ/17) | திருமதி மேரிமாக்கிரட் சுவாம்பிள்ளை |
| (வெ/18) | நாகலிங்கம் இரத்தினம் |
| (வெ/19) | திருமதி சூசன் சுகிர்தம் சில்வஸ்ரர் |
| (வெ/20) | திருமதி மரியா இனசன்ரீனா மரியாம்பிள்ளை |
| (வெ/21) | திருமதி கமலாதேவி கோபாலரத்தினம் |
| (வெ/23) | திருமதி சிவபாக்கியயோகேஸ்வரி இராசலிங்கம் |
| (வெ/24) | திருநாவுக்கரசு சிறிதரன் |
| (வெ/27) | திருமதி மங்கையற்கரசி இரட்ணசிங்கம் |
| (வெ/28) | திருமதி ஜெயபதி தயாபரன் |
| (வெ/29) | செல்வி யசிந்திரா துரைசிங்கம் |
| (வெ/30) | பொன்னம்பலம் சொர்ணலிங்கம் |
| (வெ/32) | நாகலிங்கம் தனபாலசிங்கம் |
| (வெ/34) | திருமதி இராஜலக்சுமி விஜயசூரியர் |
| (வெ/38) | வேலுப்பிள்ளை ஆனந்தராசா |
| (வெ/41) | திருமதி சுமேத்திரா கணேசமூர்த்தி |
| (வெ/42) | திருமதி ஆனந்தி ஜெயதீசன் |
| (வெ/45) | செல்வி அருள்விழி அருளலிங்கம் |
| (வெ/47) | திருமதி ரூபினி பாலச்சந்திரா |
| (வெ/50) | பாலசிங்கம் கிரிகாலன் |
| (வெ/52) | செல்வி காவேரி கந்தையா |
| (வெ/53) | இராமலிங்கம் மார்க்கண்டு |
| (வெ/54) | செல்வி தேவராணி வைத்திலிங்கம் |
| (வெ/55) | வைத்திலிங்கம் இரகுநாதமுதலியார் |
| (வெ/59) | திருமதி பத்மலோசனா இரவீந்திரன் |
| (வெ/61) | திருமதி சகுந்தலாதேவி சச்சிதானந்தசிவம் |
| (வெ/63) | செல்வி மங்களேஸ்வரி இராமதாஸ் |
| (வெ/64) | திருமதி சுமதி செல்வகுமார் |
| (வெ/65) | கணபதிப்பிள்ளை விக்கினராசா |
| (வெ/69) | அருளானந்தசிவம் சூரசங்காரசிவம் |
| (வெ/70) | திருமதி விஜயரூபி மகேந்திரன் |
| (வெ/71) | திருமதி புவனேஸ்வரி ஞானலிங்கம் |
| (வெ/73) | திருமதி வடிவாம்பிகை கணேசன் |
| (வெ/75) | திருமதி யோன்ஓஸ்ஆர்த் ஞானப்பிரகாசம் |
| (வெ/78) | பொன்னையா முருகேசப்பிள்ளை |
| (வெ/79) | தம்பிப்பிள்ளை வரதராஜா |
| (வெ/86) | திருமதி தமயந்தி சந்திரபாலன் |
| (வெ/92) | சண்முகம் பூபாலசிங்கம் |
| (வெ/95) | வயிரகப்பிள்ளை பாலசுப்பிரமணியம் |
| (வெ/96) | திருமதி பரமேஸ்வரி சிவபாதம் |
| (வெ/100) | திருமதி முத்துமலா விஜயரத்தினம் |
| (வெ/104) | திருமதி கலைசுரூபவதி சாம்பசிவம் |
| (வெ/108) | ஜேம்ஸ் பிலிப்ஸ் |
| (வெ/109) | மயில்வாகனம் சுந்தரலிங்கம் |
| (வெ/110) | திருமதி ஷாந்தினி தயாபாலசூரியர் |
| (வெ/111) | திருமதி சாந்தினி கணேசசுந்தரம் |
| (வெ/113) | திருமதி தருமராணி சிற்சபேசன் |
| (வெ/114) | திருமதி வனிதாமணி செல்வராசா |
| (வெ/117) | அப்புத்துரை நித்தியானந்தன் |
| (வெ/121) | திருமதி வசந்திராதேவி பரிமேலழகனார் |
| (வெ/124) | திருமதி எவரெஸ்ரா தோமஸ்அன்ரனி |
| (வெ/126) | சோமசுந்தரம் கணேசமூர்த்தி |
| (வெ/133) | ஜீவராஜா அஜித்நியூட்டன் |
| (வெ/134) | சிமியோன் மரியதாசன் |
| (வெ/138) | கந்தையா மார்க்கண்டு |
| (வெ/141) | திருமதி சின்னம்மா றேமன் |
| (வெ/142) | காசிநாதர் சோமசுந்தரம் |
| (வெ/143) | அம்பலவாணர் பவளத்துரை |
| (வெ/145) | சின்னத்தம்பி கணேசன் |
| (வெ/147) | திருமதி ஞானாம்பிகை பத்மசிகாமணி |
| (வெ/148) | தெய்வேந்திரன் ரவீந்திரன் |
| (வெ/150) | திருமதி கருணைநாயகி சீவரத்தினம் |
| (வெ/152) | திருமதி மங்கையற்கரசி செல்லத்துரை |
| (வெ/155) | செல்வி ஜனனி இராமநாதன் |
| (வெ/162) | செல்வி கம்சா இரத்தினநாயகம் |
| (வெ/174) | திருமதி சுவேந்தினி செல்வநாயகம் |
| (வெ/176) | சுப்பிரமணியம் இரத்தினம் |
| (வெ/177) | திருமதி கெங்காராணி பாலகிருஷ்ணன் |
| (வெ/1043) | கந்தையா விஸ்வலிங்கம் |
| (வெ/1050) | திருமதி தெய்வானைப்பிள்ளை கைலாசபிள்ளை |
| (வெ/1051) | திருமதி லிங்கேஸ்வரி குலசிங்கம் |
| (வெ/1054) | திருமதி பவளகாந்தி கதிர்காமநாதன் |
| (வெ/1058) | பொன்னையா பாலசுப்பிரமணியம் |
| (வெ/1059) | திருமதி மாலதி தெய்வேந்திரன் |
| (வெ/1064) | திருமதி நிர்மலாதேவி சண்முகராசா |
| (வெ/1065) | செல்வி தேவரஜனி பாலராஜா |
| (வெ/1070) | செல்வி விஜெயநிர்மலா கார்த்திகேசு |
| (வெ/1072) | தங்கராசா செல்வரட்ணம் |
| (வெ/1073) | தர்மலிங்கம் இரட்ணசிங்கம் |
| (வெ/1075) | சின்னத்தம்பி தியாகராசா |
| (வெ/1076) | திருமதி வினோதினி பத்திநாதர் |
| (வெ/1079) | திருமதி குணமணி நாகராசா |
| (வெ/1082) | சிவசிங்கம் புஸ்பராசா |
| (வெ/1089) | கிரகரி செபஸ்தியாம்பிள்ளை |
| (வெ/1091) | திருமதி சித்தியா இராசநாயகம் |
| (வெ/1094) | திருமதி சந்திரவதனா இராமநாதன் |
| (வெ/1095) | ஆரோக்கியம் யோசவ் யேசுதாசன் |
| (வெ/1098) | சுந்தரம் அருணகிரிராஜா |
| (வெ/1103) | திருஞானசம்பந்தர் யஸ்மின் நாயக்க பாபு |
| (வெ/1105) | திருமதி கிரசன்சியாடாமினி இராசையா |
| (வெ/1108) | திருமதி சிவபாக்கியம் சபாரத்தினம் |
| (வெ/1111) | திருமதி லலிதாதேவி நிற்சிங்கம் |
| (வெ/1112) | கந்தையா செல்லத்துரை |
| (வெ/1114) | திருமதி மகேஸ்வரி விக்னேஸ்வரன் |
| (வெ/1116) | திருமதி தேவசரோஜா சிறீஸ்காந்தன் |
| (வெ/1117) | ஜெகசோதி பாஸ்கல் ஜெயானந்தன் |
| (வெ/1118) | கதிர்காமு செல்லையா |
| (வெ/1119) | திருமதி சுகுணவதி துரைராசா |
| (வெ/1121) | வன்னியசேகரம் கருணைநாதன் |
| (வெ/1125) | தம்பிப்பிள்ளை சொக்கலிங்கம் |
| (வெ/1126) | கதிரவேலு மோகனதாஸ் |
| (வெ/1128) | திருமதி அனந்தலட்சுமி அம்பாள் தங்கசாமி ஐயர் |
| (வெ/1129) | திருமதி நந்தினி பாஸ்கரன் |
| (வெ/1130) | திருமதி பவானி நடராசா |
| (வெ/1131) | சுப்பிரமணியம் பத்மநாதன் |
| (வெ/1133) | திருமதி பிறேமினி மோசஸ் |
| (வெ/1136) | வினாசித்தம்பி பாலச்சந்திரன் |
| (வெ/1146) | திருமதி நாகராஜேஸ்வரி பரராசசேகரம் |
| (வெ/1147) | திருமதி இராணி தயாளன் |
| (வெ/1151) | திருமதி மகாலட்சுமி இராமநாதன் |
| (வெ/1152) | திருமதி இராஜேஸ்வரி நடராசா |
| (வெ/1155) | திருமதி பெருந்தவச்செல்வி சிறீதிருஸ்ணகுமார் |
| (வெ/1156) | சோமஸ்கந்தசர்மா சசீகரன் |
| (வெ/1158) | திருமதி செந்திலரசி சிவதாசன் |
| (வெ/1159) | திருமதி சுசீலாவதி பாலச்சந்திரன் |
| (வெ/1163) | திருமதி தேவகி செல்வவிநாயகப்பிரகாசம் |
| (வெ/1166) | தெய்வேந்திரம் ஜீவரஞ்சிதன் |
| (வெ/1168) | அந்தோனிப்பிள்ளை மரியதாசன் |
| (வெ/1169) | திருமதி அருந்தவமலர் கனகசிங்கம் |
| (வெ/1172) | குமாரசாமி இரகுநாதன் |
| (வெ/1173) | சுப்பிரமணியம் சர்வேஸ்வரன் |
| (வெ/1176) | செல்வி யசோதரா பொன்னுத்துரை |
| (வெ/1183) | சின்னத்துரை சிவலிங்கம் |
| (வெ/1184) | திருமதி அசோகராணி நடராசா |
| (வெ/1185) | கணபதிப்பிள்ளை கணேசரட்ணம் |
| (வெ/1188) | வேலாயுதம் கருணாகரன் |
| (வெ/1191) | திருமதி மாருதப்புரவீகவல்லி பாலசிங்கம் |
| (வெ/1200) | பொன்னுத்துரை இராஜேஸ்வரன் |
| (வெ/1201) | செல்லத்துரை இராஜேந்திரா |
| (வெ/1203) | சரவணபவான் செந்தூர்ச்செல்வன் |
| (வெ/1205) | சரவணமுத்து குமாரதேவா |
| (வெ/1207) | அப்புத்துரை சொலமன் பாலச்சந்திரன் |
| (வெ/1209) | திருமதி நாகரத்தினம் பாலசுப்பிரமணியம் |
| (வெ/1217) | செல்வி திலகராணி மயில்வாகனம் |
| (வெ/1221) | துரைசாமி பாலசிங்கம் |
| (வெ/1224) | இராசரத்தினம் அரசரத்தினம் |
| (வெ/1228) | செல்லத்துரை சூரியகுமார் |
| (வெ/1230) | திருமதி சிறீரஞ்சனா கமலநாதன் |
| (வெ/1233) | வில்பிரட் ஜெயராசா சொலமன்ஸ் |
| (வெ/1234) | திருமதி நிர்மலாதேவி சதானந்தா |
| (வெ/1235) | முருகேசு நரேந்திரன் |
| (வெ/1236) | செல்வி சிவசுதா இரகுநாதன் |
| (வெ/1238) | கந்தப்பு சுப்பிரமணியம் |
| (வெ/1242) | சுப்பையா யோகரட்ணம் |
| (வெ/1245) | திருமதி மேரிமாகிரேற் தவராசா |
| (வெ/1251) | பூமகள் நடராசா |
| (வெ/1253) | திருமதி தவமணி ஜெயக்கொடி |
| (வெ/1255) | திருமதி விக்னேஸ்வரி குணரட்ணம் |
| (வெ/1256) | செல்லையாஐயர் சிதம்பரஐயர் |
| (வெ/1261) | திருமதி இரஞ்சிதமலர் சத்தியசீலன் |
| (வெ/1263) | திருமதி சிவகாமசுந்தரி அண்ணாமலை |
| (வெ/1266) | திருமதி ரஜனி ஏகாம்பரநாதன் |
| (வெ/1267) | திருமதி வசந்தி பாலரட்ணம் |
| (வெ/1269) | திருமதி அனுஷா மகேந்திரன் |
| (வெ/1272) | திருமதி சுசீலா சிறிபத்மநாதன் |
| (வெ/1274) | திருமதி யோகராணி ஜீவரட்ணம் |

(10ஆம் பக்கம் பார்க்க)

# ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சை

வலிகாமம் தெற்கு,நவ.10 வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளின் தரம் 3 தொடக்கம் தரம் 10 வரையிலான வகுப்புகளுக்குரிய வலயமட்ட ஆண்டிறுதிப் பரீட்சைகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

தரம் மூன்று தொடக்கம் தரம் ஐந்து வரையான வகுப்புகளுக்குரிய பரீட்சைகள் 20 ஆம், 21 ஆம், 22 ஆம், திகதிகளில் நடைபெறும். (எ-15)

## ஜப்பானியக்குழு தென்மராட்சிக்கும் விஜயம்

யாழ்ப்பாணம் விஜயம் செய்த ஜப்பானிய தூதுக்குழு கடந்த வியாழக்கிழமை பிற்பகல் தென்மராட்சிக்கு விஜயம் செய்தது.

இந்தக்குழுவினர் போரினால் அழிவுற்றுள்ள தென்மராட்சியின் பல பகுதிகளுக்கும் சென்று சேதங்களைப பார்வையிட்டனர். (எ-31)


அஜி தொலைத் தொடர்பகம்

குறைந்த கட்டணத்தில்

தொலைத் தொடர்புக்கு நாடவேண்டிய இடம்:

அஜி தொலைத் தொடர்பகம்

உள்நாட்டு, வெளிநாட்டுத் தொடர்பினைக் குறைந்த கட்டணத்தில் பேசுவதற்கு உரிய இடம்

அஜி தொலைத் தொடர்பகம்

தொலைபேசி இல. 0094 70212314

0094 21 222 52

FAX No.: 0094 21 22

அஜி தொலைத் தொடர்பகம்

ஜெயந்தி மில்,

பிரதான வீதி, கு

உ
வல்வை வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான

சூரசம்ஹார விழா

மேற்படி ஆலய சூரசம்ஹார விழா

இன்று மாலை 5 மணியளவில் வெகு சிறப்பாக நடைபெறும்.

விசேட நிகழ்வாக

சூரபன்மன் சக்கரவாகபட்சி ரூபமாக இயந்திர உதவியுடன் பறக்கும் காட்சி இடம்பெறும்.

(10444) - ஆதீன கர்த்தா.

Screen Printing

பரதன் மாஸ்ரர்

எல்லாப் பொருள்களிலும் 4வர்ணங்களில் ஸ்கிறீன் பிறின்ரிங் (குறிப்பாக CDகளில்) பயிற்சி நெறி

ஆரம்பம்: 22-11-2002

தொடர்பு:

CAREER.COM INSTITUTE

79, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

அலுவலக நேரம்:

Mon., Wed., Fri. 10 - 2 மணி

Sat., Sun. 9 - 4 மணி. (10257)

உ
சிவமயம்

திருமணத் திருமுகம்

அன்புடையீர்!

நிகழும் சர்வமங்களகரமான சித்திரபானு வருடம் ஐப்பசித் திங்கள் 24ஆம் நாள் இன்று (10.11.2002) ஞாயிற்றுக்கிழமை உத்தராட நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய முற்பகல் 11.20 மணிமுதல் 12.19 மணிவரையுள்ள சுபமுகூர்த்த நல்வேளையில்

திரு.திருமதி கதிரமலை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் திருநிறைசெல்வன்

நிமலாகரன் (கிருபா) அவர்களுக்கும்



திரு.திருமதி நாகமணி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி திருநிறைசெல்வி

சுகிதா அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு திருமாங்கல்யதாரணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு சுவிஸில் திருமணம் நடைபெறுகின்றது என்பதை எமது உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

திருமணம் நடைபெறுமிடம்:

Katholisehes Pfarraml St.Laurentius Ober Fldweg 15,8408 Winterthur

(Winterthur புகையிரத நிலையத்திலிருந்து Wuiflingen நோக்கிச் செல்லும் 2ஆம் இலக்க பஸ்ஸில் 4ஆவது தரிப்பிடமான Ober Feldஇல் இறங்கவும். காரில் வருபவர்கள் Wuiflingen Ausfahrt Stad - Zentrum Winterthur வரும் முதலாவது Signal)

வரும் 13.11.2002 புதன்கிழமை இல.100, கடல்முக வீதி, திருகோணமலையில் அமைந்துள்ள மணமகனின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் விருந்துபசாரத்தில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து சிறப்பிக்குமவண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி கதிரமலை பூமணி குடும்பத்தினர்
இல.100, கடல்முக வீதி,
திருகோணமலை, இலங்கை.

திரு.நாகமணி குடும்பத்தினர்
சங்கானை,
இலங்கை.

(இரு வீட்டார் அழைப்பு) (10341)

யா/டிறிபேக் கல்லூரி

பழைய மாணவர் சங்கம் வேண்டுகோள்

☆ இடம்பெயர்ந்து வேறு இடங்களில் இன்னும் வசித்துவரும் உறுப்பினர்கள் தமது தற்போதைய முகவரிகளைத் தந்துதவவும்.

☆ கல்லூரியின் வரலாற்றுப் பதிவேடுகள் யாவும் அழிந்துவிட்டமையால் அவை தொடர்பான வெளியீடுகள், ஆவணங்கள், பதிவேடுகள் போன்றவற்றை வைத்திருப்போர் எமக்குத் தந்துதவவும்.

☆ அழிவடைந்த நூலகம் மீண்டும் புனரமைக்கப்பட்டு வருவதால் உறுப்பினரிடமிருந்து பயன்தரு நூல்களை எதிர்பார்க்கின்றோம். கல்லூரி மாணவரிடம்/ஆசிரியரிடம்/அலுவலகத்தில் ஒப்படைத்து உதவவும்.

(10433) இணைச்செயலர்.

தமிழின் சிறப்பு யாழ்ப்பாணம்...
கற்றாளைச்சாற்றின் சிறப்பு
போரோசொப்ட் சோப்




மிருதுவான, தூய்மையான, அழகிய சருமத்திற்கு கற்றாளைச்சாறு, கொகும்பட்டர், கிளிசரீன் அடங்கிய வாசனை சோப்.

சகல விதமான சருமங்களுக்கும் ஏற்ப சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது.

எமது தயாரிப்புக்களை கீழ்வரும் பல்பொருள் சுப்பர்மார்க்கட் கிளைகளிலும் மற்றும் அதன் பிராந்திய கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், நல்லூர், பருத்தித்துறை, நெல்லியடி, உடுப்பிட்டி, நீர்வேலி, அச்சுவேலி

ஏக விநியோகஸ்தர்:- JEGHAN PHARMACY
No.462/B, Hospital Road, Jaffna. Tel:021-2194, 3181

ரஷ்யாவில் உயர்கல்வி

மருத்துவத்தில் MD

(ஆங்கில மூலமானது)

KURSK STATE மருத்துவப் பல்கலைக்கழகம் WHO இலங்கை மருத்துவக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

★ ஆகக்குறைந்த அனுமதிக்கான தகைமை G.C.E.A/L

★ ஏற்புடைய கற்கைநெறி, விடுதிக்கட்டணங்கள்

முதலாம் வருடம் - 3100 U.S.D.

இரண்டாம் வருடத்திலிருந்து 2000 U.S.D.

(கட்டணங்களை தவணைக்கட்டணங்களாகச் செலுத்தலாம்)

அனுமதிக்கும், மேலதிக தகவல்களுக்கும்

தொடர்பு: Uthayajothy

(Final Year Student in the University)

T.P.: Local 0777-984800, 01-334284

T.P.: Russia - 007071 2335823

E.Mail: uthayavan@yahoo.com

(C/24181)

கூரை அமைப்பில் புதிய அலை

அன்டன் சுபர் ஷெல்டா

குடியிருப்பு விவசாய மற்றும் வர்த்தகக் கட்டிடங்களுக்கு உகந்தவை




அன்டன் சுபர் ஷெல்டா

- 2.5 மி.மி கனம் கொண்டது
- வேறு எந்தக் கூரைத் தகடுகளையும்விட மலிவானது
- குறைந்த வெப்பம்
- மழை நேரங்களில் குறைந்த இரைச்சல்
- துரு பிடிக்காதது
- சுகாதார இடையூறு அற்றது
- 30 வருடங்களுக்கு மேல் நீடிக்கக்கூடியது
- நிறம் மாறாதது

அன்டன் சுபர் ஷெல்டா சரியாகப் பொருத்துங்கள்

Access Graphics

உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துவோர்
சென்ற் அந்தனீஸ் ஹுவ்பிங் (பிரைவேட்) லிமிட்டெட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே. 324261-5, 337283-5 ,பெக்ஸ், 446554

Super Shelta உங்களின் கூரைக்குப் பரிகாரம்

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1., ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை கனிஷ்ட ஆசிரியர் திரு.க.பாலேந்திரராஜா அவர்களின் அன்புச் சகோதரர்

கனகரத்தினம் சோதிராஜா

அவர்கள் பிரான்ஸில் காலமாகியதையிட்டு துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/உயரப்புலம் குணபாலனி வித்தியாசாலை,
ஆனைக்கோட்டை.

(10424)

# மீட்புநிதி மீளப்பெறுவோர் விவரம்

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| (வெ/1275) | பாலகிருஸ்ணன் கிருபாகரன் |
| (வெ/1276) | செல்வி நல்லம்மா குழந்தைவேலு |
| (வெ/1280) | திருமதி மரியநாயகி செபஸ்தியாம்பிள்ளை |
| (வெ/1281) | திருமதி ஜெகதீஸ்வரி குமாரசிங்கம் |
| (வெ/1289) | திருமதி பவளம் முத்துலிங்கம் |
| (வெ/1291) | திருமதி பிறேமினி அரியரட்ணம் |
| (வெ/1298) | சோதிப்பிள்ளை முத்துலிங்கம் |
| (வெ/1304) | இராமசாமி கணபதிப்பிள்ளை |
| (வெ/1305) | திருமதி சத்தியராதா சபாபதிப்பிள்ளை |
| (வெ/1307) | திருமதி அன்னராணி நாராயணசாமி |
| (வெ/1312) | மயில்வாகனசுந்தரம் ராமானந் |
| (வெ/1325) | திருமதி பகவதி மார்க்கண்டு |
| (வெ/1326) | திருமதி மல்லிகாதேவி தர்மதுரை |
| (வெ/1328) | பொன்னையா கணேசானந்தன் |
| (வெ/1330) | தங்கவேல் மகேந்திரா |
| (வெ/1336) | செல்லையா நடராசா |
| (வெ/1337) | திருமதி சிவகாமிப்பிள்ளை அரு[illegible]ந்தமூர்த்தி |
| (வெ/1339) | ஆறுமுகம் சுந்தரலிங்கம் |
| (வெ/1342) | திருமதி செல்வராணி துரைலிங்கம் |
| (வெ/1344) | திருமதி சத்தியநாயகி சிவகுமாரன் |
| (வெ/1346) | அந்தோனி செபநேசன் |
| (வெ/1349) | திருமதி தனரஞ்சிதமணி சிவகுருநாதன் |
| (வெ/1350) | செல்வி சரோன்நிருபா அனுஷியா சினெஸ் |
| (வெ/1352) | புஸ்பபாலன் தில்லைராஜா |
| (வெ/1353) | நடராசா கமலநாதன் |
| (வெ/1357) | திருமதி யோகமணி இராசலிங்கம் |
| (வெ/1358) | திருமதி குமுதினி விஜயமனோகரன் |
| (வெ/1359) | திருமதி அஞ்சலா ஜெயசீலன் |
| (வெ/1363) | திருமதி யோகேஸ்வரி மகாலிங்கம் |
| (வெ/1370) | திருமதி கேமாவதி சண்முகசர்மா |
| (வெ/1371) | இராமையா நந்தகுமார் |
| (வெ/1372) | செல்லையா சத்தியமூர்த்தி |
| (வெ/1375) | திருமதி சறோஜினிதேவி மகேந்திரன் |
| (வெ/1378) | சந்திரசேகரம் அருளேஸ்வரன் |
| (வெ/1379) | சகுந்தலாதேவி இராஜ்மனோகரன் |
| (வெ/1380) | திருமதி சுபித்தா பரமதாசன் |
| (வெ/1381) | சண்முகநாதன் சிறிரங்கபதி |
| (வெ/1386) | செல்வி மலர்விழி நடேசன் |
| (வெ/1387) | மருதப்பு பொன்னுத்துரை |
| (வெ/1389) | திருமதி காந்தவதனி செல்வநாதன் |
| (வெ/1394) | இறைப்பேள்பிள்ளை சூசைப்பிள்ளை |
| (வெ/1395) | திருமதி தனேஸ்வரி சிறிவரதராஜா |
| (வெ/1396) | திருமதி கமலாம்பிகை சிவகுமாரதாசன் |
| (வெ/1402) | கணேசலிங்கம் சதீஸ் |
| (வெ/1404) | திருமதி கலைவாணி தனபாலன் |
| (வெ/1407) | பொன்னம்பலம் பேரம்பலம் |
| (வெ/1411) | வல்லிபுரம் சற்குணராசா |
| (வெ/1413) | திருமதி சந்தானலட்சுமி சர்வேஸ்வரன் |
| (வெ/1419) | திருமதி மகேஸ்வரி இலட்சுமணன் |
| (வெ/1425) | திருமதி மேரிபோலினோவ் ஜோன்கலாசியஸ் |
| (வெ/1431) | திருமதி விக்கினேஸ்வரி தனஞ்செயன் |
| (வெ/1432) | விநாசித்தம்பி சண்முகம் |
| (வெ/1433) | திருமதி கெங்கேஸ்வரி கமலநாதன் |
| (வெ/1434) | திருமதி பாலகெளரி ஜெகதீஸன் |
| (வெ/1435) | இளையதம்பி திருநாவுக்கரசு |
| (வெ/1436) | செல்வி ஜக்குலின்ஜான்சி அதிரியாம்பிள்ளை |
| (வெ/1438) | திருமதி மேரிஸ்கொலஸ்ரிக்கா பிலிப்தாஸ |
| (வெ/1447) | கந்தையா அரிச்சந்திரன் |
| (வெ/1449) | அண்ணாச்சாமி நிர்மலானந்தன் |
| (வெ/1456) | செல்வி சாந்தினி குமாரசாமிப்பிள்ளை |
| (வெ/1463) | திருமதி செல்வமலர் பாலசிங்கம் |
| (வெ/1470) | மயில்வாகனம் திருநாவுக்கரசு |
| (வெ/1472) | சுகிர்தரட்ணம் மித்திரன் |
| (வெ/1474) | வேலாயுதபிள்ளை நாகராசா |
| (வெ/1476) | திருமதி மகேஸ்வரி ஆத்மலிங்கம் |
| (வெ/1486) | திருமதி றோகினிறஜிகலா அன்ரனற்சாள்ஸ் |
| (வெ/1487) | திருமதி சுவர்ணராணி சிவசங்கர் |
| (வெ/1490) | வைத்திலிங்கம் ரட்ணகுமார் |
| (வெ/1491) | இராமலிங்கம் சோதிகுமாரன் |
| (வெ/1493) | செல்லத்துரை சிறிதரன் |
| (வெ/1497) | திருமதி மனோரஞ்சிதமலர் தனபாலசிங்கம் |
| (வெ/1498) | சரவணமுத்து மயில்வாகனம் |
| (வெ/1499) | திருமதி யோகம்மா பரமேஸ்வரன் |
| (வெ/1504) | திருமதி கீதாஞ்சலி ரவிச்சந்திரன் |
| (வெ/1505) | திருமதி மகாராணி யோகலிங்கம் |
| (வெ/1511) | திருமதி அற்புதமலர் கணபதிப்பிள்ளை |
| (வெ/1524) | திருமதி பரமேஸ்வரி விஸ்வலிங்கம் |
| (வெ/1531) | தம்பு தியாகராசா |
| (வெ/1533) | இராசலிங்கம் சண்முகலிங்கம் |
| (வெ/1537) | திருமதி யசோதா குகனேஸ்வரன் |
| (வெ/1540) | திருமதி லோகநாயகி பரமானந்தன் |
| (வெ/1543) | செபஸ்தியாம்பிள்ளை ஸ்ரீபன் |
| (வெ/1545) | செல்வி விஜயல[illegible]மி குமாரசாமி |
| (வெ/1547) | திருமதி மாலினி [illegible]கரன் |
| (வெ/1550) | திருமதி வேனடெற்ஸ் ஜெகநாதன் |
| (வெ/1559) | தம்பிராசா சிறிசெல்வம் |
| (வெ/1560) | சரஸ்வதி நடராசா |
| (வெ/1561) | திருமதி மாலினி நரேந்திரன் |
| (வெ/1563) | செல்லையா இராசதுரை |
| (வெ/1566) | சுவக்கின் யோசலாஸ் |
| (வெ/1567) | சுப்பையா சுரேந்திரன் |
| (வெ/1568) | வயித்திலிங்கம் கணேசரெத்தினம் |
| (வெ/1569) | வென்வெஸ்லாஸ்சதிஸ்லாஸ் விஜயகுமார் |
| (வெ/1572) | முத்துக்குமாரு தாமோதரம்பிள்ளை |
| (வெ/1574) | திருமதி பரமேஸ்வரி ஜீவரட்ணம் |
| (வெ/1576) | கந்தையா வீரசிங்கம் |
| (வெ/1579) | சுகந்தன் இன்னாசித்தம்பி |
| (வெ/1581) | சபாபதி முத்துலிங்கம் |
| (வெ/1583) | ஐயம்பிள்ளை தர்மராசா |
| (வெ/1586) | திருமதி ஐயந்தி கனகசுந்தரி |
| (வெ/1591) | வல்லிபுரம் அப்புத்துரை |
| (வெ/1595) | திருமதி இலட்சுமி முத்துக்குமாரு |
| (வெ/1601) | நடராசா மனோகரன் |
| (வெ/1609) | திருமதி கௌரிநாயகி துரைசிங்கம் |
| (வெ/1610) | தளையசிங்கம் கிருஷ்ணராஜ் |
| (வெ/1620) | செல்வி மெர்சியா அந்தோனிப்பிள்ளை |
| (வெ/1623) | திருமதி இராஜசுலோஜனா இராசகுமார் |
| (வெ/1624) | திருமதி சகுந்தலாதேவி இரத்தினகுமார் |
| (வெ/1625) | திருமதி பாக்கியவதி தருமராசா |
| (வெ/1626) | திருமதி சுதாம்பிகை வாமதேவன் |
| (வெ/1638) | திருமதி சுலோசனாதேவி திருநாவுக்கரசு |
| (வெ/1640) | திருமதி மேரிகாமலா பத்மராஜா |
| (வெ/1642) | சீனியன் சண்முகநாதன் |
| (வெ/1645) | கந்தையா சண்முகலிங்கம் |
| (வெ/1646) | திருமதி செல்வராணி நாகராசா |
| (வெ/1647) | திருமதி இரத்தினபூபதி விவேகானந்தன் |
| (வெ/1657) | கந்தசாமி சண்முகசுந்தரலிங்கம் |
| (வெ/1658) | முருகேசு வேலாயுதபிள்ளை |
| (வெ/1662) | செல்வி புளோறன்ஸ் பெனற் இம்மானுவேல் |
| (வெ/1664) | திருமதி சற்குணதேவி கிருஸ்ணமூர்த்தி |
| (வெ/1668) | திருமதி புவனநாயகி ஸ்ரீரங்கராஜா |
| (வெ/1669) | சங்கரப்பிள்ளை செல்வராஜா |
| (வெ/1678) | தம்பிப்பிள்ளை நவரத்தினம் |
| (வெ/1681) | துரையப்பா பொன்னம்பலம் |
| (வெ/1684) | திருமதி ராஜலட்சுமி திருநாவுக்கரசு |
| (வெ/1685) | செல்வி ஸ்ரீஆண்டாள் மயில்வாகனம் |
| (வெ/1689) | இராமு இராமச்சந்திரன் |
| (வெ/195) | கந்தையா குணசிங்கம் |
| (வெ/178) | பத்மநாதன் நடனசிவன் |
| (வெ/179) | திருமதி ஸ்ரீரஜனி பரமானந்தம் |
| (வெ/185) | திருமதி சோதிராணி கலாநிதி |
| (வெ/189) | திருமதி சிறிரஞ்சனி குமாரகுலசிங்கம் |
| (வெ/197) | கந்தசாமி பலராமன் |
| (வெ/201) | செல்வி சாந்தமதி சந்தனம் |
| (வெ/202) | விஸ்வலிங்கம் பஞ்சலிங்கம் |
| (வெ/207) | ரேவதி ஸ்ரீரங்கன் |
| (வெ/208) | நவரத்தினம் சுந்தரலிங்கம் |
| (வெ/212) | தம்பு சண்முகராசா |
| (வெ/213) | திருமதி ஜெயராணி இராமலிங்கம் |
| (வெ/214) | திருமதி பாலசவுந்தரி சின்னத்தம்பி |
| (வெ/216) | திருமதி மேரியூபிறேசியா பீற்றர் அலோசியஸ் |
| (வெ/219) | தருமலிங்கம் பாலசுப்பிரமணியம் |
| (வெ/221) | திருமதி பிறேமளா பாலசுப்பிரமணியம் |
| (வெ/230) | சிவகுருநாதன் முருகேசன் |
| (வெ/232) | திருமதி கலைமகள் குமாரலிங்கம் |
| (வெ/233) | திருமதி மேரிராணி இமானுவேல் |
| (வெ/234) | பொன்னம்பலம் முத்துக்குமாரு |

(வளரும்)

# ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் மறு அறிவித்தல்வரை மூடப்பட்டது!

## மாணவர் குழுக்களின் மோதலையடுத்து நடவடிக்கை

கொழும்பு,நவ.10

ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் நேற்று முன்தினம் முற்பகல் மூடப்பட்டது. மறு அறிவித்தல்வரை பல்கலைக்கழகத்தை மூடிவைப்பதென நேற்று முன்தினம் காலை கூடிய பல்கலைக்கழக நிர்வாகிகள் தீர்மானித்தனர்.

பல்கலைக்கழக மாணவர் குழுக்கள் இரண்டிற்கிடையே கடந்த வியாழனன்று மாலை மூண்ட மோதலையடுத்தே பல்கலைக்கழகம் நேற்று முன்தினம் மூடப்பட்டு மாணவர்கள் வெளியேற்றப்பட்டனர்.

இம்மோதலில் ஆறு மாணவர்கள் பலத்த காயங்களுக்குள்ளாகினர். அவர்களில் நான்கு மாணவர்கள் களுபோவில வைத்தியசாலையிலும இருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டனர். காயமடைந்த மேலும் பல மாணவர்கள் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றனர்.

'ராகிங்' தொடர்பாக மாணவர்களிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டதையடுத்து மாணவர் சேமநலன் பணிப்பாளரான பேராசிரியர் நெவில் வர்ணகுலசூரிய இருதரப்பினரையும் தனது அலுவலகத்துக்கு அழைத்து பேச்சு நடத்தியிருக்கிறார்.

பேச்சு நடந்துகொண்டிருக்கையில் பொல்லுகளுடனும் ஆயுதங்களுடனும் அங்கு வந்த மற்றொரு கோஷ்டி கண்மூடித்தனமாக மாணவர்களைத் தாக்கியது. அலுவலகத்தில் இருந்த பல உபகரணங்களும் ஜன்னல், கதவுகளும், இரண்டு வாகனங்களும் தாக்குதலில் சேதமடைந்தன.

அந்த இடத்துக்கு விரைந்த பொலீஸார் நிலைமையைக் கட்டுப்படுத்தினர். விசாரணைகள் தொடர்கின்றன. (எ)

## உலக வங்கிக் குழு இன்று வரணி விஜயம்

தென்மராட்சி,நவ.10

வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் (நியாப்) கீழ் வரணி இடைக்குறிச்சி கிராம அலுவலர் பிரிவில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிடுவதற்கென உலக வங்கி அதிகாரிகள் இன்று காலை 9 மணிக்கு அங்கு விஜயம் செய்யவுள்ளனர்.

நியாப் திட்டத்தின் கீழ் இப்பகுதியில் 39 லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகளை இவர்கள் பார்வையிட்டு ஒதுக்கீடுகளை மீளாய்வு செய்யவுள்ளனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதியில் உள்ள தம்பளைக் குளம், மூன்று விவசாய வீதிகள், குடிதண்ணீர், பொது மண்டபம், சுயதொழில் முயற்சிக்கடன் ஆகிய வேலைகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(எ-117)

# வீதி விபத்துக்களில் ஐந்து பேர் படுகாயம்

யாழ்ப்பாணம்,நவ.10

வடமராட்சி மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வெவ்வேறு வீதி விபத்துக்களில் 5 பேர் காயமடைந்தனர். இதில் ஒருவர் படுகாயமடைந்து சுயநினைவு இழந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

நெல்லியடிக்கும், மாலு சந்திக்கும் இடையில முடக்காட்டுச் சந்தியில் மினிபஸ், மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்தவரான மயிலிட்டியிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது கரவெட்டி கிழக்கில் வசிக்கும் விஜயதாஸ் விஜயகாந்தன் (வயது 19) என்பவர் தலையிலும் கையிலும் படுகாயமடைந்தார்.

குடத்தனையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் குடத்தனை கிழக்கைச் சேர்ந்த கே.உதயகுமார் (வயது 26), மானிப்பாயில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள், சைக்கிள் விபத்தில் சைக்கிளில் சென்றவரான மானிப்பாய் வடக்கைச் சேர்ந்த குணசேகரம் நிந்துனா (வயது 18) -

யாழ்நகர்ப் பகுதியில் இரு சைக்கிள்களுக்கிடையில் இடம்பெற்ற விபத்தில் நல்லூரைச் சேர்ந்த அலோஸியஸ் நிஷாந்தன் (வயது 19), உரும்பிராயில் இடம்பெற்ற சைக்கிள் விபத்தில அவ்விடத்தைச் சேர்ந்த கனகலிங்கம் றஜீபன் (வயது 15) ஆகியோரும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் அனைவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ-4-15-36)

கியூடெக், ஹரித்தாஸ் இணைந்து நடத்திய

# சமாதானம் தொடர்பான போட்டிகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம்,நவ.10

கியூடெக் - ஹரித்தாஸ் நிறுவன சமாதானக் குழுவினர் நடத்திய சமாதானம் தொடர்பான பேச்சு, கட்டுரை, ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

**கட்டுரை**

எஸ்.அனுசா, கே.ஜெனிசில்வியா, பி.தினேஸ்குமார், ஏ.நித்தியகல்யாணி.

**ஓவியம்**

என்.ஜிட்றி, எஸ்.பிராங்கிளின், என்.துஷ்யந்தன், வி.தாரணி.

**பேச்சு பிரிவு I**

கே.உஷாந்தன், சி.கனித்தா, கே. ஜஸ்மிலா.

**பேச்சு பிரிவு II**

எம்.அருளினியன், ஈ.அனுசியா, பிறினோசா.

**பேச்சு பிரிவு III**

ஜிடிஎனி பவித்திரா, கேசுகாஸ், கிபதான்யா.

(எ-8)

கொழும்புத்துறை, குருநகர்ப் பகுதிகளில்

# மீளக்குடியமரும் பொதுமக்களின் தேவைகள் விரைவில் பூர்த்தியாகும்!

## மாநகர முதல்வர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.10

கொழும்புத்துறை, குருநகர்ப் பகுதிகளில் படையினர் வெளியேறிய இடங்களில் மீளக் குடியமர்ந்துவரும் மக்களுக்கான குடிதண்ணீர் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் மாநகரசபை உரிய நடவடிக்கை எடுத்து வருவதாக மாநகர முதல்வர் செ.கந்தையன் தெரிவித்தார்.

கடந்த ஏழு வருடங்களாக மேற்படி பகுதிகளில் நிலைகொண்டிருந்த படையினர் பொது மக்களின் குடிமனைகளைப் பயன்படுத்தி வந்தனர்.

அத்துடன் கரையோரப் பகுதிகளை அண்டியுள்ள குடிமனைகளில் பொதுமக்களை குடியிருக்கவும் அனுமதி மறுத்துவந்தனர். எனினும், தற்போது சில இடங்களில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களது சில அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டிய கடப்பாடு மாநகர சபைக்கு உண்டு.

எனவே, மேற்படி பகுதிகளில் உள்ள மக்களது பொதுப் பாவனைக்குரிய சந்தைகள், கிணறுகள், மலசல கூடங்கள் முதலானவை உடனடியாகப் புனரமைக்கப்படும்.

அத்துடன், வீதிகளும் தற்காலிகமாகப் புனரமைக்கப்படும். போதிய நிதி கிடைக்குமிடத்து அனைத்து வீதிகளையும் முழுமையாகப் புனரமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.(எ-12)

## மக்கள் முகம்



பருத்தித்துறை வீதி, நல்லூரைச் சேர்ந்த குமாரசாமி அருள்நாயகம் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு 27.09.2002 அன்று மேலதிக நீதிவான் ச.இளங்கோவன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். நல்லூர் ப.நோ.கூ.சங்கத்தின் பணியாளராகிய இவர் வன்னியசிங்கம் பொதுப்பணி மன்றத்தின் செய லாளராகவும், சிக்கனக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றிவருகிறார். இவர் யாழ்.செங்குந்த இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவார். (ஐ)

★ ★ ★



தும்பளை சைவப்பிரகாச வித்தியசாலை ஆசிரியர் முருகேசு கனகலிங்கம் கல்வி அமைச்சின் அனுசரணை யுடன், நாடளாவிய ரீதியில் ஆசிரியர்களுக்கான கல்வி சீர்திருத்தத் திட்டம் தொடர்பாக நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் இரண்டாவது பரிசினைப் பெற்றுள்ளார்.

அண்மையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கல்வி, கலாசார அலுவல்கள் மனிதவள அபிவிருத்தி அமைச்சர் கருணசேன கொடித்துவக்கு இவ ருக்கு பரிசில் வழங்கினார். (எ-36)

★ ★ ★

அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் பிரதம கணக்காளராகக் கடமையாற்றி வந்த கா.வீரசிங்கம் கடந்த முதலாம் திகதி முதல் திறைசேரி அரச கணக்குப் பகுதி பணிப்பளாராகப் பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ளார்.

அரசாங்க கணக்காளர் சேவையில் தரம் Iஐச் சேர்ந்த இவர், முன் னர் பேராதனை விவசாயத் திணைக்களம், கிளிநொச்சி மாவட்ட செயலகம், யாழ்.மாவட்ட செயலகம் ஆகியவற்றில் கணக்காளராகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-8)

★ ★ ★

தெல்லிப்பழை குரும்பசிட்டியைச் சேர்ந்தவரும் தற் பொழுது கொழும்பில் வசிப்பவரான திருமதி பவானி மகாதேவன் கௌரவ நீதியமைச்சரினால் தீவு முழுவ தற்குமான சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டு அண் மையில் கல்கிசை மேலதிக மாவட்ட நீதவான் முன் னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.



இலங்கை அதிபர் சேவை தரம் ஒன்றைச் சேர்ந்த இவர் நுகேகொட தமிழ் மகாவித்தியாலயத்தின் பிரதி அதிபராக பணி புரிந்து வருகிறார். கொழும்பு பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் உயர் ஆங்கில டிப்ளோமா பட்டத்தையும் இவர் பெற்றுள்ளார்.

சர்வதேச கல்வி நிறுவனத்தால் 1997ஆம் ஆண்டு ஜூலைமாதம் மலேசியாவில் நடத்தப்பட்ட ஆசிய பசுபிக் பிராந்திய மகளிர் மாநாட் டில் இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கத்தின் சார்பில் கலந்துகொண்ட இரு பிரதிநிதிகளில் இவரும் ஒருவர். மேற்படி நிறுவனம் இலங்கை தமிழர் ஆசிரிய சங்கத்துடன் இணைந்து நடத்திய தலைமைத்துவம், ஆசிரியர்களின் கடமைகள், பொறுப்புகள், உரிமைகள், சலுகைகள் பெண்களின் சமத்துவத்தில் ஆசிரியர்கள் பங்கு, வளவியலாளர் போன்ற பல பட்டறைகளிலும் செயலமர்வுகளிலும் கலந்துகொண்டு அவற்றிற் கான சான்றிதழ்களையும் இவர் பெற்றுள்ளார்.

இவர் கண்டி நல்லாயர் மகளிர் கல்லூரி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவியான இவர் சட்டத்தரணி க.வே.மகாதேவனின் மனைவி ஆவார். (எ)

★ ★ ★

கைதடி மேற்கு, கைதடியைச் சேர்ந்த கார்த்திகேசு உருத்திர சுந்தரம் யாழ்.மாவட்டத்துக்கான சமாதான நீதிவானாக யாழ்.மாடவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.



வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் காரை நகர்சாலை முகாமையாளரான இவர், நுணாவிற்குளம் கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபை செய லாளராகவும், யாழ்.மத்திய கல்லூரி விளையாட்டுக் கழக நிர்வாக உறுப்பினராகவும் பணியாற்றிவரு கின்றார்.

இவர் யாழ்.மத்திய கல்லூரியின் பழைய மாணவருமாவார். (எ-73)

## அனோஜா வழக்கில் குணதிலக விடுதலை

கொழும்பு,நவ.10

சினிமா நடிகை அனோஜா வீர சிங்கவின் மொனராகலை இல்லத் திற்கு தீ வைத்து சேதம் விளைவித் தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டி ருந்த வழக்கில் நடிகர் சனத் குணத் திலக உட்பட ஆறு எதிரிகள் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட் டனர்.

மொனராகலை நீதிமன்ற நீதி வான் ஏ.எல்.எம்.மைமூனா இத்தீர்ப்பை வழங்கினார்.

இவவழக்கைத் தொடர்ந்து நடத்த போதிய சாட்சியங்கள் இல்லை யென்று சட்டமா அதிபர் நீதிமன்றத்துக குத் தெரிவித்ததையடுத்தே நீதிவான் எதிரிகளை விடுதலை செய்தார். (ஒ)

## பளை ஆஸ்பத்திரிக்கு டாக்டர் நியமனம்

தென்மராட்சி,நவ.10

சாவகச்சேரி ஆஸ்பத்திரி பொறுப் பதிகாரி டாக்டர் அம்பிகைபாலன் பளை ஆஸ்பத்திரிப் பொறுப்பதிகாரி யாக இடமாற்றல் செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி ஆஸ்பத்திரிக்கு நிரந்தர மாக டாக்டர் ஒருவர் நியமிக்கப்பட் டதையடுத்து எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதல் ஆஸ்பத்திரி தினமும் இயங்குமென்றும் -

அதுவரை வாரத்தில் இரு நாள் கள் இயங்கும் என்றும் - தெரிவிக் கப்பட்டது.

முதல்கட்டமாக மருந்தாளர் உட் பட எட்டுப்பேர் மேற்படி ஆஸ்பத்திரிக் குக் கடமைக்கு அழைக்கப்பட்டுள்ள னர் எனக் கூறப்பட்டது.

பளை ஆஸ்பத்திரியின் கட்டடங் கள் பலத்த சேதமடைந்ததையடுத்து தனியார் வீடொன்றில் தற்காலிகமாக இயங்கிவருவது தெரிந்ததே. (எ-117)

## நாணயக்குற்றி தொலைபேசி வருடக் கணக்கில் செயலிழப்பு!

அச்சுவேலி,நவ.10

அச்சுவேலியில் பொருத்தப்பட் டுள்ள ஒரேயொரு நாணயக்குற்றித் தொலைபேசி வருடக்கணக்காக செயற்படாமல் உள்ளது.

அச்சுவேலி இராச வீதியில் அமைந் துள்ள தனியார் தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றின் விறாந்தையில் இந்த நாணயக்குற்றித் தொலைபேசி பொருத்தப்பட்டுள்ளது.

மேற்படி தொலைபேசி இணைப் புச் செய்யப்பட்டு சில மாதங்களில் முற்றாகச் செயலிழந்துவிட்டது எனக் கூறப்பட்டது. (எ-11)

## கசிப்பு வைத்திருந்த நால்வரிடம் ரூ.59 ஆயிரம் அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம்,நவ.10

கசிப்பு மற்றும் கோடா ஆகிய வற்றை வைத்திருந்த குற்றச்சாட் டின் பேரின் நால்வருக்கு யாழ்.நீதி மன்றினால் 59 ஆயிரம் ரூபா அப ராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நாகராசா ரூபசாந்தன் என்பவர் ஆயி ரத்து 980 லீற்றர் கோடா வைத் திருந் தமைக்காக 50 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 5ஆயிரம் ரூபா தர் மப் பணமும் -

நீர்வேலி, கரந்தனையைச் சேர்ந்த வர்களான ஜோசன் அல்பிரட், சீவரட் ணம் விஜயராசா ஆகியோருக்குத் தலா ஆயிரம் ரூபா தண்டப்பணமும் -

உரும்பிராயைச் சேர்ந்த சின்னத் துரை ஜெயரூபன் என்பவருக்கு ஆயிரம் ரூபா தண்டப்பணமும் செலுத்துமாறு யாழ்.நீதிமன்ற நீதி வான் இ.த.விக்னராஜா உத்தரவிட் டுள்ளார். (எ-10)

## கொழும்புத்துறை படிப்பகத்தை மீண்டும் இயக்க ஏற்பாடு

அரியாலை,நவ.10

கொழும்புத்துறை மேற்கு சன சமூக நிலையத்தை மீண்டும் இயங் கவைப்பதற்கான ஏற்பாடுகளை நிலைய நிர்வாகத்தினர் மேற் கொண்டு வருகின்றனர்.

கடந்த மூன்று ஆண்டு காலமாக பாவனையின்றி மூடப்பட்டிருக்கும் இந்த நிலையத்தின் படிப்பகத்தை யும் மீண்டும் இயங்கவைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதேவேளை - கொழும்புத்துறைப் பகுதியில் இடம்பெற்ற யுத்த சூழ் நிலைகளை அடுத்து மேற்படி படிப் பகத்தில் இருந்த பெறுமதிமிக்க புத்தகங்கள் மற்றும் தளபாடங்கள் என்பன காணாமல் போனமை குறிப் பிடத்தக்கது. (எ-17)

## செம்பியன்பற்றில் பரீட்சை நிலையம்

வடமராட்சி,நவ.10

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடை பெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான பரீட்சை நிலையம் இம்முறை செம்பியன்பற்றிலும் அமைக் கப்படவுள்ளது.

1995ஆம் ஆண்டுக்குப் பின்னர் அப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாகவும், மக்க ளின் இடப்பெயர்வு காரணமாகவும் செம்பியன்பற்று பரீட்சை நிலையம் பருத்தித்துறைக்கு இடம்மாற்றப்பட்டு இருந்தது.

தற்போது மருதங்கேணிப் பிரதே சத்தில் பாடசாலைகள் மீள இயங்கத் தொடங்கியதையடுத்து, இம்முறை பரீட்சை நிலையத்தை அங்கு நிறுவ வடமராட்சி வலயக் கல்வித் திணைக் களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (எ-182)

## வடமராட்சி கிழக்கில் மலேரியா பரவும் அபாயம்

தென்மராட்சி,நவ.10

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் யுத்தத்தின்போது வீசப்பட்ட குண்டு கள், ஷெல்களினால் ஏற்பட்ட பாரிய குழிகளில் தேங்கி நிற்கும் மழை நீர் அப்பகுதியில் நுளம்புப் பெருக்கத் திற்குக் காரணமாக அமைந்துவிடும் என சுகாதாரப் பகுதியினர் எச்சரித் துள்ளனர்.

எனவே, இப்பகுதியில் காணப்ப டும் குழிகளை மூடிவிடுமாறு அப்பகுதி பொதுச் சுகாதார உத்தியோகத்தர் கள் மக்களிடம் வேண்டுகோள் விடுத் துள்ளனர். (எ-182)

## பளையில் மருத்துவ முகாம்!

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத் தர்களின் நடமாடும் வைத்திய சேவை எதிர்வரும் 16ஆம் திகதி பளைப் பிரதேச சபைக் கட்டடத்தில் நடை பெறவுள்ளது.

பிரதேசத்தைச் சேர்ந்த கர்ப்பிணி கள், பாலூட்டும் தாய்மார், குழந்தை கள் ஆகியோர் இந்த மருத்துவமுகா மில் கலந்துகொண்டு பயன்பெறலாம் என மாவட்ட சுகாதார வைத்திய அதி காரி அறிவித்துள்ளார். (எ-117)

## யாழ். பொது நூலகம் எப்போது திறக்கப்படும்?

யாழ். பொது நூலகத்தின் புன ரமைப்புப் பணிகள் தற்போது இறு திக் கட்டத்தை நெருங்கிக்கொண் டுள்ளன. எனினும் அனைத்துப் பணி களும் முற்றாக முடிவுறுவதற்கு இன்னும் இரண்டு மாதங்கள் எடுக் கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குளிரூட்டி வசதிகள், தீயணைப்பு உபகரணங்களைப் பொருத்துதல் மற்றும் நூலகத்திற்கான உள்ளகத் தொலைபேசி வசதிகள் என்பவை இன்னும் பூர்த்திசெய்ய வேண்டிய வேலையாக உள்ளன.

பொதுநூலகத்தைத் திறப்பதற் கான இறுதித்திகதியும் இன்னமும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப் படவில்லை. இவ்வாண்டு ஜனவரி யில் பொதுநூலகத்தைத் திறப்ப தென முன்னர் உத்தேசிக்கப்பட் டிருந்தது. ஆனால், இவ்வாண்டு முடி வதற்குள் நூலகம் திறக்கப்படுவதற் கான சாத்தியக் கூறுகள் இல்லை என்று சில வட்டாரங்கள் தெரிவித் தன. (ஜ-8-10)

### திருட்டு சந்தேகத்தின்பேரில்

## அச்சுவேலியில் வைத்து சகோதரர் இருவர் கைது!

அச்சுவேலி,நவ.10

அச்சுவேலி - ஆவரங்கால் பகுதி யில் நடைபெற்றுவரும் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் கள் என்ற சந்தேகத்தின்பேரில் மடக் கிப் பிடிக்கப்பட்ட இருவர் அச்சு வேலிப் பொலீஸில் ஒப்படைக்கப்பட் டுள்ளனர்.

அச்சுவேலி பஸ்நிலையப் பகுதி யில் நடமாடிய இரண்டு வாலிபரின் நடமாட்டத்தில் சந்தேகங்கொண்ட பொதுமக்கள், இருவரையும் விசாரித்த போது ஒருவர் மோட்டார் சைக்கி ளில் ஓடிமறைந்தார். மற்றவர் பொது மக்களினால் மடக்கிப் பிடிக்கப்பட்டு அச்சுவேலிப் பொலீஸில் ஒப்படைக் கப்பட்டார்.

பொதுமக்கள் செய்த புகாரை அடுத்து, ஓடித்தப்பிய இளைஞரை ஆவரங்கால் பகுதியில் வைத்து அச்சுவேலிப் பொலீஸார் மடக்கிப் பிடித்தனர்.

பொலீஸில் ஒப்படைக்கப்பட்ட இருவரும் வடமராட்சி அல்வாயைச் சேர்ந்த சகோதரர்கள் எனப் பொலீ ஸார் தெரிவித்தனர்.

மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட இவர்கள் விளக்க மறி யலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அச்சுவேலிப் பொலீஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற் கொண்டுவருகின்றனர். (எ-11)

## நீதி, அமைதி, மகிழ்ச்சி எம்மத்தியில் வளரட்டும்

மனிதன் தன் வாழ்க்கையில் தேடி யலைவதெல்லாம் நீதியும், அமைதி யும், மகிழ்ச்சியுமே என்பதனால், இம் மூன்றையும் இறைவன் அவருடைய தூய ஆவியானவர் வழியாக அனைத்து மனிதர்களின் உள்ளத்தி லும் விதைத்துள்ளார் என தூய பவுல் கலாத்தியருக்கு எழுதிய திரு முகத்தில் அழகாகக் குறிப்பிட்டிருக் கின்றார். ஆனால், மனிதன் இவை களைத் தனக்கு வெளியே தேடிய லைகின்றான். உலக கொள்கைகளி லும், கோட்பாடுகளிலும் நம்பிக்கை வைத்து அதன்மூலமாக இவைக ளைத் தேடியடைய விளைகின்றான்.

இறைவனில் வாழ விரும்பும் ஒவ் வொரு மனிதனும் தம் உள்ளத்தில் ஏற்கனவே விதைக்கப்பட்டிருக்கும் நீதி, அமைதி, மகிழ்ச்சியாகிய பாங்

### ஞாயிறு அருளிரசாதம்

கான விதைகளைக் கண்டுகொள்ளல் வேண்டும். மேலும், அவைகளை அவர் அவர் தகுதிக்கும், இயல்புக் கும் இசைவாக வளர்க்க முயலுதல் வேண்டும். அப்போது விதைக்கப்பட்ட தகுதியான விதைகள் நல்லமுறை யில் பெருவிருட்சமாக வளர்ந்து, அவருக்கும் பிறருக்கும் நற்பயன ளிக்கும்.

நீதி, அமைதி மகிழ்ச்சி ஆகிய பண்புகள் மனிதனில் செழித்து வளர, பிறருக்கு நற்பயன் அளிக்க, இரண்டு வகையான செயற்பாடுகளை முன்னெ டுக்க அழைக்கப்படுகின்றார். ஒவ்வொரு மனிதனும் தத்தமது நிலையை உண ருதல், இது முதலாவது செயற்பாடு.

இறைவனின் பிரசன்னத்தை உலகி யல் வாழ்வில் உணர்ந்து இறை மதிப்பீடுகளான அன்பு அமைதி, சமத் துவம், சகோதரத்துவம் போன்ற வற்றை வாழ்வாக்கி வாழ இறை வன் அனைத்து பண்புகளையும், அருளையும் பொழிகின்றார் என்ப தையே இது சுட்டிநிற்கின்றது. ஏனெ



னில், மனிதன் இறைவனின் சாய லாகப் படைக்கப்பட்டவன். மேலும் அவரை நோக்கிப் பயணிக்க பணிக் கப்பட்டவன். தூய ஆவியானவரால் அருள் பொழிவு செய்யப்பட்டவன். நன்மையை நாளின் ஒத்தில் படைக்க அழைக்கப்பட்டவன். இவைகள் யாவும் நம் நிலையை உணருதல் என்ற செயற்பாட்டிக்குள் அடங்கும். இதை உணர்ந்து கொள்ளுதலே அவ சியமான செயற்பாடாகும்.

மனிதன் தன்னிடம் புரையோடிக் காணப்படும் தாழ்வு மனப்பான் மையை அகற்றுதல் இரண்டாவது செயற்பாடாகும். நான் ஒன்றுக்கும் உதவாதவன், தீமையின் இருப்பிடம், என்னால் எந்த விதமான நன்மை யையும் செய்யமுடியாது போன்ற முற் சார்பு எண்ணங்களும், கோட்பாடுக ளும் களையப்படல்வேண்டும். குறிப் பாக நீதி, அமைதி, மகிழ்ச்சி போன்ற புண்ணியங்கள் என்னில் விதைக்கப் பட்டுள்ளன என்பதை நினைத்தே பார்க்கமுடியாது என்ற அதிமுக்கிய காழ்ப்புணர்ச்சி முற்றுமுழுதாகத் தூக்கியெறியப்படல் அவசியம். அதன் போது எம்முள் ஏற்கனவே குடிகொண் டிருக்கும் இறைவனின் சாயல், தோற நம் பெறவும் வெளிக்கொணரப் படவும் தளம் அமைத்துக் கொடுக் கப்படும்.

**சகோதரன் - ஞானசைநாதன்**

எனவே, அமைதியின் தூதுவர்க ளாக, நீதியின் வேந்தர்களாக மகிழ்ச்சியின் மன்னர்களாக வாழ அழைக்கப்படும் நாம் செய்யவேண் டியது என்ன? நீதி, அமைதி, மகிழ்ச்சி ஆகிய நல்விதைகளை இறைசித் தத்திற்கு ஏற்ப நல்ல முறையில் வளர்ப்போம் இதய சாந்தியுடனும் நேரிய மனத்துடனும் இறைவனுக் கும், அயலவருக்கும் ஏற்புடைய செயல்களைச் செய்வோம், அயலவ ரின் உயர்விலே மகிழ்வோம். பகிர்ந்து வாழ்வோம் அப்போது நீதி, அமைதி, மகிழ்ச்சி என்பன பெருவிருட்சமாக வளர்ந்து அனைத்து உலகும் அதன நிழலில் இளைப்பாறும். அனை வருக்கும் இறை பிரசன்னத்தை இந்த உலகிலேயே அனுபவிப்பர்.

✣

பொது சன ... யாழ்ப்பாணம்

## காஞ்சிரங்குடா சம்பவம் குறித்த விசாரணை:

# படையினரின் துப்பாக்கிச் சூட்டை நியாயப்படுத்தி குணதிலக கருத்து

கொழும்பு,நவ.10

காஞ்சிரங்குடாவில் அதிரடிப் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் 8பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய குழுவின தலைவர் படையினரின் துப்பாக்கிச் சூட்டை நியாயப்படுத்திக் கருத்து வெளியிட்டுள்ளார்.

விசாரணை அறிக்கை நேற்றுமுன்தினம் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவிடம் கையளிக்கப்பட்ட பின்னர் நடந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

விசாரணை ஆணைக்குழுவுக்குத் தலைமை தாங்கிய எயார் மார்ஷல் ஹரிகுணதிலக தமது அறிக்கை தொடர்பாகத் தெரிவித்ததாவது:-

அதிரடிப்படை முகாம் காவலரணுக்கு அருகே விஸ்வநாதன் என்ற புலிகளின் பிரதேசத் தலைவர் வந்த டிராக்டரை வழிமறித்தபோது ஏற்பட்ட தகராறே அசம்பாவிதங்கள் இடம்பெற மூல காரணம்.

மண்வெட்டிப்பிடியால் புலிகளின் உறுப்பினர்கள் தாக்கப்பட்டுள்ளனர். அதனால் ஆத்திரமுற்ற புலிகள் பொதுமக்களைத் திரட்டிக் கொண்டுவந்து முகாமை முற்றுகையிட்டுள்ளனர். முகாமுக்குள் ஊடுருவியவர்கள் கற்களையும் பொல்லுகளையும் கொண்டு முகாமின் பலபகுதிகளையும் தாக்கியுள்ளனர். இதைச் சமாளிக்க முடியாமல் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால், ஏழுபேர் கொல்லப்பட்டனர்; 15பேர் காயமடைந்தனர். சுமார் நூறுபேர் முகாமுக்குள் உட்புகுந்தனர். அப்போது தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் நடவடிக்கையாகவே 28 துப்பாக்கிக் குண்டுகள் தீர்க்கப்பட்டுள்ளன.

எனினும், மீண்டும் அப்படியொரு பிரச்சினை உருவாகாது சகல மட்டத்திலும் புரிந்துணர்வு அடிப்படையில் செயற்படுவதற்கான உடன்பாடு காணப்பட்டுள்ளது.

கிழக்கில் மட்டுமல்ல வடக்கிலும் படையினரின் பிரதான முகாம்களைத் தவிர ஏனைய முகாம்கள் அகற்றப்படவேண்டும். முகாம்களிலுள்ள படையினருக்கு 6மாத காலங்களிற்கு ஒருமுறை இடமாற்றம் வழங்கப்படவேண்டும்.

எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறாது - என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து உரையாற்றிய உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க கூறியதாவது:-

குறுகிய காலத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அறிக்கையை ஆராய்ந்து அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பாதுகாப்பு அதிகாரிகள் தவறிழைப்பின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இனி இப்படியான ஒருபிரச்சினை உருவாகுவதற்கு ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்.

புலிகளும், பாதுகாப்புப் படையினரும், கணகாணிப்புக் குழுவினரும், பிரஜைகள் குழுவினரும் இணைந்து சுமுகமாகச் செயற்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனக்குத் தற்போது கிடைத்துள்ள அறிக்கை தொடர்பாகப் பிரதமருடன் ஆலோசித்து எதிர்காலத்தில் சுமுகமான செயற்பாடுகளில் கவனம் செலுத்தப்படும் எனக்கூறினார்.

இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் ஒலிவா வீரசேன (முன்னாள் நீதிபதி), எஸ்.எஸ்.பியான எம்.ஜே.சவங்கன், அமைச்சின் செயலாளர் எம.எம்.ஜீனைட் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(ஒ)

### வீடியோப் படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும், திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில், நோபல் பரிசுபெற்ற ரஷ்ய எழுத்தாளரான பொரிஸ் பாஸ்டர்நாக் எழுதிய 'டாக்டர் ஷிவாகோ' என்ற நாவலை அடிப்படையாகக் கொண்டு டேவிட் லீன் இயக்கிய திரைப்படம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. (எ-ரி)

### இடமாற்றப்பட்டியல் வெளியிடப்பட்டது

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் இணைந்த சேவைகள் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றப்பட்டியல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றங்கள் 2003 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்படும். இந்த இடமாற்றம் தொடர்பான மேன்முறையீடுகளை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

### கட்டாக்காலி நாய் ஒழிப்பு தொடருகின்றது

யாழ்.மாநகராட்சி மன்றத்திற்கு உட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் பணியில் மாநகரசபை தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்.நகர் மற்றும் குருநகர், பாஷையூர், சுண்டுக்குளி, ஈச்சமோட்டை பகுதிகளில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (எ-17)

### குடும்ப புனர்வாழ்வு நிறுவனக்கிளை யாழ்ப்பாணத்திலும்

குருநகர்,நவ.10

கொழும்பில் தலைமையகத்தைக் கொண்டு செயற்படும் குடும்பப் புனர்வாழ்வு நிறுவனம் (FRC) யாழ்.கோயில் வீதியிலுள்ள ஒரு வீட்டில் தனது கிளை ஒன்றைத் திறந்து செயற்படவுள்ளது.

விதவைகளுக்கான உதவித்திட்டம், பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப் பரிசில், இலவச சட்ட ஆலோசனை வழங்கல் ஆகியவற்றை இந்த நிறுவனம் வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (எ-51)

### நுண்ணறிவுச் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் மாகாணப் பாடசாலை ஆசிரியர்களின் ஆக்கங்களை உள்ளடக்கி வெளியிடப்படும் நுண்ணறிவுச் சஞ்சிகைக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

சமூகக்கல்விப் பாடத்துறை ஆசிரியர்கள் இதற்கான ஆக்கங்களைச் சமர்ப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நுண்ணறிவுச் சஞ்சிகை யாழ்ப்பாணத்தில் விரைவில் நடைபெறவுள்ள தேசிய மட்டத்திலான சமூகக்கல்வி பொது அறிவுப்போட்டி பரிசளிப்பு விழாவில் வெளியிடப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு, மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு இதற்கான ஏற்பாடுகளைச்செய்துள்ளது. (எ-11)

## தென்மராட்சியில் புதையுண்டுள்ள

# மிதிவெடிகளை அப்புறப்படுத்த துரிதநடவடிக்கை தேவை!

## பிரதேசசெயலர் தெரிவிப்பு

சாவகச்சேரி,நவ.10

தென்மராட்சிப் பிரதேசத்தில் பரவலாகப் பொதுமக்கள் வாழும் இடங்களில் மிதிவெடிகள், வெடிபொருள்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இவை உயிர் மற்றும் உடல் அவயவங்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளன. எனவே, இவை அனைத்தும் உடனடியாக அப்புறப்படுத்த துரிதநடவடிக்கை முன்னெடுக்கப்படவேண்டும்.

தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் இவ்வாறு கோரினார்.

சரசாலை மத்தி சன சமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்ற 'றொங்கோ' மிதிவெடிகள் மற்றும் வெடிபொருள்கள், மீட்புப் பிரிவினரால் சரசாலைப் பகுதியில் - வெடிபொருள்கள் மீட்கப்பட்ட இடங்கள் பொதுமக்களிடம் கையளிக்கப்படும் நிகழ்வில் தலைமை வகித்து உரைநிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

- அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்:-

தென்மராட்சியில் காணப்படும் வெடி பொருள்கள், மிதிவெடிகள்யாவும் பொதுமக்களின் அவசியம் கருதி உடனடியாக அப்புறப்படுத்தப்படல்வேண்டும்.

இந்தவகையில், மேற்படி பகுதியில் சேவை புரிந்த குழுவினருக்கு மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன் - என்றார்.

சரசாலை கிராம அபிவிருத்திச்சபைத் தலைவர் த.சபாநாயகம் உரை நிகழ்த்துகையில்:-

சரசாலையின் ஒரு பகுதி மட்டுமே வெடிபொருள்கள் அகற்றப்பட்டு பரிசீலிக்கப்பட்டுள்ளது.

இக்கிராமத்தைச் சூழவுள்ள பிரதேசங்களில் வெடிபொருள்கள் முழுமையாக அகற்றப்படவில்லை -

எனவே, கிராமத்தில் ஏனைய பிரதேசங்களில் பெரும்பாலான இடங்களில் வெடிபொருள்கள் காணப்படலாம். அவற்றை மீட்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்- என்றார்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட மிதி வெடிகள் செயற்பாட்டு அலுவலர் எஸ்.மோ.ஆனந்தராசா, யு.என்டிபி. பிரதிநிதி மல்கோன்றியிமர், சரசாலை மத்திய கிராம சேவை அலுவலர் எஸ்.உபேந்திரன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

(எ-31)

## இருபாலை கிழக்கு பாலர் பாடசாலையில்

# தளபாட வசதி இன்றி சிறார்கள் தரையில்!

இருபாலை கிழக்கு வசந்தபுரக் கிராமத்தில் இயங்கிவரும் பாரதி பாலர் பாடசாலை மாணவர்கள் கட்டட வசதி, தளபாட வசதியின்றி பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பாலர் பாடசாலையின் கட்டடம் யுத்த அனர்த்தங்களினால் சேதமுற்றுள்ளது.

தற்போது வசந்தநிலா சனசமூக நிலையக் கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கிவரும் இப்பாலர் பாடசாலைக்கு தளபாடங்கள் இல்லை. சிறார்கள் நிலத்தில் இருந்தே கல்வி பயிலுகின்றனர். (ஐ-180)

# சமூகத்தின் பல்துறை வளர்ச்சியே சனசமூக நிலையங்களின் இலக்கு

## முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர்

சனசமூக நிலையங்கள் சமூக வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடவேண்டும். அதேவேளை சமூக மேம்பாட்டுக்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவேண்டும்.

- இவ்வாறு கூறினார் முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி.

அச்சுவேலி தெற்கு சிவசக்தி சனசமூக நிலையத்தின் கலைவிழா நிகழ்வுகள் ஆசிரியர் க.தவதாசன் தலைமையில் நடைபெற்றன.

இந்த விழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

சனசமூக நிலையங்கள், தினசரிப் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் வாசிப்பதற்கு ஏற்பாடு செய்வதுதான் தமது பணி என எண்ணிவிடக்கூடாது.

சனசமூக நிலையங்கள் கிராமிய மட்டத்தில சமூக முன்னேற்றத்துக்கான ஆக்கப்பணிகளில ஆர்வத்தோடு ஈடுபட்டு உழைக்கவேண்டும்.

கிராமங்களின் வளர்ச்சியில்தான் நாட்டின் முன்னேற்றம் தங்கியுள்ளது. கிராம மட்டத்தில் பல்வேறுவிதமான ஆக்கப்பணிகளை சனசமூக நிலையங்கள் முன்னெடுப்பதன்மூலம் கிராமத்தையும் முன்னேற்றி நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவமுடியும்.

சனசமூக நிலையங்கள் தமது பிரதேச மக்களின் அடிப்படை வசதிகள், கல்வி அபிவிருத்தி, சுகாதாரச் சேவைகள், மக்கள் நலன், பாதுகாப்பு, கலைவளர்ச்சி போன்ற பல நோக்கு வேலைத் திட்டங்களை திட்டமிட்டு நிறைவு செய்ய முன்வரவேண்டும் - என்றார் அவர்.

(எ-11)

## ரீ.ரீ.என். நடத்தவுள்ள

# 'பாடும் ஸ்வரங்கள்' நிகழ்ச்சிக்கு தெரிவுசெய்யப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம்,நவ.10

தமிழ் தொலைக்காட்சி இணையத்தினால் (ரீ.ரீ.என்) குடாநாட்டில் நடத்தப்படவுள்ள 'பாடும் ஸ்வரங்கள்' நிகழ்ச்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவை வருமாறு:-

ஆறுமுகம் ரவிச்சந்திரன், நித்தியானந்தன், சத்தியராஜ், கணேஸ்வரி, நவநீதன், அசோக்குமார், செல்வசலமன், ஜனனி, தீபா, திவ்வியாஞ்சலி, கல்பனா, தவப்பிரியா, இசைஅமுதன், நந்தகுமாரி, மேரிநவரட்ணம், சுஜாகித்தியன்.

எட்வேட்ராசநாயகன், சிவசக்திகரன், கேதீஸ்வரன், ரமணன், தீபா, குகபரன், குமரேஸ், சிவனேசன், ஜென்சன், ரவீந்திரன், கிருபாகரன், நிவேதன், தர்சினி, செல்வராஜா, ரஜீவன், ஜெயக்குமாரி, தர்மினா, தினேஸ்சங்கர், ரஞ்சன், தீபரயினா, பத்மராஜினி.

கார்த்திகா, ஜெயறோகரன், குணசிங்கம், நிரஞ்சன், டயின்சியா, ஜெயபாரதி, சிவசத்தியமோகன், சிவகரன், சுரேஸ்நேசன், ஜெயகாந்தன், கருசியஸ், தாட்சாயினி, சீத்தாராமன், சிவலிங்கம், ஜெறின்ஸ்ரலின்.

பிரசாத், நிரோசன், சத்தியசீலன், வின்சன், கதிர்காமநாதன், கில்டன், டேமியன், வரதராசா, ஜசோதரன், நகு, மோகன், உபேந்திரன், சிலோசனி, கணேஸ்வரி, நவநீதன், தீபா, அரியசிவம், கிருபாகரன், டினேஸ்சங்கர், வெஜின் விஜித்தா, தர்மேந்திரா, கிருஷ்ணானந்தா, விஸ்வச்சந்திரன், விமலனாயா, சத்தியசீலன், தவராஜன் சண்முகராஜா.

இப்போட்டி நிகழ்ச்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள மேற்கண்டவர்களை 021-222 2919 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (எ-4)

### சட்டவிரோத மின்பாவனை அதிகரிப்பு

வலி.கிழக்கு,நவ.10

இருபாலை கிழக்குப் பகுதியில் சட்டவிரோதமாக மின் இணைப்பு பெறுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இருபாலை கிழக்குப் பகுதியான பட்டையடி, வசந்தபுரம் ஆகிய பகுதிகளிலேயே சட்டவிரோதமாகப் பாதுகாப்பற்ற முறையில் மின் இணைப்பு பெறப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஒ-180)

### கடற்புலிகளின் மாவீரர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.10

தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்புலி அணியினர் வடக்கில் மூன்று இடங்களில் இம்முறை மாவீரர் நாள் நிகழ்வுகளை எழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்கும், மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கவும் ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர்.

முல்லைத்தீவு, மன்னார், வடமராட்சி கிழக்கு ஆகிய இடங்களிலேயே இந் நிகழ்ச்சிகளுக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஒ-182)

# YOGI HOME SCIENCE ACADEMY
## X'MAS DEMONSTRATION CLASSES

பண்டிகைக்கால மனையியல் செய்முறை விளக்க வகுப்புகள் 3 நாள்கள் மட்டும்

1. 4 கேக்கலவைகள் - 17.11.2002 மு.ப.11.00 மணி - 3.00 மணிவரை
   (i) Rich Cake (ii) Love Cake (iii) Light Fruit Cake (iv) Eggless Butter Cake
2. 5 Sweets வகைகள் - 19.11.2002 மு.ப.10.00 மணி - 2.00 மணிவரை.
   (i) பால்கோவா (ii) மைசூர்பாகு (iii) பால்மா சொக்லட் (Milk Powder Chocalate) (iv) மாஸ்மெல்லோ (v) ரவாகேசரி
3. கிறிஸ்டல் அழகுப்பொருள் செய்முறை (CRYSTAL ORNAMENTS) 19.11.2002 பி.ப.3.00 மணி - 4.30 மணிவரை.
4. 4பேஸ்றி வகைகள் (PASTRY'S) 24.11.2002 மு.ப.10.00 மணி - 2.00 மணிவரை
   (i) Puff Pastry (ii) Short Crust Pastry Pies (iii) Choux Pastry (iv) Pizza

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் இதில் கலந்து கொள்வோர் முற்கூட்டியே பெயர்களைப் பதிவு செய்யவும்.

தொடர்பு: 75, அம்மன் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)

(10462)


# தகவல் தொழில்நுட்பக் கருத்தரங்கு ஆரம்பமானது

யாழ்ப்பாணம்,நவ.10

டயலொக் ஜி.எஸ்.எம். தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு மற்றும் சக்தி எவ்.எம் ஆகியன இணைந்து நடத்திய தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கு நேற்றுக் காலை 9 மணியளவில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமாகியது.

இக்கருத்தரங்கில் டயலொக் தொலைபேசி பாவனையாளர்கள் உட்பட சுமார் 250 பேர் வரையில் கலந்துகொண்டனர். இணைய வசதி போதாமையினால் தற்பொழுது தமது தொலைபேசிச் சேவையில் சில தடங்கல் உள்ளதாகவும்.

இந்த வசதி அதிகரிக்கப்பட்ட பின்பு சீரான சேவையை வழங்கக் கூடியதாக இருக்கும் என்றும் டயலொக் ஜி.எஸ்.எம் பிரதிநிதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், குடாநாட்டில் மேலும் பல தொலைபேசிக் கோபுரங்களை நிறுவவுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்

நேற்று பிற்பகல் யாழ்.பல்கலைக் கழகத்திலும் இக்கருத்தரங்கு இடம் பெற்றது. இன்று காலை 9.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியிலும், பிற்பகல் 2.00 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் இது தொடர்பான கருத்தரங்கு இடம் பெறும். (எ-10)

# வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்
## 2003ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

01.01.2003 தொடக்கம் 31.12.2003 வரையான காலப்பகுதிக்கு கீழ்க்குறிப்பிடப்படும் விவர கேள்விகள் இரு பிரதிகளில் 20.11.2002ஆம் திகதி காலை 10.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். அதேதினம் நண்பகல் 12.00 மணிக்கு கேள்விப்படிவங்கள் திறக்கப்படும்.

| கேள்வி விவரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் | படிவக் கட்டணம் | பெறுமதி சேர்வரி |
|---|---|---|---|---|
| 1) மரக்கறிச் சந்தை, வல்வெட்டித்துறை. | 44500/- | 1000/- | 100/- | 20/- |
| 2) மீன் சந்தை வல்வெட்டித்துறை (நகராட்சி மன்ற எல்லை முழுவதும் அறவிடலாம்) | 50000/- | 1000/- | 100/- | 20/- |
| 3) மாட்டிறைச்சிக்கடை வல்வெட்டித்துறை. | 33500/- | 500/- | 100/- | 20/- |
| 4) தொண்டமனாறு செல்வச் சந்நிதி. துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம். (முழு வருடமும்) | 75000/- | 1000/- | 100/- | 20/- |

மேற்படி வைப்புப்பணமும் கேள்வி படிவக்கட்டணமும் பணமாக செலுத்தப்படுவதன்பேரில் 18.11.2002 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப்படிவக்கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. எந்தக் கேள்விகளையும் ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண உரிமை உண்டு. மேலதிக விவரங்கள் இந்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
2002.11.05

சு.சந்திரசேகரம்
உப தலைவர்,
நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.

(C/24814)

# வட இலங்கை சங்கீத சபை
## பரீட்சைகள் 2003

வடஇலங்கை சங்கீத சபையின் 2003 ஆம் ஆண்டுப் பரீட்சைகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் 2002.11.11 முதல் விற்பனைக்கு வரும். விண்ணப்ப முடிவு திகதி 2003.01.06. விண்ணப்பப் படிவம் ஒன்றின் விலை அறிவுறுத்தல் பிரதியுடன் ரூபா இருபத்தைந்து. (25/-)

விண்ணப்பப் படிவத்தைத் தபால்மூலம் பெற விரும்புவோர் ரூபா 25/- பெறுமதியான காசுக்கட்டளை (மணி ஓடர்) உடன் ரூபா 4.50 பெறுமதியான தபாற்தலை ஒட்டிய சொந்த முகவரி எழுதப்பட்ட நீள் (10.செ.மீ. 22.செ.மீ) கடித உறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தேர்வு நாடிகள்,
வட இலங்கை சங்கீத சபை,
யாழ் வலய கல்விப் பணிமனை, செம்மணி வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் இடத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

வட இலங்கை சங்கீத சபை,
யாழ். வலய கல்விப் பணிமனை, யாழ்ப்பாணம்.

(C-24815)


# வீடு உடனடி விற்பனை

இல.54/5, பாண்டியன் தாழ்வு, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
இரண்டு பரப்பு, 3 அறை வீடு, நாற்புறம் மதிற்சுவர், கிணறு வசதி உண்டு. கூடிய விலைக் கேள்விக்கு உடன் வழங்கப்படும்.

தொடர்பு:
Mr.A.Chellapah,
G - 2, Government Flats,
Bambalapitiya, Colombo - 4. Tel: 591698.

(C/24801)


# துயர் பகிர்கின்றோம்

உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த

## திருமதி நாகலட்சுமி அம்மா குகதாசக் குருக்கள்

அவர்கள் கடந்த 05.11.2002இல் காலமானார் என்ற செய்தியை அறிந்து நாம் அனைவரும் அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவுத்துயரில் மூழ்கியிருக்கும் எமது ஆலய பிரதம குருவும் அவரது அன்புக் கணவருமான சிவஸ்ரீ க.குகதாசக் குருக்கள் அவர்களுக்கும் குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அடியார்களும், பரிபாலன சபையினரும்,
அல்வாய் வடக்கு அரசடி விநாயகர் ஆலயம்.

(10468)





ஆயுள் முழுவதும் நிலைக்கும தரம நாடுங்கள்

கனவுகள் சிதறுவதையும், போட்ட முதல் பறிபோவதையும் எவரும் விரும்பமாட்டார்கள். சொற்ப பண வித்தியாசம் பார்த்து உயர்ந்த தரத்தை இழந்துவிடாதீர்கள்

SLS சான்றிதழ் கொண்ட அம்ட்ராட் சீமெந்து கொங்கிரீட் படிகைகள் ஏற்றுமதித் தரம் மிக்கவை. உயர்தரத்தைக் கைவிடலாமா?

சிறந்ததையே தேர்ந்தெடுங்கள்



அம்ட்ராட்
சீமெந்து/கொங்கிரீட்
படிகைகள்

விற்பனை அவசரத் தொலைபேசி: 075-558440-1

AMTRAD

120/1 ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை,
நுகேகொடை.
தொலைபேசி: 853216, 820931, 074-408878
பக்ஸ்: 824645
மின்அஞ்சல்: amtrad@sltnet.lk


# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 25 - 04 - 1929



இறப்பு 11 - 11 - 1996

## அமரர் E.R.ஆசீர்வாதம்

(உப அதிபர், யா/நல்லூர் தெற்கு, விக்னேஸ்வரா வித்தியாலயம்)

*"என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"* (யோவான் 11-25)

அன்புத் தெய்வமே! ஆருயிர்த் தந்தாய்!!
ஆண்டுகள் ஆறு மறைந்ததையா!
ஈண்டும் உம் நினைவு மாறாதையா!
உந்தன் ஆன்மா சாந்திபெற
என்றும் இறைவனை வேண்டுகின்றோம்!

இவரது ஆன்ம இளைப்பாற்றிற்காக நாளை (11.11.2002) திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ். புனித மரியாள் (O.L.R.) தேவாலயத்தில் இரங்கற்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

தகவல்:
திருமதி M.J.ஆசீர்வாதம் (மனைவி)
*41, இராசாவின் தோட்டம் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
T.P.021-222-2226 (10466)

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.



விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர்வதற்காக வவுனியாவில் புலிகளிடம் சரணடைந்த இராணுவச் சிப்பாய் (இடது), வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலனையும் படத்தில் காணலாம். (ம)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.10

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு தென்மராட்சிக் கோட்ட அரசியல் பணிமனையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)


இலவச ஆங்கில பாடநெறி
தபால் மூலம்
சரளமாக எழுத, பேச, வாசிக்க
90 நாள்கள் பாடநெறி
Diploma/ Basic English
இப்பாடநெறியானது குறுகிய காலத்தில் விரிவான ஆங்கில அறிவை வீட்டில் இருந்தவாறே கற்றுக்கொள்ளமுடியும். இப்பாட நெறியை கற்றுக்கொள்ள வயதுக் கட்டுப்பாடோ ஆங்கில முன்னறிவோ தேவையில்லை.
பாடநெறிக் கட்டணம் இலவசம்
பாடநெறி முடிவில் Diploma in English சான்றிதழ் வழங்கப்படும்.
மேலதிக விவரங்களுக்கு 3/- பெறுமதியான (4) நான்கு முத்திரைகள் அனுப்பிப் பெற்றுக்கொள்க.
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O.Box: 083, Kandy.
Tel: 077 - 802849 (1046


## சூரன்போர்

காரைநகர்,நவ.10

காரைநகர் கருங்காலி - போசுட்டி முருகமூர்த்தி ஆலயத்தில் இன்று மாலை 4.30 மணிக்கு சூரசங்காரம் இடம்பெறும்.

நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அபிஷேகமும் மாலை 3.30 மணிக்கு திருக்கல்யாணமும் நடைபெறும்.

(எ-73)

☆ ☆ ☆

அரியாலை,நவ.10

நீர்வேலி கந்தசாமி கோவில் கந்த சஷ்டி உற்சவத்தில் இன்று முற்பகல் 11 மணிக்கு வேல் வழங்கும் காட்சியும் மாலை 3மணிக்கு சூரசங்காரமும் இடம்பெறும்.

நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்தோற்சவம் நடைபெறும். (எ-17)

☆ ☆ ☆

கோப்பாய்,நவ.10

கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் இன்று மாலை 5 மணிக்கு சூரசங்காரம் நடைபெறும.

(எ-72)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,நவ.10

புங்குடுதீவு பெருங்காடு கந்த சுவாமி ஆலயத்தில் இன்று மாலை 4 மணிக்கு சூரசங்காரமும் நாளை மாலை 4 மணிக்கு திருகல்யாணமும் நடைபெறவுள்ளது.

(எ-ரி)

# மீட்பு நிதி சான்றிதழை தொலைத்தவர்களுக்கு!

யாழ்ப்பாணம்,நவ.10

தமிழீழ மீட்புநிதிக் கடன் சான்றிதழ்களைத் தவறவிட்டோர் 2002ஆம் ஆண்டு மீட்புநிதி மீளளிப்புப் பட்டியலில் தமது பெயர் தெரிவாகியுள்ளதா என்ற விவரத்தை உறுதிசெய்து கொள்வதற்கான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகளின் நிதித்துறை மேற்கொண்டுள்ளது.

அதற்கான கால அட்டவணை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக அடையாள ஆவணங்களுடன் வந்து தமது பெயர், பட்டியலில் இடம்பெற்றுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கால அட்டவணை விவரம் வருமாறு:-

| நாள் | இடம் | நேரம் |
|---|---|---|
| 12.11.2002 (செவ்வாய்) | அரசியல் துறைச் செயலகம், வடலியடைப்பு. | 8.00 - 11.00 |
| | அரசியல் துறைச் செயலகம், சண்டிலிப்பாய். | 12.00 - 2.00 |
| | சோதி வேம்படி மகளிர் கல்லூரி | 3.30 - 4.30 |
| 13.11.2002 (புதன்) | அரசியல் துறைச் செயலகம், சுன்னாகம். | 8.00 - 10.00 |
| | அரசியல் துறைச் செயலகம், நீர்வேலி. | 11.00 - 1.30 |
| | மங்கையர்க்கரசி மகா வித்தியாலயம் - நல்லூர். | 2.30 - 4.30 |
| 14.11.2002 (வியாழன்) | அரசியல் துறைச் செயலகம், வல்வெட்டித்துறை | 8.00 - 9.30 |
| | அரசியல் துறைச் செயலகம், தம்பசிட்டி. | 10.30 - 1.30 |
| | அரசியல் துறைச் செயலகம், வதிரி - கரவெட்டி. | 2.30 - 4.00 |
| 15.11.2002 (வெள்ளி) | அரசியல் துறைச் செயலகம், கைதடி. | 8.00 - 9.00 |
| | அரசியல் துறைச் செயலகம், சாங்கத்தானை. | 10.00 - 12.30 |
| | அரசியல் துறைச் செயலகம், கொடிகாமம். | 1.30 - 3.00 |
| 16.11.2002 (சனி) | அரசியல் துறைச் செயலகம், வேலணை. | 8.00 - 9.00 |
| | வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம். | 11.00 - 2.30 |
| 17.11.2002 (ஞாயிறு) | மத்திய கல்லூரி, கிளிநொச்சி. | 8.00 - 12.00 |

# காஞ்சிரங்குடா சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கை பக்கச்சார்பானது

## நியாயமான விசாரணை தேவை என்கிறார் சந்திரநேரு

கொழும்பு,நவ.10

காஞ்சிரங்குடாவில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பான விசாரணை அறிக்கைகள் பக்கச் சார்பானவை. இந்தச் சம்பவம் குறித்து மீண்டும் நியாயமான விசாரணை ஒன்றை நடத்த அரசு உத்தரவிட வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த மாதம் காஞ்சிரங்குடாவில பேரணி நடத்திய அப்பாவிப் பொதுமக்கள் மீது விசேட அதிரடிப் படையினர் தாக்குதல் நடத்தி 13 அப்பாவிப் பொதுமக்களைக் கொன்றது தொடர்பான விசாரணை அறிக்கை நேற்று முன்தினம் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தவற்றுக்கு மறுப்புத் தெரிவித்தே அரியநாயகம் சந்திரநேரு விசாரணைகள் நியாயமான முறையில் மீண்டும் இடம்பெற வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் தனது கோரிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

காஞ்சிரங்குடா சம்பவம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை பக்கச்சார்பானது. பொதுமக்கள் இராணுவ முகாமிற்குள் செல்லவில்லை. அவர்களைச் சுட்டுக்கொன்ற இராணுவத்தினர் அவர்களது உடல்களைத் தூக்கிச் சென்று முகாமிற்குள் போட்டனர்.

விசாரணைக்குழுவில் அங்கம் வகித்த விவேகானந்தன் மற்றும் விசாரணைக்குழுவிடம் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தவர்கள் மிரட்டல்களுக்கு உட்பட்டுள்ளார்கள்.

இராணுவத்தினரே இந்த மிரட்டலை விடுத்துள்ளார்கள். எனவே இந்தப் படுகொலை சம்பந்தமான பக்கச்சார்பற்ற விசாரணைகளை அரசு நடத்துதல் அவசியம்.

காஞ்சிரங்குடாவில் உள்ள விசேட அதிரடிப்படையினரின் இராணுவ முகாம் உடன் அகற்றப்பட வேண்டும் எனவும் அவர் தனது கோரிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம-12)


T.Vக்கள் விற்பனைக்கு
21" Sony (model 2197) T.Vக்கள்
உடன் விற்பனைக்கு உண்டு.
புஸ்பா ஸ்ரோர்ஸ்
202, கச்சேரி நல்லூர் வீதி.
யாழ்ப்பாணம். (10472)



நெஞ்சை விட்டகலா
முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 29 - 03 - 1950



மறைவு 10 - 11 - 2001

அமரர் B.M.எட்வேட்
B.Sc.(Hons) Cey., S.L.P.S - 1
(அதிபர், யா/நல்லூர் ஆனந்தா வித்தியாலயம்)

ஆண்டொன்று மறைந்தாலும் ஆறவில்லை எம் சோகம்
கண்முன்னே எப்போதும் எம் முன்னே நிற்கின்றீர்
பேரின்ப வான் வீட்டில் நித்தம் நீர் இளைப்பாற
இறைஞ்சுகின்றோம் இறையோனை இன்புற்று நீர் வாழவே!

133, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம். (10470) - குடும்பத்தினர்.



நிறைஞ்சனாஸ்
சங்கானை
சரத்குமார், ரோஜா நடித்த
சின்னத்துரை
காட்சிகள்: 11.00, 2.45, 6.00
சனி,ஞாயிறு இரவு 9.45 மட்டும்
FINAL FIGHT
(C/24616)

ராஜா யாழ்ப்பாணம்.
அஜித் (இருவேடங்களில்) மீனா நடித்த
வில்லன்
(ரீலஸ்)

கா.நே.: 10.30, 2.30, 6.30 (புதிய நேரம்)
விசேட காட்சி: 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
குணால், ... அனிதா, நம்பியார் நடித்த
வருஷமெல்லாம் வசந்தம் (ரீலஸ்)
காட்சிகள்: 11.00, 2.00
வெள்ளி, சனி, ஞாயிறு 6.30 (புதிய நேரம்.)



MEDICAL ACADEMY OF LATVIA
Republic of Latvia (within EU by 2004)
ஜனவரிக்கு மாணவர் சேர்ப்பு
MD Six years, BDS Five years English medium A/L Three Passes including Chemistry& Biology.
Admission Executive Dr.Maruthu Canthaboo Ph.D அவர்கள் யாழ்.நகரில் 11.11.2002 - 17.11.2002 வரை சரோண் லொட்ஜ், 62, வீதானையார் லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் மாணவர் தேர்வை நடத்துகின்றார்.
சந்திக்கும் நேரம் மாலை 6.00 மணி தொடக்கம் 8.00 மணி வரை.
முகவர் கட்டணம் இல்லை
E mail : iusr-uk@btinternet.com (10474)



எல்லா நீர்க்குழாய் வினைஞருக்குமான அழைப்பு
உங்களது நீர்க்குழாய்த் தொழிற் தேர்ச்சியை உயர்த்திக்கொள்ள விரும்புகிறீர்களா?"ஆம்" எனின்
உங்கள் தேர்ச்சியினை உயர்த்திக் கொள்வதற்கு இதுவே சந்தர்ப்பம். எஸ்-லோன் லங்கா (பிரைவேட்) லிமிடட் நிறுவனம்
தேசிய பயிலுநர் கைத்தொழில்பயிற்சி அதிகாரசபையுடன் இணைந்து
நீர்க்குழாய் வினைஞர்கள் தமது நீர்க்குழாய்த் தொழிற்தேர்ச்சியை உயர்த்திக்கொள்வதற்காக
ஒரு நாள் தேர்ச்சி உயர்த்துகை செயலமர்வினை
யாழ்ப்பாணம், இல.37, கண்டி வீதி, பஸ்டியன் ஹோட்டலில்
2002 நவம்பர் 12ஆம் திகதி செவ்வாயன்று காலை 8.00 மணிக்கு நடத்துகிறது.
மேலதிக விவரங்களுக்கு: திரு.V.தியாகராஜா
எஸ்-லோன் யாழ்ப்பாண விநியோக நிலையம், இல.287, ஸ்ரான்லி வீதி.
மேற்படி பயிற்சிப் பட்டறைக்கு வரவிரும்புவோர் முன்கூட்டியே தமது பெயர்களை
ஜெசீபா ஏஜன்சி இல.287, ஸ்ரான்லி வீதியில்
பதிவுசெய்து அனுமதி அட்டையை இலவசமாகப் பெற்றுக்கொள்ளவும்.
T.P.: 021-222 2653
(C-24816)
S-Lon

# நிவாரணத்துக்கு வந்த அரிசியை களஞ்சியப்படுத்தி வைக்க முடிவு

## கொழும்பில் நடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,நவ.10

குடாநாட்டில் உள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கவென எடுத்துவரப்பட்ட 3000 மெற்றிக்தொன் அரிசியையும் மக்களுக்கு விநியோகிக்காமல் களஞ்சியபடுத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் நடந்த உயர் மட்ட மாநாட்டில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட அரிசி மனித பாவனைக்கு உகந்ததல்ல எனத் தெரிவித்து அரிசியின் மாதிரிகளை யாழ். அரச அதிபர் செபத்மநாதன் பிரதமர் அலுவலகத்துக்கு அனுப்பியிருந்தார்.

இதைத் தொடர்ந்து பிரதமர் அலுவலகத்தால் நியமிக்கப்பட்ட குழு ஒன்று யாழ்ப்பாணம் வந்து அரிசியைப் பார்வையிட்டு பரிசோதித்தது.

இந்தக் குழுவின் சிபாரிசை அடுத்து இந்த அரிசியை மக்களுக்கு வழங்குவதை நிறுத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த அரிசியை மூன்று வகையாகப் பிரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திட்டிப் பாவிக்கக்கூடிய அரிசி, தீட்டிப் பாவிக்கமுடியாத அரிசி, மக்கள் பாவனைக்கு உதவாத அரிசி என மூன்று வகையாக அரிசி பிரிக்கப்படும்.

முன்னர் வந்த குழு மீண்டும் இங்கு வந்து அந்த அரிசியை பரிசீலனை செய்தபின் பாவனைக்கு உகந்த அரிசி மட்டும் மக்களுக்கு விநியோகிக்கப்படும்.

இந்த அரிசியை வகைப்படுத்தும் பணியை யாழ். அரச அதிபர் மேற்பார்வையிலான குழு மேற்கொளளும். இதற்கான செலவை அரிசியை வநியோகம் செய்த நிறுவனம் வழங்க இணங்கியுள்ளது. (ம-3)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓதும் நிகழ்வும் செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு ஜனாதிபதி மாளிகையில் சகல மதத் தலைவர்களும் கலந்துகொள்ளும் மத வைபவமும் நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து காலை 10 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் அணிவகுப்பு மரியாதை இடம்பெறும். 10.30 மணிக்கு ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார். (ம)

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரிய சுற்றிவளைப்புத் தேடுதலில் 130பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஒருநாளில் முடிவடைந்த அந்த தேடுதல் நடவடிக்கையில் ஆயிரத்து500 பொலீஸார் ஈடுபடுத்தப்பட்டனர்.(ம)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 25ஆம் திகதி நோர்வேயில்நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் குறித்தும் ஆர்மி டேஜ் அமைச்சர் மிலிந்த மொறகொடவுடன் ஆராய்ந்துள்ளார்.

உடனடிப் பயன்தரக்கூடிய திட்டங்கள் மூலமாக இவ்வாறான முக்கிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவுவதில் அமெரிக்கா உறுதியாக உள்ளது என்றும் -

தற்போதை சமாதான முயற்சிகள் நிரந்தரத் தீர்வு ஒன்றுக்கு வழிவ்குக்கும் என்று நம்புவதாகவும் -

ஆர்மி டேஜ் தெரிவித்ததாக அவரது அமைச்சின் பேச்சாளர் பிரெட்றிக் ஜோன்ஸ் தெரிவித்தார்.

அரசு - புலிகள் இடையேயான சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் ஆர்மி டேஜ் மகிழ்ச்சி தெரிவித்தார். இரு தரப்பும் யுத்தநிறுதத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதில் காட்டிவரும் ஆர்வம் குறித்தும் சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதில் கொண்டுள்ள உறுதிப்பாடு குறித்தும் அவர் திருப்தி வெளியிட்டதாக அமைச்சர் மிலிந்த மொறகொட கூறினார். (ம)

## கைகலப்பில் காய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்குள் நுழைந்த மாணவர்குழு ஒன்று அங்கிருந்தவர்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கியது.

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த முகாமைத்துவ பீடத்தின் மூன்றாம் ஆண்டு மாணவனான எஸ். விதானகே என்பவரே நேற்று உயிரிழந்தார்.

'ராகிங்' நடவடிக்கைக்கு எதிரான குழுவுக்குத் தலைவராக இந்த மாணவன் செயற்பட்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக ஜே.வி.பி. அமைப்பின் உறுப்பினர் ஒருவரை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தின் பின்னணியில் ஜே.வி.பி. ஆதரவு மாணவர் தொழிற்சங்கம் செயற்படுவதாக மாணவர் தரப்பிலிருந்து குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை -

இந்த விவகாரத்தை நாடாளுமன்றத்தில் சமுர்த்தி அமைச்சர் சிறிசேன நேற்று கிளப்பினார். ஆனால், சபாநாயகர் அந்த விவகாரத்தை விவாதிக்க மறுத்துவிட்டார்.

எதிர்க்கட்சிகளான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பி.யும் இந்த விவகாரத்தை நாடாளுமன்றத்தில் விவாதிக்கவேண்டாம் என்று கோரின.

இதனால் சபையில் பெரும் அமளி துமளி ஏற்பட்டது. (ம-3-12)

*(முன்னர் வந்த செய்தி 11ஆம் பக்கத்தில்)*

## சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றுப் பேச்சுக் குறித்த விளக்கத்தை இந்தியத் தலைவர்களுக்கு வழங்கு வதற்காக பீற்றர்ஸன் புதுடில்லி வந்தார்.

வெள்ளியன்று வருகைதந்த அவர் அன்றே இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சின்ஹாவைச் சந்தித்து பேசினார். இந்தியத துணைப் பிரதமர் எல்.கே.அத்வானியையும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிர்தேஷ் மிஸ்ராவையும் பீற்றர்ஸன் நேற்று சந்தித்துப் பேசினார். இலங்கை சமாதான முயற்சிகளின் நகர்வுகள் குறித்து விளக்கினார். (ம)

## சரணடைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்து விலகி விடுதலைப் புலிகளுடன் இணைவதற்காக வவுனியாவில் உள்ள அரசியல்துறை அலுவலகத்தில் கடந்த 7 ஆம் திகதி சரணடைந்திருந்தார்.

விடுதலைப் புலிகள் அவரை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் வவுனியா அலுவலகத்தில் ஒப்படைத்திருந்தனர்.

தம்மை வவுனியா இராணுவத்திடம் ஒப்படைக்கவேண்டாம் என்றும் -

மின்னேரியா படைத்தள அதிகாரியிடம் தம்மை ஒப்படைக்கும்படியும் - அவர் கோரியதை அடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் அவரை மின்னேரியா படைத்தள அதிகாரியிடம் ஒப்படைத்தனர். (ம-3-164)

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றனர்.

மட்டு-அம்பாறை மாவட்ட தளபதி கேணல் கருணா தலைமையிலான விடுதலைப் புலிகளின் குழுவில் வடமுனை கட்டளைத் தளபதி கேணல் தீபன், தென்முனை கட்டளைத் தளபதி கேணல் ஜெயம, திருகோணமலை மாவட்ட தளபதி கேணல் பதுமன், யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்களின் அரசியல்துறைப் பொறுப்பாளர்களான இளம்பரிதி, எழிலன், கௌசல்யன், திலக் மற்றும் கடற்புலிப் பிரமுகர் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

இன்று இடம்பெறும் கூட்டத்தில் நோர்வே தூதர் ஜோன் வெஸ்பேர்க் தலைமையிலான நால்வர் குழுவும்-

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக குழுவின் தலைவர் ஜெனரல் ரொன்ட் புருகோவிட் தலைமையில் மூவர் குழுவும் பங்குபற்றுகின்றது.

ஓமந்தையின் சூனியப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட பந்தலில் இந்தக் கூட்டம் இடம்பெறும்.

அதி உயர் பாதுகாப்பு வலயங்கள், மக்கள் மீள்குடியமர்வு, கண்ணிவெடி அகற்றுதல் போன்ற முக்கிய விடயங்கள் இங்கு ஆராயப்பட்டு முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-3-164)





இதோ! யாழ்.நகரில்
விசேட சலுகை
Winto இன்
சனி, ஞாயிறு தவிர்ந்த மற்றைய நாள்களில்
வெளிநாட்டு அழைப்பு 1 நிமி. 20/=
இல. 6, நவீன சந்தை (மேல்மாடி)
யாழ்ப்பாணம் (மக்கள் வங்கி K.K.S. கிளைக்கு அருகில்)
அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்!
வாடிக்கையாளர்களாயின் கட்டணத்தில் மேலும் சலுகையுண்டு.
அன்பளிப்பு: த.இராசையா அன் சன் T.P:222 3806
23/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
DEALERS OF DUCO & DULUX
(10358)

காத்திருங்கள்! மிக விரைவில்....
Computer Today
தொடர்பு: 01 - 728411, 0777 - 740413
(C-24800)

நலமான வாழ்வுக்கு என்றும் நலந்தருவது
புரோசிங் (PROZINC)
★ இழந்த சக்தியை மீட்டெடுத்தல்.
★ இரத்த உற்பத்தியை அதிகரித்தல்.
★ வளரும் பிள்ளைகளுக்கு பசி உணர்வை தூண்டுதல்.
★ போன்றவற்றில் முக்கிய பங்கு வகிப்பதுடன்
புரோசிங் - அனைத்து விற்றமின்களுடன் அதியுயர் தாவரப் புரதச்சத்து நிறைந்துள்ளதால் சைவப் பிரியர்களுக்கும் உகந்தது.
புரோசிங் - கர்ப்பிணித் தாய்மார், விளையாட்டு வீரர், வளரும் பிள்ளைகள், முதியோர் என முழுக் குடும்பத்தினருக்கும் ஏற்ற சிறந்த பானம்.
புரோசிங் - தற்போது யாழ்.நகரின் அனைத்து மருந்தகங்களிலும் கிடைக்கப்பெறும்.
தொடர்புகளுக்கு :
JEGAN PHARMACY - யாழ். நகர். Tel: 222 3191
ARKEM - கொழும்பு. Tel: 470290, 071-341956
(C-24530)

MARBLES FLOOR POLISHING
SERVICES
EUROPEAN STYLE
மாபிள்ஸ் நிலங்கள் மினுக்கும் சேவை
பழைய ரெறாசோ நிலங்களையும் ஏனைய நிலங்களையும் ஐரோப்பிய முறைப்படி மெஷின்மூலம் மினுக்கி புது மெருகூட்டி அழகாக்கிட நாடுங்கள்:
மாபிள்ஸ்
42, நவீன சந்தை, யாழ்ப்பாணம். T.P.: 222 2328
தொல்புரம், சுழிபுரம். T.P.: 222 5286
நாம் முன்னர் வேலைசெய்த நிலங்களுக்குக் கழிவு உண்டு.
புதிதாகப் போடும் ரெறாசோ வர்ண வேலைகளுக்கு ஓடர் எடுக்கப்படும். (C/24670)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.11.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.